# எஸ்.பொ.அறிக்கை

இளம்பிறை இலக்கிய வட்டம் சார்பாக, மாண்புமிகு
செ. குமாரசூரியர் தலைமையில், ஹோட்டல்
சமுத்திராவில் நடைபெற்ற அரங்கேற்ற
விழாவில் சமர்ப்பிக்கப்பட்டது.

இளம்பிறை எம். ஏ. றஹ்மான்
எழுதிய

திருக்கடைக் காப்பு

இணைந்த பதிப்பு

[redacted]

31. 10. 1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். பொ.

# அறிக்கை

இளம்பிறை
இலக்கிய வட்ட
அநுசரணையுடன்

அரசு
வெளியீடு
பிரசுரித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ilampirai Literary Circle

# இளம்பிறை இலக்கிய வட்டம்

President: R. BALAKRISHNAN B. Sc.
General Secretary: MISS. PATRICIA M. FERNANDO
Treasurer: S. PONNUTHURAI B. A.
Organizing Executive: M. A. RAHMAN

A treatise written by S. Ponnuthurai at the request of a number of literary associations and presented on behalf of the Ilampirai Literary Circle at the Arangetram inaugurated at Hotel Samudra on 31. 10. '70 by the Hon'ble S. S. Kulatilleka (Minister of Cultural Affairs) and presided over by Hon'ble C. Kumarasurior (Minister of Posts and Telecommunications).

This was sponsored for formal presentation by V. A. Rajaratnam, President of the Mutur Literary Circle and Poet Annal, President of the Kinniya Literary Circle.

**M. A. RAHMAN**

Organizing Executive

இலங்கையிலுள்ள பல்வேறு இலக்கிய நிறுவனங்களின் வேண்டு கோளுக்கிணங்க எஸ். பொன்னுத்துரை அவர்கள் தயாரித்த இந்த அறிக்கை இளம்பிறை இலக்கிய வட்டத்தின் சார்பாக ஹோட்டல் சமுத்ராவில் 31-10-70 அன்று, கலாசார அமைச்சர் மாண்புமிகு எஸ். எஸ். குலதிலக்கா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அரங்கேற்ற விழாவிலே, தபால்-தந்தித் தொடர்புகள் அமைச்சர் மாண்புமிகு செ. குமாரசூரியர் அவர்கள் தலைமையில் வெளியிடப்பட்டது.

மூதூர் இலக்கிய வட்டத் தலைவர் வ. அ. இராசரத்தினம் அவர்களாலும், கிண்ணியா இலக்கிய வட்டத் தலைவர் "அண்ணல்" அவர்களாலும் சம்பிரதாய பூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

எம். ஏ. ரஹ்மான்

அமைப்பு நிர்வாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடு: 28

முதற் பதிப்பு: 31, ஒக்டோபர், 1970

விலை: ரூ. 3-50

# ESPO ARIKKAI

first published in Ceylon
by
m. a. rahman
of arasu publications
&
printed in ceylon by
rainbow printers
231 wolfendhal street
colombo-13

ரெயின்போ பிரிண்டர்ஸ் கொழும்பு-13.

## நுழை வாயில்

**நூறு** பூக்கள் மலரட்டும், நூறு விதச் சிந்தனைகள் முயலட்டும் என்ற கொள்கை, கலைகள் செழித்தோங்குவதை ஊக்கப்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது; நமது நாட்டிலே சோஷலிஸ பண்பாட்டு நிலையைச் செழித்தோங்கச் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. கலையிலே பல்வேறுபட்ட உருவங்களும் பாணிகளும் தாராளமாக அபிவிருத்தி செய்யப்படலாம். கலையின் ஒரு குறிப்பிட்ட பாணியையும் அல்லது சிந்தனை வகையையும் வற்புறுத்தி, இன்னொரு வகையைத் தடை செய்வதற்கும் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவது கலையின் வளர்ச்சிக்குக் குந்தகமானது என நாம் நினைக்கின்றோம். கலை சார்ந்த வட்டங்களிலே நடாத்தப்படும் தாராளமான விவாதத்தின் மூலமும், கலைகளின் நடைமுறைப் பயிற்சியின் மூலமும், கலைகள் சம்பந்தப்பட்ட சரிபிழை பற்றிய பிரச்சினைகள் தீர்வு காணப்படல் வேண்டும். அவை திடுதீர்வான முறையில் தீர்வு காணப்படலாகாது. ஏதாவது சரியானதா அல்லது தவறானதா என்று தெரிந்து தெளிதலுக்குப் பெரும்பாலும் காலக்கூறு ஒன்று தேவைப்படுகின்றது. சரியானதும் நல்லதுமான பொருள்கள், மணமுள்ள மலர்களாக அல்லாமல், நச்சுக் களைகளாகவே முதல் தடவையில் அநேகமாக நோக்கப்படுகின்றன. வேண்டுமென்ற அடக்குதலினாலன்றி, வேறுபாட்டினை அறியும் தன்மைக் குறைவினாலும் புதிய பொருள்களின் வளர்ச்சி தடைப்படுதல் சாலும். எனவேதான், கலைகளிலே சரியான பிழையான பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஒரு நிதானமான மனப்பானமையைக் கையாளுதலும், தாராளமான விவாதத்தினை ஊக்கப்படுத்துதலும், அவசர முடிவுகளைத் தவிர்த்தலும் தக்கது. கலைகளின் வளர்ச்சிக்கு இத்தகைய மனப்பான்மையே உதவக்கூடியது என நாம் நம்புகின்றோம். எது சரியானதோ, அஃது எப்பொழுதும் பிழையானதுடன் நடத்தும் போராட்டம் என்ற ஒழுங்கு முறையிலேயே வளர்கின்றது. உண்மை, நல்லது, அழகு ஆகியன எப்பொழுதும் பொய், தீயது, விகாரமானது ஆகியவற்றுடன் ஜீவித்து, பிற்கூறப்பட்டவற்றுடன் போராடியே வளருகின்றன. "நூறு பூக்கள் மலரட்டும் நூறு விதச் சிந்தனைகள் முயலட்டும்", என்ற கொள்கையை நிறைவேற்றுதல் என்பது, கருத்துவத் துறையில் மார்க்ஸிஸத்தைப் பலவீனப் படுத்தாது, அதனுடைய தலைமை நிலையை வலுப்படுத்தவே உதவும். இயல்பான சூழல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு வெளிப்படுத்தப்படாமலும், தொற்று நோய்களிலிருந்து தடைக்காப்பு அளிக்கப்படாமலும், நல்ல கருத்துக்கள் சேமச் செடிப் பண்ணை வீட்டிலே அதிக சலுகையுடன் பாதுகாக்கப்பட்டால், பிழையானவற்றுடன் மோதி வெற்றிபெற மாட்டாது. எனவேதான், விவாதம் - திறனாய்வு சீர்தூக்கிப் பார்த்தல் ஆகிய வழி முறைகளைக் கையாளுவதினால் மட்டுமே நாம் உண்மையில் சரியான எண்ணங்களை வளர்ப்பதற்கும், பிழையான எண்ணங்களை வெற்றி கொள்வதற்கும், உண்மையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் முடியும். எல்லா வகையான பிழையான எண்ணங்களையும் நாம் கண்டிக்க வேண்டும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இருக்க முடியாது. கண்டிப்பதிலிருந்து விலகி, பிழையான எண்ணங்கள் தடுக்கப்படாது பரம்பி, தமது சந்தையைத் தேடிப் பிடிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பது நிச்சயமாகத் தக்கதன்று. ஆனால், அத்தகைய கண்டனம் கால இடச் சூழல்களைக் கவனிக்காமல் வறட்டுக் கோட்பாட்டையே பற்றி நிற்பதாக இருத்தல் தகாது. இப்பொழுது தேவைப்படுவன விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வும், முழுமையாக மெய்ப்பித்துக்காட்டும் நியாயங்களுமாம். கால இடச் சூழல்களைக் கவனிக்காமல் வறட்டுக் கோட்பாட்டையே பற்றியுள்ள கண்டனம் எதனையும் தீர்த்துவைக்கமாட்டாது.

[The policy of letting a hundred flowers blossom and a hundred schools of thougt contend is designed to promote the flourishing of the arts; it is designed to enable a socialist culture to thrive in our land. Different forms and styles in art can develop freely. We think that it is harmful to the growth of art if administrative measures are used to impose one particular style of art or school of thought and to ban another. Questions of right and wrong in the arts should be settled through free discussion in artistic circles and in the course of practical work in the arts. They should not be settled in summary fashion. A period of trial is often needed to determine whether something is right or wrong. Correct and good things have often at first been looked upon not as fragrant flowers but as poisonous weeds. The growth of new things can also be hindered, not because of deliberate suppression, but because of lack of discerment. That is why we should take a cautious attitude in regard to questions of right and wrong in the arts, encourage free discussion, and avoid hasty conclusions. We believe that, this attitude will facilitate the growth of the arts. What is correct always develops in the course of struggle with what is wrong. The true, the good and the beautiful always exist with the false, the evil and the ugly, and grow in struggle with the latter. Carrying out the policy of "letting a hundred flowers blossom and a hundred schools of thought contend" will not weaken but strengthen the leading position of Marxism in the ideological field. Correct ideas, if pampered in hot-houses without being exposed to the eliments or immunized from disease, will not win out against wrong ones. That is why it is only by employing methods of discussion, criticism and reasoning that we can really foster correct ideas, overcome wrong ideas, and really settle issues. There can be no doubt that we should criticize all kinds of wrong ideas. It certainly would not do to refrain from criticism and look on while wrong ideas spread unchecked and acquire their market. But such criticism should not be doctrinaire. What is needed is scientific analysis and fully convincing arguments. Doctrinaire criticism settles nothing.]

இந்த நுழைவாயிலிலே, கலை-இலக்கியம் பற்றி மாசேதுங் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொகுத்துத் தந்துள்ளேன். 'மா ஓ வாழ்க' என்று அரசியல் அரங்கிலே கோஷம இடுபவர்கள்கூட, இலக்கிய விவகாரங்களிலே மார்க்ஸிஸ சித்தாந்தப் பிடிமானங்களை வசதியாக மறந்துவிடுதல் ஈழத் தமிழில் மலிந்துள்ள ஒரு போக்கு. பொருந்த மறுக்கும் ஆங்கில விமர்சன அளவுகோல்கள் நுழைக்கப்படுகின்றன. மேலும், "நூறு பூக்கள் மலரட்டும்" என்பது இலக்கிய வளர்ச்சிக்குக் குத்தகமானது என உள்ளூரவர்கள் நினைத்து, தாங்களே விளங்கிக் கொள்ளாத ஒரேயொரு பாணியையே, எல்லாப் படைப்பாளிகள் மீதும் திணிக்கும் அறிவு மோசடியும் நடைபெறுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. நேருக்கு நேர் நின்று கருத்துப் பரிவர்த்தனை செய்ய முடியாத கோழைகளாகவும் இருக்கின்றார்கள். இந்நிலையிலேதான், மார்க்ஸிஸ சித்தாந்தங்களிலே வேரூன்றி, ஈழத் தமிழின் சேமமான இலக்கிய வளர்ச்சிக்காக எஸ். பொ. 'நற்போசகு இலக்கியம்' என்ற கோட்பாட்டினை முன் வைத்தார். இக்கோட்பாடு ஈழத்திற்கு அப்பாலும் பயிலப்படுகின்றது. இதற்கு முன்னரும், பின்னரும் இலக்கியம் சம்பந்தமான காத்திரமான கோட்பாடு ஒன்று யாராலும் முன் வைக்கப்படவும் இல்லை. எஸ்.பொ.வின் கருத்துக்கள் சத்தியத்தின் குரலாக, ஈழத் தமிழின் புதிய குரலாக, ஒலிப்பதினால் எதிர்ப்பு அணிகளை முறியடித்துக் கொண்டு இளைய சமுதாயத்தினரின் மனங்களிலே வேர் பாய்ச்சிப் பரவுகின்றன. இன்றைய நிலையில் எஸ்.பொ.வின் நற்போக்கு இலக்கியமே கலங்கரை விளக்கமாகவும் இருக்கின்றது. எனவே, இன்றைய சூழலில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து அவர் சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு விசேட மகத்துவம் இருக்கின்றது. அறிக்கையையும், அதற்கான முன்னீட்டினையும் மூன்றே நாளில் எஸ்.பொ. எழுதி உதவினார். இந்த விரைவு, வெளிப்போக்கான மாற்றங்களுக்கு அப்பாலும், இலக்கியத்தை எதற்கும் மேலாக அவர் நேசிக்கும் பண்பு தோற்றி, அவர் வரித்துள்ள கொள்கைகளின் சத்தியத்தினை நிறுவுகின்றது அவர் நெறிப்படுத்தும் சிந்தனை உலகிற்குள் புகுவது தனித்த அநுபவமாகும்.

**எம். ஏ. ரஹ்மான்**
அரசு வெளியீடு

# முன்னீடு

ஈழத்தின் தமிழ் பேசும் இனங்களுடைய எதிர்காலத்தினைப் பாதிக்கவல்ல முக்கிய பிரச்சினை ஒன்று குறித்து, அண்மையிலே சர்ச்சை ஒன்று எழுந்தது. இந்தச் சர்ச்சைக்குக் கால்கோள் நாட்டிய பெருமை எச். எம். பி. முஹிதீனின் அறிக்கைக்குச் சித்தித்துள்ளது. நம்மைப் பற்றிய முக்கிய பிரச்சினை ஒன்று தொற்றிச் சுய ஆய்வு நடத்துவதற்கான 'விழிப்பு நிலை'யை —அந்த விழிப்பு நிலை எவ்வளவு செயற்கையாக ஏற்படுத்தப்பட்டது என்றாலுங்கூட—ஏற்படுத்தியது என்ற காரணிக்காகவேனும் முஹிதீனின் அறிக்கை வரவேற்கப்படத்தக்க ஒன்றாகும். மேற்படி அறிக்கையை நான் மிகுந்த எல்லைக் கட்டுகளுடனேயே வரவேற்கின்றேன். இதற்கான காரணிகள் பலவேனும், தூலமான காரணிகளை மட்டுமாவது காட்டுதல் பொருந்தும். தென்னகச் சஞ்சிகைகளின் இறக்குமதி சம்பந்தமாக முஹிதீனின் அறிக்கை தரும் புள்ளி விபரங்கள் பல இடங்களிலே வழுக்கள் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன. கட்டுப்பாட்டின் மீது இறக்குமதியாகலாம் என அவர் சிபார்சு செய்யும் பட்டியலை மட்டுமல்ல, அதைத் தொற்றி நிற்பதாக மயல்காட்டும் ஏதுக்களைக்கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றது. இலக்கிய விவகாரங்களிலே கருத்து முரண்பாடு என்பது மிகவும் சங்கையான காரியம். எனவே, முஹிதீனின் அறிக்கையிலே பல அம்சங்களை நிராகரிக்கும் நான், மேற்படி அறிக்கையை எல்லைக்கட்டுடன் வரவேற்றல் முரண்பட்ட செயலன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹிதீனின் அறிக்கை எழுப்பிய சர்ச்சையிலே
ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள், தமிழ்
அரசியல் வாதிகள், தமிழ்ச் சுவைஞர்கள், ஒரு பிரச்சினை
யைத் தொற்றித் தமது பெயர்களைப் பத்திரிகைகளிலே
பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் ஆகிய
நான்கு திறத்தாரும் பரவலாகப் பங்குபற்றியிருந்தார்
கள். இந்தச் சர்ச்சையின் வேகம் இப்பொழுது தூர்ந்து
போய்விட்டது. இது நான் எதிர்பார்த்த ஒன்று ஒரு
வேகத்திலே, எவ்வளவு மழலைத் தனமானவையாக
இருந்தாலுங்கூட" கருத்துக்களை அள்ளிக்கொட்டுவதும்
பின்னர் 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன்
ஆண்டால் என்ன?' என்று சோம்பலை ஓம்புவதும் நம்ம
வர்கள் பண்பு. ஈழத் தமிழர் 'கழுதை தேய்ந்து கட்டெ
றும்பாக' ஆன வரலாற்றிற்கு இந்தப் பண்பு பெரிதும்
உதவியிருக்கின்றது இந்தப் பண்புக்கு மாறாகவும் ஒரு
சிலர் இருக்கிறார்கள் என்பதை நிறுவுவது அல்ல என்
நோக்கம். மாறாக, உணர்ச்சி நிலையிலே வித்தப்படும்
கருத்துக்களிலே உள்ள அஞ்ஞானத்தினை உடனடி
யாகச் சுட்டிக்காட்டினால், எதிர் பார்க்கக் கூடிய பயன்
சோரம் போய்விடக்கூடும். முன்னர் எனக்கு ஏற்பட்ட
அநுபத்திலிருந்து, இந்த உண்மையின் உருவத்தைத்
தெளிய முடிந்தது. எனவே, இப் பிரச்சினை தொற்றிய
'காரம்' வலு இழந்த நிலையிலே, நிதானத்திற்கும்,
ஆக்கபூர்வமான அறிவு யோசனைகளுக்கும் இடமளித்து
இதனை எழுதும் பணியினை மேற்கொண்டேன்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சஞ்
சிகைகளின் மீது விதிக்கப்படும் தடையை அன்றேல்
கட்டுப்பாட்டினை ஒட்டித் தங்களுடைய கலை-இலக்கிய
வாழ்க்கையின் எதிர்காலம் வளமாக அமையலாம்; அன்
றேல் வறுமையுற்றுக் குன்றலாம் என்று நமது எழுத்
தாளர் அங்கலாய்த்துக் கொள்ளுதல் உண்மைக்கு
முரண்பட்டதாக இருந்தாலுங்கூட, அவர்களுடைய



சுபாவத்திற்கு இயல்பான ஒன்றாகும். ஏதேனும்
சர்ச்சை குறித்துப் போர்க்குரல் எழுப்பி கச்சையை
வரிந்து கட்சி சேருவதில் ஈழத் தமிழ் எழுத்தாளர்
உலக எழுத்தாளர்களுக்கே தலைமை தாங்க வல்ல
தகைமையை அடைந்துவிட்டார்கள். ஆனால் நமது
எழுத்தாளர் பங்குபற்றிய பிரச்சினைகள் பெரும்பாலும்
வித்துவச் சர்ச்சைகளாக அமைந்தமை தமிழ்த் தாயின்
அவலப் பேறாகச் சமித்தது. இன்று எழுந்துள்ள பிரச்
சினை அகலமானது; ஆழமானது. எனவே, சர்ச்சையிலே
புகுந்துள்ள போக்கும் சுருதியும் பேதப்பட்டு நிற்றல்
தெளிவு. இந்தப் பிரச்சினை எழுத்தாளர்களை மட்டுமே
பாதிக்கும் ஒன்று என்பது எழுத்தாளர் சிலரின்
தொனியாக அமைந்தது. அது உண்மையின் தற்காமம்
மட்டுமே! எழுத்தாளர்களுடைய எண்ணிக்கையைப்
பார்க்கிலும் பல நூற்றுக் கணக்கான மடங்கு விரிவான
தமிழிலக்கியச் சுவைஞரையும் இப் பிரச்சினை பாதிக்
கின்றது. தமிழ்ச் சுவைஞனுடைய அபிப்பிராயங்கள்
துச்சமானவை, அவை பாமரத்தன்மை வாய்ந்தவை,
அவர்களுக்காகவும் பேசக்கூடிய வழக்குரைஞர்களும்
நாங்களே என எழுத்தாளர் சுவைஞரை அவமதித்தல்
தக்கதன்று. நான் முதலிலே சுவைஞன், அடுத்த பட்ச
மாகவே எழுத்தாளன் என்ற தளத்திலே நின்று பேசு
வதினால், இதனைத் தொட்டுக் காட்டுதல் என் சுதர்ம
மாகவும் விடிந்தது. தமது சுய எழுத்துக்களைத்
தவிர்ந்த ஏனையவற்றை கண்ணெடுத்துப் பார்ப்பது
கூடத் தீட்டு என நினைத்து வாழும் எழுத்தாளர்
பலரை நான் அறிவேன். இதற்கு மாறாக, எழுத்தாளர்
வரிசையிலே சிக்குப்படாத எத்தனையோ
தமிழ்ச் சுவைஞருடைய வாசித்தல் பரப்பு
அகலமானது; ரஸனையின் தளம் ஆழமானது; சிந்தனைத்
தெளிவு சத்தியமானது என்பதை அநுபவ வாயிலாக
உணர்ந்திருக்கின்றேன். இக் கூற்றுக்கு எடுத்துக் காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக ரஸிகர் குழு இணைச் செயளாலர் ஆர். கனகரத்தினம், 'Cooperator' இதழின் ஆசிரியர் ஏ. ஜே. கனகரத்னு ஆகியோரை எழுந்தமானமாகச் சாட்டலாம். மிகக் குறுகலான கோஷங்களை முன் வைத்து, நமது தலைமுறையினர் சிலரின் மனத்தாங்கல்களையும் விரக்திகளையும் பிரீதி செய்யத்தக்க பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கைகளை இயற்றி விடலாம். இதனால் திருப்தியும் அடையலாம். ஆனால் ஈழத்தின் எதிர்காலத் தமிழ் பேசும் இனங்களின் (சைவர்—கத்தோலிக்கர்—கம்யூனிஸ்டுகள்—சிறுபான்மைத் தமிழர்—உயர் ஜாதித் தமிழர்—முஸ்லிம்கள் ஆகிய சகலரும் இதனுள் அடங்குவர்) கலை-இலக்கிய வாழ்க்கைக்கும், அதன் சேமலாபங்களுக்கும் மிகப் பாரதூரமான பிரதிகூல விளைவுகள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ளுதல் நமது புனித பணியாகும்.

எனவேதான், பத்திரிகைத் தடைப் பிரச்சினை ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சாதியின் பிரச்சினை என்று மட்டுங்கொள்ளாது, தமிழ் பேசும் இனங்களின், ஈழத்தையே தாயகமென மானசீகமாக நேசித்து மகிழும் மக்கள் கூட்டத்தினரின்—எண்ணிக்கையால் இந் நாட்டிலே சிறுபான்மையினராகிவிட்ட ஒரு பகுதியினரின்—உயிர்ப்புப் பிரச்சினை என்பதை மனத்தில் இருத்தி, சென்ற காலம்-நிகழ் காலம் ஆகிய தளங்களிலே வேரூன்றி மட்டுமல்லாமல், எதிர்காலச் சுபீட்சத்தையும் தீர்க்கமாகத் தரிசித்து, பொறுப்புணர்ச்சியுடன் அறிவு பூர்வமாக யோசித்து, சத்திய நியாயங்களை முன் வைத்து, நமது நியாயமான உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய சுமையும் நம்மீது அமுக்கப்பட்டுள்ளது என்பதைக் கட்சிப் பாசத்தைத் துறந்த நிலையில் நின்று உணருதல் விரும்பத் தக்கது. 'சோஷலிஸம்' என்ற கோஷம் அரசாங்கத்தின் சார்பாக எழுதப்பட்டா



லும் கூட, மாக்ஸிஸ-லெனினிஸ வாதிகள் இன்று அரசாங்கத்திலே அங்கம் வகித்தாலும் கூட, நமது நாட்டிலே சோஷலிஸ ஆட்சி அமைப்பு நிறுவப்பட்டுவிட்டது என்று எந்தச் சவலைதானும் ஒப்புக் கொள்ள மாட்டான். இன்றைய முற்போக்குச் சிந்தனைகள் விரைவாக்கம் பெற்று, இன்றைய அரசின் தர்க்கரீதியான பரிணாம வளர்ச்சியாக அசலேயான சோஷலிஸ ஆட்சி தோன்றுவதற்கான ஏதுக்களையும் காணோம். எனவே, இன்றுள்ள அரசியலின் தன்மையை யதார்த்தமாக அணுகியே, அரசியல் தட்ப-வெட்ப நிலைகளுக்கு ஏற்ப முடிவுகள் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும். என்னுடைய ஆலோசனைகளை முன் வைக்கும் பொழுது இன்றைய அரசியலின் யதார்த்தம் அவற்றைப் பெரிதும் பாதித்திருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை. அரசியற் பிராணியான மனிதன் இவ்வாறு சிந்தித்துச் செயலாற்றுவதுதான் தக்கதும்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சார்பாக, இந்தியச் சஞ்சிகைகளைத் தடை செய்வது எழுத்தாளர்களை மட்டுமே சம்பந்தப்படுத்தும் பிரச்சினை எனக் கங்கணம் கட்டியவர்கள் கூட, பிறிதொரு உண்மையை மறந்துவிட்டார்கள். தென்னகத் தமிழ் இலக்கியம் ஒரு தனித்துவம், ஈழத் தமிழ் இலக்கியம் ஒரு தனித்துவம் என்ற விவாதத்தை முன் வைத்தவர்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைக்கப்பட்டு, கனவாய்-பழங் கதையாய் மறக்கப்பட்ட தேசீய இலக்கியப் பிரச்சினைக்குப் புத்துயிர்ப்புக் கொடுக்கத் தவறிவிட்டார்கள். இந்தப் புத்துயிர்ப்பின் தடத்திலேதான் இப் பிரச்சினைக்கான நிரந்தரப் பரிகாரம் உண்டு இந்த உண்மையை மறந்ததைக்கூட, 'குறை குடங்கள் தளும்புகின்றன' என்ற நியதியின்பால் நின்று மன்னித்துவிடலாம். ஆனால், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் (அவர்களுட் சிலர் கொழும்பினை நிரந்தர வசிப்பிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகக் கொண்டாலுங்கூட) ஈழத்தில் வாசிக்கும் சகல எழுத்தாளர்களுக்கும், தமிழ்ச் சுவைஞர்களுக்குமாகப் பேசலாம் என்ற உரிமையை எடுத்துக் கொண்டு பேசுவது, ஏனையோருடைய கௌரவத்தை நிந்திக்கும் செயலாகும். கிழக்கிலங்கை வாழ் இலக்கியச் சுவைஞர்கள், மலையகத் தமிழர்கள், தென் மேற்குக் கரையோரத்திலும் தென்னிலங்கையிலும் வாழும் தமிழ்ச் சுவைஞர்கள் ஆகியோருடைய அபிப்பிராயங்கள் உத்தியோக ரீதியாகக் கோரப்படவும் இல்லை, மதிக்கப்படவும் இல்லை. யாழ்ப்பாணத் தமிழருடையவும், இம்முத்திறத்தாருடையவுமான சுவைப்பும், படைப்புமே தமிழிலே உருவாகும் ஈழத்துத் தேசிய இலக்கியத்தினைப் பூரணப்படுத்தும் என்ற உண்மையையும் நம்மவர்கள் உணர்ந்து கொள்ளுதல் தக்கது. இவற்றிலிருந்து தூல வடிவில் ஓர் உண்மை பெறப்படுகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் என்ற சாதியார் இன்றைவரை இந்திய சஞ்சிகைகளைத் தடை செய்வது பற்றி வித்திய கருத்துக்கள் ஈழத்தின் தமிழ்ச் சுவைஞருடைய மிக மிகச் சிறுபான்மையான ஒரு பகுதியினரின் அபிப்பிராயங்களை மட்டுமே பிரதிபலித்திருக்கிறார்கள். இதுவே ஈழத்துத் தமிழ்ச் சுவைஞருடைய குறுக்கு வெட்டு முகத்தின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றது என்று தங்களையும் இதிலே ஒரு முடிவினை எடுக்க வேண்டியவர்களையும் ஒரு வகையில் ஏமாற்ற முயலுதல் அப்பட்டமான அறிவு மோசடியாகும்.

இந்தப் பிரச்சினை குறித்து, இலக்கியப் படைப்பாளிகளை அடுத்து (இவர்களிலே சிலர் கட்சி அரசியல் சார்ந்தே சிந்தித்தார்கள் என்பது வேறு விடயம்), கட்சி அரசியல் பேசுபவர்களே அதிகமாக அபிப்பிராயம் கூறி இருக்கின்றார்கள் இவர்களுள் 'தென்னிந்தியச் சஞ்சிகைகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்படல் வேண்டும்'



என்று கம்யூனிஸ்டுகளும், 'எத்தகைய கட்டுப்பாடும் விதிக்கப்படலாகாது' என்று தமிழரசுக்காரரும் துவந்த யுத்தம் ஒன்றினைப் பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் தோன்றுகின்றது. இவர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் நலனையும் வளர்ச்சியையும் மனத்திற் கொள்ளாது, இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட காரணிகளைத் தொற்றியே வழக்குரைக்கின்றார்கள் என்பதைப் பின்னர் கண்டு தெளியலாம்.

தமிழ்ச் சுவைஞர்களுடைய அபிப்பிராயம் பரவலாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், போதமடைந்த சுவைஞருடைய காத்திரமான அபிப்பிராயம் ஒன்று திரட்டப்படவில்லை. 'ஒரு பிரச்சினையைத் தொற்றித் தமது பெயர்களைப் பத்திரிகைகளிலே பார்க்க' ஆசைப்படும் 'பிட்டிஸ' எழுத்தாளர்களுடைய அபிப்பிராயங்களும், வாசகர்களுடைய அபிப்பிராயங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்து பத்திரிகையின் பக்கங்களை அடைத்துள்ளபடியால் அவற்றிலிருந்து உருப்படியான கருத்துக்கள் எதனையுமே பெறமுடியாது போனமையும் அவப்பேறேயாகும்.

'தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகள் பலவற்றை முற்றாகத் தடை செய்தல் வேண்டும் (இவற்றின் எண்ணிக்கை ஐம்பத்திரண்டு) என்றும், ஆனந்தவிகடன், குமுதம், கலைமகள், மஞ்சரி, அம்புலிமாமா, கலைக்கதிர், தீபம், தாமரை, கல்கண்டு அமுதசுரபி, வானொலி, திட்டம் ஆகிய பன்னிரண்டு பத்திரிகைகள் இறக்குமதியாவதை, இறக்குமதிப் பிரதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதின் மூலம் ஒரு வகைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருதல் வேண்டும் என்பதுதான் முஹிதீன் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் சாரமாகும். இந்த அறிக்கையை அதே உருவத்திலேயோ, அன்றேல் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் மூச்சினைத் திருகாத மாற்றம் பெற்ற கோலத்திலேயோ நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றிய சாத்தியங்களை ஆராய்ந்து சிபார்சு செய்ய வேண்டிய 'சுமை' மாண்புமிகு அமைச்சர் செல்லையா குமாரசூரியருடைய தோள்களிலே சுமத்தப்பட்டிருக்கிறது. 'பழி'யைத் தாம் மட்டுமே சுமக்க விரும்பாத காரணத்தினாலேயோ, அன்றேல் ஜனநாயக ரீதியான அபிப்பிராயங்கள் திரட்டப்பட்டு அதனடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதுதான் தக்கது என அவர் கருதியதினாலேயோ கலை-இலக்கிய-கலாசார அலுவல்கள் சம்பந்தமாகத் தமிழ்ப் பத்திரிகையாளர், எழுத்தாளர், அறிவுத் துறையாளர், கலாசார ஊழியர் அடங்கிய குழு ஒன்றினை நியமித்து அதனுடைய ஆலோசனைகளையும் அமைச்சர் குமாரசூரியர் பெற்றுள்ளார். இவற்றை வைத்துக் கொண்டு அமைச்சர் தமது சிபார்சினை விரைவில் அளிக்க இருக்கின்றார். அதன் அடிப்படையில் அரசு ஒரு முடிவுக்கு வரலாம் எனவும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இப் பிரச்சினை குறித்துப் பலர் பலதரப்பட்ட அபிப்பிராயங்களை மிக விரைவாகவும் சடுதியாகவும், அன்றேல் உணர்ச்சியாகவும் உக்கிரமாகவும் சொல்லித் தீர்த்த பின்னர், பிரச்சினையிலுள்ள சகல வாதப் பிரதிவாதங்களும் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டன என்ற மருள் விரிந்துள்ள நிலையில், இந்த அறிக்கை சில அபிப்பிராயங்களையும், செயல் திட்டங்களையும் முன் வைக்கின்றது. இதிலுள்ள அபிப்பிராயங்கள் அரசின் ஆதரவாளர்களுடைய மனப் போக்கிலே விரும்பத்தகும் மாற்றத்தினை ஏற்படுத்தும் என்றோ, அரசு எடுக்கப் போகும் முடிவினை உருவாக்க உதவும் என்றோ எதிர்பார்க்க இயலாது. அரசின் சக்கரங்கள் அவ்வாறு தான் சுழலுகின்றன. எதிர்பார்த்தலுக்கு மாறாக



அவ்வகையில் ஏதாவது உதவுமானால், இந்நாட்டின் தமிழ் இலக்கிய வளத்திற்குச் சித்திக்கும் பாக்கியமாகவும் அமையலாம் ஆனால், என் பணியில் பிறிதொரு நோக்கும் சங்கமிக்கின்றது. ஈழத் தமிழகத்தின் உயிர்ப்பு மிகு மொழி வளத்தையும், அறிவுத் தளத்தினையும், கலை-இலக்கிய ஆக்கங்களையும், சுவைப்பு-ரஸனைத் தரங்களையும் பெரிதும் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சினை குறித்து நிதான புத்தியுடைய இலக்கியப் படைப்பாளிகளினதும், சுவைஞர்களினதும் கருத்துக்கள் இவை; இவை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட சோக முடிவின் விளைவான சிலுவையைத்தான் பிற்காலத்தவர்கள் சுமக்க நேர்ந்தது என்ற குறிப்பாவது எதிர்கால வரலாற்று மாணாக்கருக்குக் கிடைத்தல் வேண்டும். அவசர புத்தியும் ஆவேச கோலமும் பூண்ட சிலர் இயற்றக்கூடிய பழியைச் சமகாலத் தலைமுறையைச் சேர்ந்த சகலருடைய தலையிலேயும் சுமத்திவிடலாகாது. சமகாலத்தின் சமத்துவ புத்தியுடைய -சமரச நோக்குடையவர்களுடைய கருத்துக்களை மதிப்பதினாலும் இதனை எழுதுகின்றேன். மேலும், பிற காரணிகள் நான்கும் இதனை எழுதும்படி தூண்டின. வெளிப் பார்வைக்குச் சிலவேனும் சுயகட்டியங் கூறும் காரணிகளாகத் தோன்றலாம். எஸ். பொ. என்ற சுய மனிதனுடைய கருத்துக்களே இங்கு முன் வைக்கப்படுகின்றன எனக் கொள்ளுதல் பிசகு. இலக்கியத்திலே 'தனித்துவத்தை' அதிகம் அழுத்துபவன் நான். இந்தத் தனித்துவத்தை சுய சிந்தனைக்கும் தனித்துவப் பாணிக்கும் நான் அளிக்கும் சுயம்புவான அழுத்தம் எனச் சிலர் பிழைபடவும் கருதிவிட்டார்கள். சமூகத் தொடர்புகள் என் அறிவைக் கட்டுப்படுத்துவதினால், சமூகவியல் தாக்கங்களினாலும் என் தனித்துவத்தின் ஒரு பகுதி வனையப்படுகின்றது என்பதைச் சத்தியமாக நம்புபவன் நான். இன்னும் ஒன்று. எழுத்தாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மயோகி அல்லன். அவன் சூன்யத்தில் வாழ்பவன் அல்லன். வளரும் சூழலும், காலப் பின்னணியும் 'தனித்துவ'த்தைத் தாக்குகின்றன. இந்தத் தாக்கங்களையும் உள்ளிணைத்ததும் என் தனித்துவந்தான். மேற்படி தாக்கங்கள் சுயத்தையே பாதிக்கும் பொழுது, சுயத்தின் கருத்துக்களைப் பாதிக்கமாட்டாது என்று சோடிக்க முடியாது அல்லவா? ஆனாலும், தனிமனித வாதத்திலே சொந்த விருப்புவெறுப்புக்களின் கற்பிதங்கள் கோலோச்சுகின்றன அத்தகையவர்கள் பொதுப் பிரச்சினைகளிலேயும் இவற்றைத் திணித்தல் இயல்பானதாகும். தனி மனித வழிபாடை ஏற்றுக்கொள்ளாதவன் நான். எனவே, இந்த அறிக்கையிலே சொந்த விருப்பு வெறுப்புக்களை மனிதனுக்குச் சாத்தியமான வரையிலும் தவிர்த்துள்ளேன். சமுதாயத் தாக்கங்களினால், என்னை அழித்தும், அதன் மூலமே நிலைத்துள்ள தனித்துவத்தின் அபிப்பிராயங்களைத் தெளிதலும் பொருத்தமானதே.

நான் பிறந்து — தவழ்ந்து — வளர்ந்து—வாழ்ந்து மகிழ்வதும், மாண்டு பிடி சாம்பராவதும் இந்த ஈழ மணித் திருநாடே. ஈழ நாட்டைத் தவிர்ந்த பிற எந்த நாட்டையும் தத்துவச் செவிலித் தாய் என்றோ, கலாசாரப் பெரியம்மா என்றோ நினைத்துப் பார்ப்பதுகூடப் பாவம் என்று நினைக்கும் அளவிற்கு இலங்கை நாட்டின் ஒவ்வொரு மணற் குறுணியையும் நான் நேசிக்கின்றேன். இந்த மண்ணின் வளத்தையும், அதன் வளர்ச்சியையும் என் சொந்த வளமும் வளர்ச்சியாகவும் நான் மதிக்கின்றேன். இதன் தேய்வினையும் வீழ்ச்சியையும் என் சொந்தத் தேய்வாகவும் வீழ்ச்சியாகவும் கருதி வியாகூலமடைவேன். இவை என் தனித்துவத்தின் மகத்தான குணங்கள் எனக் கூறக் கூச்சமாக இருக்கின்றது. ஏனெனில், நாட்டுப் பற்றும், சுய கௌரவமும், மனச்சாட்சியுமுள்ள ஒவ்வொருவனிடமும் இவை மண்டிக் கிடக்க வேண்டிய குணங்கள். நாட்டுப் பற்று ஒருவித சம்பாவனை மட்டுமல்ல; கலப்படமற்ற பக்தியுமாகும். அந்த பக்தியிலே சேவிப்பின் பாவமும் லயத்துடன் இசைதல் வேண்டும். ஆனால், அது வெறியாக மாறி விடலாகாது. நாட்டுப் பற்றினை வெறியெனக் கற்பித்து அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய பிரச்சினையிலே உணர்ச்சியைக் கக்கிக் கூத்தாடுவது அறிவு மோசடியான செயலாக மட்டுமல்லாமல், தேச விரோதச் செயலாகவும் கனிந்துவிடுதல் கூடும். பாஸிஸம் போன்ற இயக்கங்கள் இத்தகைய வெறி தொற்றியே எழுந்தன. முதலில் இலங்கையன், இரண்டாவதாகச் சர்வதேசீயப் பட்டாளி, மூன்றாவதாகத் தமிழன் எனக் கொண்டாடுவதிலே நான் மகிழ்கின்றேன். தமிழை மட்டுமே மூலதனமாக வைத்துக் கொண்டு அரசியலும் வியாபாரமும் நடத்துபவர்களுக்கு தமிழுக்கு நான் மூன்றாவது இடத்தினை அளித்தேன் என்பது அபசுரமாகப் படலாம். தமிழுக்கு நான் மூன்றாவது இடம் அளித்தது அதன் மீதுள்ள கட்டித்த பாசத்தினை நிறுவும். முதலில் நாடு, அடுத்தது சமுதாயம் என்ற தொடரிலே குடும்பத்திற்கு மூன்றாவது இடம் அளித்தல் எவ்வளவு பொருந்துமோ, அப்படித்தான் இதுவும். என் மனையாளுடனும், குழந்தைகளுடனும் கொஞ்சிக் கலி தீர்க்க என்னிடமுள்ள மிகப் பெரும் சம்பத்து தமிழ்தான். இக் கருத்துக்களை உங்களுடன் இங்கு இவ்வாறு பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமென்ற இச்சை கனிந்தமைக்கு நாட்டுப் பற்றுத்தான் முதலாவது காரணி. நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்தினைப் பொதுவாகவும், ஈழத் தமிழகத்தின் கலை-இலக்கியச் செழுமையைக் குறிப்பாகவும் பாதிக்கும் ஒரு பிரச்சினை பற்றி என்னுடைய கருத்தினைத் தெளிவாக்காதுவிடின், நாட்டுப் பற்று என்ற பிரக்ஞை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் போதமும் அடைந்த குடிமகன் என்ற கடமையி லிருந்து நான் தவறியவனுமாவேன்.

அடுத்ததாக, என்னை ஓர் இலக்கியச் சுவைஞன் என அறிமுகப்படுத்துவதில் பெருமைப்படுகின்றேன். தரமான இலக்கியம் எந்த மொழியிலே பிறந்திருந்தாலும், எந்தக் காலத்திலே பிறந்திருந்தாலும் அதைச் சுவைப்பதிலே திருப்தி சுகிப்பதுடன், என் அநுபவத்தை விசாலித்தும் மகிழ்கின்றேன். எனவே, ஹோமர் - சேக்ஸ்பியர்- காளிதாசர்-வள்ளுவர்-கம்பர் ஆகிய எல்லோருமே எனக்கு வேண்டியவர்களாகவும் இனியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் மறைந்து எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன! ஆனால், அவர்கள் படைத்து நிலை நிறுத்தியுள்ள இலக்கியங்கள் இன்றும் சுவைக்கின்றன. இவர்கள் இலக்கியம் படைக்கும் பணியினைச் செவ்விதாக இயற்றியமையினாலும் என் இலக்கியச் சுவைப்பின் எல்லைகள் அகலித்திருக்கின்றன என்பதை உன்னி அவர்களை நன்றியறிதலுடன் நேசிக்கின்றேன். டி. எச். லோறன்ஸூம் ஹேமிங்வேயும் ஆங்கிலத்திலும், மாப்பஸானும் எமிலி ஸோலாவும் பிரஞ்சிலும், ஓமர் கயாம் பாரசீகத்திலும், கார்க்கியும் ஷோலக்கோவும் ருஷிய மொழியிலும், அல்பெட்டோ மொறுவியா இத்தாலியிலும், தாகூர் வங்காளத்திலும், காண்டேகர் மராத்தியிலும், தகழி மலையாளத்திலும், பாரதியும், புதுமைப்பித்தனும் தமிழிலும் இலக்கியங்களை ஆக்கித் தந்திருக்கின்றார்கள். இந்த இலங்கியங்கள் தோன்றிய நாட்டின் எல்லைகளோ, மொழிகளோ என் சுவைப்பிற்குத் தடையாக இருந்ததில்லை. கலை-இலக்கியச் சுவையின் உலகமளாவிய பிதுரார்ஜித சொத்தான இலக்கியப் பாரம்பரியத்திற்கு என்னையும் ஒரு வாரிசாக நியமித்துக் கொள்வதிலே மகிழ்ச்சியின் நிறைவினை நுகரும் சுவைஞன் நான். இந்த



உலக முழுதளாவிய என் இலக்கியச் சுவைப்பிற்கு எதிராக யார் எந்த வகையில் நந்தியாகக் குந்தியிருந்தாலும் அதற்கு எதிராகப் போராடும் அணியிலே என்னைப் பிணைத்துக் கொள்வது தக்கது எனக் கருதுபவன் நான். இதனை எழுதுவதற்கு இது பிறிதொரு காரணியாகும்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக எழுத்துலகிலே பணி புரிந்து வருகின்றேன். தமிழ் இலக்கியத்தை என் தரமான படைப்புக்களினால் அணி செய்வதின் மூலம், உலக இலக்கியம் என்ற சங்கப் பலகையிலே ஓர் இடத்தினைப் பெற்றுவிடலாம் என்ற பேராசையை மதமாக வரித்து எழுதிக் கொண்டிருக்கின்றேன். இந்தப் பேராசையின் சித்தித்தலுக்கு என்னையே பலிப் பொருளாக நியமித்துக் கொண்டவனுங்கூட. வள்ளுவன்-கம்பன் -பாரதி ஆகிய தென்னகத்து இலக்கியக் கொடுமுடிகளுக்கு மட்டு மல்லாமல், மார்க்ஸ்-லெனின்-ஸ்டாலின்-மா சே துங்- லீ யூ சாசி, கிம் இல் சுங் போன்ற 'அந்நியர்'களினால் புடமிடப்பட்ட தத்துவங்களுக்கும் என்னை வாரிசாக நியமித்துக் கொண்டு, என் எழுத்துப் பணியை இயற்றுபவன் நான். தென்னகச் சஞ்சிகைகளிலே எழுதிய-எழுதும் புதுமைப்பித்தன், தி. ஜானகிராமன், லா. ச. ரா போன்றவர்களுடைய எழுத்துக்களின் தாக்கம் என் சிறுகதை முயற்சிகளிலே பிரதிகூலப் பலனை ஏற்படுத்தாது நன்மையையே ஏற்படுத்தியது என விசுவாசமாக நம்புபவன் நான். நான் அநுபவித்த அநுகூல இலக்கியச் சூழலிலும் பார்க்கிலும் இன்றும் எவ்வளவோ அபிவிருத்தியடைந்த சூழல் இளைய சமுதாயத்தினரின் இலக்கியப் பணிக்கு உருவாக்கப்படல் வேண்டும் என்பதை என் எழுத்துப் பணியிலும் மேலாக நேசிப்பவன் நான். இந்த அறிக்கையை உங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முன் வைக்கும் துடிப்பிற்கு இது பிறிதொரு காரணியாகும்.

இலங்கையிலுள்ள பல்வேறு இலக்கிய வட்டங்களும், எழுத்தாளர் சங்கங்களும் தென்னகச் சஞ்சிகைகள் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து என்னுடைய அபிப்பிராயங்களை முன் வைத்தல் வேண்டுமென்று வற்புறுத்தி வந்ததுடன், ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்துத் திட்டம் ஒன்றினைத் தயாரித்துத் தரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். பல்வேறு பணிகள் ஒன்றின் பின் ஒன்றாகக் குறுக்கிட உடனடியாக அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது போயிற்று. இந்நிலையில் இளம்பிறை இலக்கிய வட்டத்தினர் தங்களுடைய அறிக்கையை அமைச்சர் குமாரசூரியர் தலைமையில், சமுத்ரா ஹோட்டலில் ஒக்டோபர் திங்கள் 31-ஆம் நாள் பிரகடனப்படுத்துவது என முடிவெடுத்தனர். இளம்பிறை இலக்கிய வட்டம் சமர்ப்பிக்கவிருக்கும் அறிக்கையைத் தயாரிக்கும் தனி அதிகாரம் எனக்கு அளிக்கப்பட்டது. சுயாதீனமான அதிகாரம் வழங்கப்பட்ட போதிலும், இவற்றைத் தயாரித்து எழுதித்தர மூன்றே மூன்று நாள் அவகாசந் தந்தார்கள். இளம்பிறை இலக்கிய வட்டத்தின் இலக்கியப் பணிகள் வேறு என் இலக்கியப் பணிகள் வேறு என பிரித்துப் பார்க்காத அளவுக்கு அவ்வட்டத்திடம் எனக்கு நெருங்கிய ஈடுபாடு உண்டு. எனவே இந்தப் பாசம் இதனை ஒரே மூச்சில் அமர்ந்து எழுதத் தூண்டிய நான்காவது காரணியாக அமைந்தது.

இது வரை தென்னகச் சஞ்சிகைகள் குறித்துத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை பின்வரும் நான்கு கோஷங்களுள் அடக்கலாம்.



## கோஷம் ஒன்று

தமிழகச் சஞ்சிகைகள் இறக்குமதி செய்யப்படலாகாது. அவை முற்றாகத் தடை செய்யப்படல் வேண்டும்.

## கோஷம் இரண்டு

(அ) வயிற்றுப் பசியைத் தீர்க்கும் உணவுக்குத் தடை விதித்தாலும், அறிவுப் பசியைத் தீர்க்கும் நூல்களுக்கும் சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கலாகாது. (ஆ) எனவே, எல்லாச் சஞ்சிகைகளும் முன்போல இறக்குமதி செய்யப்படல் வேண்டும். (இ) தமிழகச் சஞ்சிகைகளின் தங்குதடையற்ற இறக்குமதிக்கு எதிராக எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் தமிழ் விரோத சிங்கள வகுப்பு வாதத்தின் நடவடிக்கைகளே.

## கோஷம் மூன்று

தமிழகச் சஞ்சிகைகளுள் குப்பையானவற்றைத் தடைசெய்து, ஏனையவற்றின் இறக்குமதியை ஒருவித கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருதல் வேண்டும்.

## கோஷம் நான்கு

(அ) தமிழகச் சஞ்சிகைகள் வியாபார ரீதியில் இறக்குமதி செய்வதைத் தடைசெய்தல் வேண்டும். (ஆ) வாசகர்கள் தனிப்பட்ட முறையில், சஞ்சிகைகளுக்குச் சந்தா செலுத்தி அவற்றைப் பெறுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படல் வேண்டும். (இ) சந்தா செலுத்திப் பெறப்படும் சஞ்சிகைகளுக்கு 'பீக்ஸ்' திட்டத்திலிருந்து விலக்கு வழங்கப்படல் வேண்டும். சந்தா செலுத்தி இவற்றைப் பெற விரும்புவோர் அச் சந்தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இலகுவான அடிப்படையில் செலுத்துவதற்கான வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

### கோஷம் ஒன்று

இவற்றுள் கோஷம் ஒன்றினைக் கம்யூனிஸ்ட் எழுத்தாளர் முன்வைத்துள்ளார்கள். கட்சியின் உத்தியோ பற்றுடைய பத்திரிகையான தேசாபிமானி மூலம், இந்தக் கொள்கை பிரகடனப் படுத்தப்படாது இருத்தல் கவனத்திற்குரியது. மாருக, 'சின்னச் சோறு' சமைக்கும் பாணியில் நடத்தப்படும் மாசிகை ஒன்றினையும், 'கோபாவேஷத்துடன்' (இப்படித் தமிழ்தான் அவருக்கு வரும்) குதிக்கும் அதன் ஆசிரியரையும் இந்தக் கோஷத்திற்குத் தலைமை தாங்கும் பணியினை விட்டுள்ளார்கள். இந்தத் தலைமைக்கு ஒரு தகைமை — ஒரு பட்டம்— தேவை என்று நம் தமிழ்க் கம்யூனிஸ்டுகள் நினைப்பதுதான் வேடிக்கையானது. 'புனை கதைத் துறையில் முதன் முதலாகச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர்' என்ற தகைமை அவர்மீது 'சீல்' குத்தப்பட்டிருக்கிறது! (இத்தகைய ஒரு கௌரவம் பழிகாரமானது என்பதை அறிந்தோர் அறிவர் என்பது வேறு விடயம்.) அவரும் இட்ட பணியைத் தன் தலையிலே சுமந்து 'தென்னிந்தியப் பத்திரிகைகள் எல்லாமே தடை செய்யப் படல் வேண்டும்' என்ற கோஷத்தை மூலைக்கு மூலை கத்தி, இப்பொழுது சுருதியைச் சற்றே மாற்றியுள்ளார் எனவும் தெரிகின்றது.

இலக்கிய இயக்கத்தினை நெறிப்படுத்தும் பணியிலே இலங்கைக் கம்யூனிஸ்டுகள் பரிதாபமாகத் தோல்வி அடைந்துவிட்டார்கள். இந்தத் தோல்வியைக் கண்டு மானசீகமாகவும், ஆழமாகவும் கவலைப்படுபவன் நான். எந்தத் தத்துவமாயினும் சுதேசிய நிலைகளுக்கு ஏற்ற சில மாற்றங்களை இன்றியமையாது தழுவிக் கொள்ளுகின்றது. இந்தத் தழுவல் தத்துவத்தை மலினப்படுத்தாது மேலும் வலுவூட்டுகின்றது என்பது என் அபிப்பிராயம். உலகளாவிய கம்யூனிஸ இயக்கங்கள் சுதேசியத் தேவைகளுக்கு ஏற்ப எவ்வாறு மாற்றங்கள் பெற்றன என்ற நிதர்சனம் என் அபிப்பிராயத்திற்கு வலுச் சேர்க்கின்றது. இதனை ஒரு தசாப்தத்திற்கு முன்னரே உணர்ந்து, கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையிலான தமிழ் இலக்கிய இயக்கத்திற்கு ஆக்க பூர்வமான யோசனைகளை முன் வைத்தேன். அத்துடன் பாட்டாளி வர்க்கத்தின் ஆற்றலிலக்கிய எழுத்தாளர்களே இந்த இயக்கத்திற்குத் தலைமைதாங்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினேன். 'முற்போக்கு இலக்கியம்' என்ற கோஷம் காலத்திற்கு முன்னர் வைக்கப்படுகின்றது என எச்சரித்து, 'மக்கள் இலக்கியம்' என்ற கோஷத்தினை முன்வைத்து, அரசியல் போதம் அடையாது இலக்கியத் திளைப்பினுல் ஆற்றல் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களைப் பரந்த அளவிலே ஓர் அணியின் கீழ் திரட்டுதல் வேண்டும் என்ற ஆலோசனையையும் முன்வைத்தேன். இந்த ஆலோசனை யாழ்ப்பாணத்திலே நடந்த எழுத்தாளர் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதற்குத் தீர்மானம் என்ற உருவத்தில் வடிவமும் கொடுக்கப்பட்டது. ஆனுல், கொழும்பில் ஸாகிராக் கல்லூரியிலே கூட்டப்பெற்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளர் மகாநாட்டிலே, இத் தீர்மானம் விவாதத்திற்குக்கூட எடுத்துக் கொள்ளப்படவில்லை! மேற்படி தீர்மானம் வனையப்படுவதற்குக் காலாக இருந்த என்னைச் 'சைத்தான்' என்று கற்பிக்கவும், என் மீது வன்முறை பிரயோகிக்கவும் விழைந்தனர். பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், இப்பொழுது மேற்படி சம்பவத்தை அசைபோட்டுப் பார்க்கும் பொழுது, 'தத்துவம்' என்ற பெயரினுல், தாங்களே விளங்கிக் கொள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாத கோஷத்திலே கம்யூனிஸ்டு எழுத்தாளர் சிலருக்கு ஏற்பட்டிருந்த வக்கிரகாமமே, மேற்படி மகாநாட்டின் பூஜ்ய விளைச்சலைத் தந்தது.

எந்தக் கம்யூனிஸ சித்தாந்தத்திலும் நான் இது வரை படித்துத் தெளியாத ஒரு கொள்கையும் இலக்கியத் துறையில் ஈடுபாடுடையதாகக் காட்டிக் கொள்ளும் கம்யூனிஸ்டுகள் மதமாகக் கடைப்பிடித்து ஒழுவதாகவுந் தோன்றுகின்றது. இலக்கிய இயக்கத்திற்கு ஜாதியினால் உயர்ந்தவர்கள் என்று கணிக்கப்படுபவர்களும், பல்கலைக் கழகப் பட்டதாரிகளும் தலைமை தாங்குதல் வேண்டும் என்ற கொள்கையைத்தான் சுட்டுகின்றேன். க. கைலாசபதியும், கா. சிவத்தம்பியும் கம்யூனிஸ்டுகளின் இலக்கிய இயக்கத்திற்கு தலைமைதாங்கும் தகைமையற்றவர்கள் என்றும் அக்காலத்திலேயே சுட்டிக்காட்டினேன். வீறுர்த்த பாட்டாளி வர்க்கத்தின் ஆற்றல் இலக்கியப் புலமையே மேற்படி இலக்கிய இயக்கத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும் என்று வற்புறுத்தினேன். முதலாளித்துவ நாடுகளிலே பயிலப்படும் சில விமர்சன அளவு கோள்களை வைத்துக் கொண்டு, திறனாய்வு என்று வித்தாரம் காட்டும் இவர்களினால் ஆற்றல் இலக்கிய முனைப்புக்கு உகந்த உயிர்ப்பிணைப் பாய்ச்ச முடியாது என்றும், இவர்களுடைய திறனாய்வுக் கிரியை உண்மையான பாட்டாளி வர்க்கத்து ஆற்றலிலக்கியப் படைப்பாளிகளுடைய மனத்திலே சோர்வு மனப்பான்மையை வளர்க்கும் என்றும், இயக்க ரீதியாகவும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பிணையாது தூவானத்திற்குத் தாவாரத்தில் ஒதுங்கிக் கொண்டதுபோல உறவு பாராட்டும் இவர்கள் இயக்கத்தின் வளர்ச்சியிலும் பார்க்க இயக்கத்தின் உந்துதலினால் தாம் அடையக்கூடிய சுய வளர்ச்சியிலே கண்ணாக இருப்பார்கள் என்றும் என் ஆட்சேபனைக்கான காரணிகளை



விளக்கினேன். என்னுடைய விளக்கம் நிராகரிக்கப்பட்டது மட்டுமல்லாமல், என் விளக்கம் கம்யூனிஸ விரோதச் செயல் என்றும் அக்காலத்திலே திரித்துக் கூறப்பட்டது.

கம்யூனிஸ ஆற்றல் இலக்கியகாரரிலே பலர் வாழ்க்கையின் கீழ் மட்டத்திலிருந்து எழுத்துலகத்திற்கு வந்தவர்கள். அவர்கள் முறையாகத் தமிழைக் கற்காதவர்கள். கம்யூனிஸ வகுப்புகளிலே பெற்ற அரசியற் போதத்தினால் இலக்கிய ஆர்வமும் துளிர்ப்பும் பெற்றவர்களாகவும் இருக்கலாம். மார்க்ஸிம் கோர்க்கி தொடக்கம் இத்தகைய எழுத்தாளர்களைக் கம்யூனிஸ இயக்கம் வளர்த்தும் இருக்கின்றது. இது தக்கதும் முறைமையுமாம். 'மல்லிகை' ஆசிரியர் உட்பட கம்யூனிஸ எழுத்தாளருடைய அணியிலே உள்ள பல ஆற்றலிலக்கியகாரர் என்னிடம் ஞான தீட்சை பெற்றவர்களாகவும். என் அரவணைப்பினாலும் ஆதரவினாலும் எழுத்துலகிற் பிரபலமடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகையவர்களுடைய வளர்ச்சியில், நட்பிற்கு அப்பாற்படவும் நான் அக்கறை காட்டுதல் நியதியாக அமைந்தது. இவர்களுடைய ஆக்கங்களின் தொனிப் பொருள் மிகவும் எல்லைக் கட்டுடையதாக இருந்தது. சாதிப் பிரச்சினை சமன் வர்க்கப் பிரச்சினை என்ற தவறான விளக்கங்களும் புகுந்து கொண்டன. தேசிய இலக்கியத்தின் ஒரு கிளையாக 'மண்வாசனை இலக்கியம்' என்ற கோஷத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலே அக்காலத்தில் சிறுகதைகளை எழுதினேன் அவை எடுத்துக்காட்டுக்களாக அன்று, பின்பற்றத்தக்க மாதிரிகளாக அமையும் எனவும் நம்பினேன். தேசீய இலக்கியப் படைப்பாளி தமது கண்களையும் காதுகளையும் உபயோகித்தல் வேண்டும் என்ற உண்மையினைக் கிரகிக்கப் பண்ணும் இலகுவான உபாயம் இது என்பதுதான் தாற்பரியம். செவிகளின் கூர்மைக்காகப் பிராந்தியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பயிலப்படும் பழகு தமிழ்ச் சொற்களுக்கும், பாமரப்பதங்களுக்கும் அழுத்தம் கொடுக்கலானேன். இது ஓர் உபாயம் அல்லது வழி என்பதை ஏனைய கம்யூனிஸ்ட் படைப்பாளிகள் உணரத் தவறினர். 'கொச்சை' மொழிப் பயிற்சி இலகுவானதாகவுந் தோன்றியிருக்கலாம் தமது பயிற்சி இன்மையை மறைப்பதற்கு இதனைக் கேடயமாக உபயோகிக்க விழைந்தார்கள் என்றால், மன்னித்திருக்கலாம். தமது தமிழ் வசனநடையைப் பயிற்சி மூலம் திருத்திக் கொள்வதிலே அவர்கள் கொண்ட சோம்பலின் காரணமாக இதனைத் தத்துவ நிலைக்கும் உயர்த்தப் பார்த்தனர்.

'கொச்சையான மொழியிலே திருந்திய காவியமயமான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் சாலாது. மொழியும், நடையும் உயரும் பொழுது கருத்தின் செப்பமும் உயருகின்றது. இன்னுமொன்று. சிற்பி உலோகத்திலோ, கல்லிலோ, மரத்திலோ உளி கொண்டு சிற்பத்தைச் செதுக்குகின்றான். உளி என்ற கருவி மட்டுமின்றி பிறிதொரு சாதனமும் சிற்பியின் படைப்பிற்கு உதவுகின்றது. இலக்கியம் என்னும் படைப்புப் பணியிலே கருவியாகவும், சாதனமாகவும் சொற்களே பயன்படுகின்றன. எனவே, சீர்த்தியான இலக்கியப் பணிபுரியும் ஒருவன் சொற்களின் மூச்சினையும் உயிர்ப்பினையும் அறிந்து உபயோகித்தல் வேண்டும். சிற்பம் வெளியை அடிப்படையாகக் கொண்ட கலை. இசை காலத்தை அடிப்படையாகக் கொண்ட கலை. யதார்த்த உலகத்திலே கால-வெளித் தொடர்கள் இருக்கின்றன அல்லவா? இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கலையாகையினால், இலக்கியமும் வெளி - காலத் தொடர்புகளைப் பிரதிபலித்தல் அவசியம். இந்த நியதி திரைப்படங்களுக்கும் இருக்கின்றன. ஆனால், திரைப்படத்திலே வெளி-கால எல்லைகள் நெகிழத் தக்கவையாக இருக்கின்றன. திரைப்படத்திலே வெளி காலத்தின் தன்மையைப் பெறுதலும் சாத்தியமானது. திரைப்படங்களிலே கையாளப்படும் கால உத்திகளை மேனாட்டு இலக்கியங்களிலே முயன்று கையாண்டு வெற்றியும் பெற்றுள்ளார்கள். இவை அனைத்தையும் சொற்களை மட்டுமே கொண்டு எழுத்தாளன் சாதித்துக் காட்ட வேண்டியும் இருக்கின்றது. இதற்றால் இலக்கியப் படைப்பாளி சொற்களை எவ்வளவு நுணுக்கமாகக் கையாளுதல் வேண்டும் என்பது புலனாகும். இத்தகைய தேர்ச்சி மார்க்ஸிஸத்தை மலினப்படுத்த அல்ல, மகிமைப் படுத்தவே உதவும்' என்று இலக்கியப் பணியில் சொற்களுக்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை விளக்கினேன்.

'ஒரு குறிப்பிட்ட நாட்டின் பின்னணியில், அங்கு வாழும் பாத்திரங்களையும், அப்பாத்திரங்களின் அநுபவமான நிகழ்ச்சிகளையும், அவற்றின் பேச்சையும், நடையுடை பாவனைகளையும் கையாளுவதினால் மட்டும் தேசிய இலக்கியம் ஆக்கப்படுதல் சாத்தியமன்று. தேசீய இலக்கியம் என்பது நமது நாட்டிற்கே உரித்தான சிந்தனையினதும் தொனிப் பொருளினதும் தனித்துவ முத்திரை பொறிக்கப்பட்டதாகத் திகழுதல் வேண்டும். சோஷலிஸ யதார்த்த இலக்கிய வாதம் நம் நாட்டின் இன்றைய யதார்த்த நிலைகளுக்கும், அநுபவத்திற்கும் பொருந்தமாட்டாது. அவ்வாறு கோஷம் எழுப்பும் எழுத்தாளர்கள் உண்மையான அநுபவத்தை நேர் நின்று பார்க்கத் தவறுகிறார்கள். சித்தாந்தப் பிடிமானம் என்று தாங்களே விளங்கிக் கொள்ளாத ஒன்றுடன் நடத்தப்படும் 'கண்ணாமூஞ்சி' இதுவாகும். இத்தகைய போக்கு அறிவு சார்ந்தது அன்று; அஞ்ஞானம் சார்ந்ததே. இத்தகைய போக்கு தேசீய இலக்கியம் வளர்ந்தெடுக்கப் படுவதற்குக் குந்தகமானது. கூடுமான அளவு அநுபவத்தைச் சிந்தனையாக மாற்றி, அந்தச் சிந்தனையிலே வேர் பாய்ச்சிய தொனிப் பொருளினை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது இலக்கியம் உண்மையிலேயே பிரதிபலிப்பது சேமமான காரியம். தொனிப் பொருள் என்பது உள்ளடக்கத்தைப் பொறுத்தது மட்டுமே எனக் கற்பித்தலும் பிசகானது. உருவமும் தொனிப் பொருளின் சீர்த்திக்கு மெருகு சேர்க்கின்றது. இலக்கியத்திலே உருவம் உள்ளடக்கம் என்று வகுத்துப் பேசுவது முறைகேடானது. ஒன்றின்றி மற்றதும் இல்லை. தொனிப் பொருளும், இலக்கிய உருவமும் மரபு சார்ந்து எழுதல் இயல்பான நியதியாகவும் இருக்கின்றது. இதனால், நவீன இலக்கியப் படைப்பாளி நமது மரபு நிலையினைத் தெளிவாக அறிதலும் அவசியமாகின்றது. புதுமை என்பது மரபின் மறுமலர்ச்சியே! நமது எழுத்தாளர்கள் ஆக்க இலக்கியங்களின் உருவ அமைப்பிலும் அதிக அக்கறை செலுத்தும்படி வலியுறுத்துவேன். தேசீய இலக்கியம் என்பது நமது இலக்கிய முயற்சிக்கு எல்லைக்கட்டினை விதிப்பது என்ற பொருளிலே விளங்கிக் கொள்ளப்படுதல் தக்கது அன்று. நமது இலக்கியப் பரப்பினையும் உலகளாவிய இலக்கியப் பேரரசுடன் கௌரவமான முறையிலே இணைத்துக் கொள்வதற்காக எடுக்கப்படும், சேதனை பூர்வமான முயற்சியே தேசீய இலக்கியமாகும் என்று தேசீய இலக்கியத்திற்கான என் விளக்கங்களைத் தெளிவாக முன்வைத்தேன்.

என் விளக்கங்களை அப்பொழுது விளங்கிக்கொள்ள முடியாத கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். இலக்கியப் பணிக்கு அப்பாற்பட்ட காரணிகளைத் தொற்றி விளங்கிக் கொள்ள மறுத்தவர்களும் இருக்கிறார்கள். 'உருவவாதி, தனி நபர் வழிபாட்டிற்கு அடிகோலுகின்றான். மரபு பேசும் பண்டிதத்திற்கு வழக்குரைக்கின்றான்' என்று குரல் எழுப்பி, எனக்கு எதிராக அணி திரட்டி, கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்து என்னை விரட்டியடிக்கும் தொண்டிலே முழுமூச்சாக ஈடுபட்



டார்கள். எண்ணிக்கையின் அசுரத்தை வைத்துக் கொண்டு அதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

தனிப்பட்ட விரோதங்களுக்காகப் பழிவாங்கப்பட்ட போதிலும், நான் முன் வைத்த கொள்கைகள் சரியானவை என்பதைச் சத்தியமாகவே நம்பிய காரணத்தினால், பிற்போக்குவாதிகளுடன் சேரவோ, அவர்களது கைக்கூலியாக மாறவோ என் மனச்சாட்சி இடம் தரவில்லை. கொள்கையில் வைத்திருந்த கட்டித்த பிடிமானமும், ஈழத் தமிழ் இலக்கியத்தின் தேசீயத் தனித்தன்மை நிறுவும் பாதையிலேதான் நமது இலக்கியத்தின் வளம் அமைந்திருக்கின்றது என்ற நம்பிக்கையும் சற்றேனும் தளரவில்லை. உண்மையான, முற்போக்கான, தேசீயத் தன்மை வாய்ந்த இலக்கியத்திற்கான கொள்கைப் பிடகடனத்தைச் செய்ய வேண்டிய சுமையைத் தன்னந் தனியாகச் சுமந்தேன். 'முற்போக்கு' என்ற 'லேபள்' மட்டுமே தேவை என்பவர்களுடைய அறியாமையையும், உணர்ச்சியையும் மதித்த காரணத்தினால், 'நற்போக்கு இலக்கியம்' என்ற மகுடத்தில் இலக்கியம் பற்றிய என் கருத்துக்களை முன்வைத்தேன். இவைகளை வாசித்துப் புரிந்து கொள்வதில் மோகம் இல்லாமையினாலோ, அன்றேல் இயல்பான சோம்பல் ஓம்பும் சுபாவத்தின் வசப்பட்டோ, முற்போக்கு இலக்கிய கோஷத்திற்கு எதிரான கோஷத்தினை 'நற்போக்கு இலக்கியம்' என்ற மகுடத்தில் வைத்துவிட்டேன் என்ற மருட்சியே அடைந்தனர்.

இன்னும் பிறிதொரு வழுவினையும் அவர்கள் இயற்றி வருகின்றார்கள். யாழ்ப்பாணத்துத் தமிழ் எழுத்தாளர்களே ஈழம் பூராகவும் உள்ள இலக்கியப் படைப்பாளர் சகலருக்கும் பேசவல்ல தகைமையர் என்று ஒரு பிராந்தியத்தின் கருத்தினை ஏனையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் திணிக்க முயலுவதாகும். இந்தப் போக்கிற்கு கம்யூனிஸ்டுகளும் விதிவிலக்கல்லர். இந்தப் போக்கிலே யாழ்ப்பாணக் கலாசாரத்தின் எல்லைக் கட்டுகளும் புகுந்து கொள்ளுகின்றன. இந்த அவல நிலை குறித்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வருமாறு எழுதினேன்.

'புரட்சி ஓங்குக' என்ற சர்வதேசக் கோஷம் ஒன்றுடன் யாழ்ப்பாணத்திற்கு இடதுசாரி இயக்கம் வந்து சேர்ந்தது. அதன் இலக்கியக் கிளையாக முற்போக்கு இலக்கிய இயக்கந் தோன்றிற்று. இந்த இயக்கம் முற்போக்கு இலக்கியம், தேசீய இலக்கியம், மண்வாசனை இலக்கியம் என்ற சில கோஷங்களை சமயக்கத்தின் தந்திரோபாய நடவடிக்கைகளாக அறிமுகப்படுத்தியது. இக்கோஷங்களை எழுப்பியவர்களால், இக்கோஷங்களை விளங்கக்கூடிய திருட்டாந்தங்களாக அமைய வல்ல இலக்கியங்களைப் படைக்க முடியவில்லை. இந்தக் கோஷங்களின் தாற்பரியங்களை அதை எழுப்பியவர்களாலேயே உய்த்துணர முடியவில்லை என்பதுதான் இந்த இயலாமைக்குக் காரணம். முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலக்கியப் பயிற்சி குறைந்தவர்களாகவும், தனித்துவப் பார்வை இல்லாதவர்களாகவும், இயக்கத்தின் பிரசார பலத்திலே சுய மனித முன்னேற்றம்காண வேண்டும் என்ற அவாவுடையவர்களாகவும் இருந்தமை மட்டுமே இக் கோஷங்களின் தோல்விக்குக் காரணங்களல்ல. இவை தோல்வியைக் கடுகதியிற் கொண்டுவர உதவின. ஆனால், இலக்கிய இயக்கத்திற்கு குருபீடமாக அமைந்த அரசியல் இயக்கமே யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்திற்குள் அமுங்கி விட்டது. அப்படி அமுக்கும் வலிமை யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு உண்டு இதன் காரணமாகத்தான் மத்திய தர வகுப்பைச் சேர்ந்த உயர் சாதி இந்துக்களின் தலைமைப்பீடமே இடதுசாரி இயக்கத்தை வழி நடத்த



வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாதிக் கட்டுப்பாடுகளின் இறுக்கம் வர்க்க முரண்பாடுகளுக்குத் தவறான விளக்கங்கள் கொடுக்கத் தூண்டியது. சக்கிலியனான ஸ்டாலினை ருஷியப் பெருமக்கள் ஒரு வர்க்கத்தின் பெருந்தலைவனாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் யாழ்ப்பாணத்துக் கலாசாரம் இதனைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அனுமதிக்கமாட்டாது! எனவேதான், சிருஷ்டி இலக்கியத்தில் ஓரளவு பயிற்சியுள்ளவர்களும், சாதித் தாழ்வின் சிக்கல் உறுத்த, சிருஷ்டி இலக்கியப் பயிற்சி அற்றவர்களைச் சாதி மேன்மை காரணமாக இலக்கிய இயக்கத்தின் தலைமைப் பீடத்திற்கு உயர்த்த வேண்டியிருந்தது. தலைமைப் பீடம் யாழ்ப்பாணத்திற்கு வெளியே கலாசாரத்தைப் பேண விழைந்த பொழுது, மற்றவர்கள் அப்போக்கிற்கு இசைவாக எழுதினர். இந்த முரண்பாடு முற்போக்கு இலக்கியகாரரின் எழுத்துக்களில் மிகமிக அம்மணமாகத் தெரிகின்றது. இவர்களுடைய சிருஷ்டிகள், தலைமைப்பீடம் இவர்களுக்கு விளக்க முடியாத கோஷங்களை விளங்கிக் கொண்டதான 'பாவலா'வையும், தங்களுடைய சாதியையே தொழிலாளி வர்க்கமாக நிலைநாட்டிவிட வேண்டுமென்ற 'ருங்கி'யையுங் கொண்டு போலியாகி விடுகின்றன. மேலும் இலக்கியப் பயிற்சி அதிகமில்லாத இவர்கள் பிராந்தியத்திற் பயிலப்படும் சில சொற்களை மட்டும் பெயர்த்தெடுத்து ஒட்டு வேலை செய்துவிட்டால், தேசீய இலக்கியம் தோன்றி வீடுமெனத் திரிகரண சுத்தியாகவே நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை இவர்களுடைய படைப்புக்கள் போலியானவை என்பதை நிறுவவே உதவுகின்றது. இலக்கியத்தின் தொனிப் பொருளே ஒரு பிராந்தியத்தின் உயிரைப் பிரதிபலிக்க வல்லது. அந்த உயிர் தனக்கு இசைவான உருவந்தாங்கி இலக்கியமாக உயருகின்றது. இதைக் கூட உணராத தலைப்பீடம், இந்தப் போலிகளுக்கும்

இலக்கிய அந்தஸ்து உண்டு என வாதாடி, தன்னைப் படித்த வர்க்கமாக உயர்த்திக் கொண்டது. மீண்டும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்க முடியாத வேலி நுழைந்து கொண்டது. சிருஷ்டி இலக்கிய ஆற்றலற்ற தலைவர்களுக்கும், எழுத்துப் பயிற்சியில் ஈடுபட்ட பாமர எழுத்தாளர்களுக்கும் இடையில் எழுந்த வேலி. வர்க்க போதத்தை ஊட்டி, சாதிகளை ஒழிக்க வந்த இயக்கம் புதுச் சாதிகளைத் தோற்றுவித்துத் தோற்றது!

கம்யூனிஸ்டுகளின் இலக்கிய இயக்கத்திற்கு கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களுடைய தலைமை குந்தகமானது என்று பத்து ஆண்டுகளுக்கு முன்னரே எச்சரித்தேன். இவர்கள் இருவரும் விரிவுரையாளராகிக் கலாநிதிகளாகி உயர்ந்தமையில் தவறில்லை. ஆனால், கீழ்த்தட்டிலுள்ள எழுத்தாளர்களுடன் பழகுவது கௌரவக் குறைச்சலானது என்ற போக்கினையும், தமது வர்க்கத்தினதும், சாதியினதும் அசலான குணங்களையும் வெளிக்காட்டத் தொடங்கி விட்டார்கள். இப்பொழுது கம்யூனிஸ்டுகளே இதனை மறைமுகமாகவேனும் ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள் போலும் இருப்பினும், எவ்வளவு காலந் தாழ்த்திய விழிப்பு! இந்தப் பத்து ஆண்டுகளுக்கிடையில் புதுப் புனைவு வளமிக்க ஆற்றல் இலக்கியகாரரையோ, அன்றேல் தலைமைப்பீடத்திற்கு ஏற்ற இலக்கியகாரர்களையோ கம்யூனிஸ்டு இலக்கிய இயக்கம் தோற்றுவிக்கத் தவறிவிட்டது. இவற்றை எல்லாம் மூடி மறைப்பது போல, சுயம்புவான கட்சி அரசியல்வாதியான தோழர் வி. பொன்னம்பலத்தை சாகித்திய மண்டலத்தின் தமிழ் உறுப்பினராக்கும் அவதியும் ஏற்பட்டது. தலையிடியைத் தீர்ப்பதற்குத் தலைப்பாகையை மாற்றிய கதைதான்! இன்றும் காலந் தாழ்ந்துவிடவில்லை கம்யூனிஸ்ட் இலக்கிய அணியைச் சேர்ந்தவர்



கள் துணிவுடனும் சத்தியத்துடனும் தமது கோணை நோக்கினை மீள்பார்வை செய்து பார்த்தல் சேமமான இலக்கிய கருமமாக மட்டுமல்லாமல், சமுதாயப் பணியாகவும் அமையும்.

தமிழகச் சஞ்சிகைகள் இறக்குமதியாவதைத் தடை செய்வதற்குக் கம்யூனிஸ்ட் எழுத்தாளர் கற்பிக்கும் காரணிகள் வருமாறு:

1. நமது ஆற்றல் மிக்க எழுத்தாளர்களுக்குத் தென்னகச் சஞ்சிகைகள் மதிப்புத் தர மறுக்கின்றன. அத்தகைய அகம்பாவிகளால் வெளியிடப்படும் சஞ்சிகைகள் தடை செய்யப்படல் வேண்டும்.

2. தென்னகச் சஞ்சிகைகளின் தடையால் உள்ளூர் எழுத்தாளர்களுடைய ஆக்கங்களை நமது தமிழ்ச் சுவைஞர்கள் வாசிக்க முற்படுவார்கள். (அன்றேல், இவ்வளவு காலமும் நம்மூர் எழுத்தாளர்களுடைய எழுத்துக்களைச் சுவைக்க மறுத்த வாசகர்கள் மீது அவை பலவந்தமாகத் திணிக்கப்படும். எனவே, உள்ளூர்த் தமிழ் எழுத்தாளர்களுடைய மதிப்பு சமூகத்திலே உயரும்.

3. உள்ளூர் எழுத்தாளருடைய பிரசுர களம் விரியும். இதனால், எழுத்தாளர்களுடைய வருவாய் உயர வழி சமையும்.

4. ஈழத் தமிழ் வாசகனுடைய ரஸனை தென்னிந்தியக் குப்பைகளின் இறக்குமதியால் கீழ் மட்டத்தை அடைந்துவிட்டது. எனவே, அக் குப்பைகளைத் தடை செய்வதின் மூலம் நமது வாசகனின் ரஸனைத் தளத்தை உயர்த்தி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தமிழகச் சஞ்சிகைகளைத் தடை செய்தால், உள்ளூரில் தரமான சஞ்சிகைகள் தோன்றி வளர்வதற்கான சூழ்நிலை உருவாகும்.

6. 'கல்கி' சுதந்திரா கட்சி அரசியலையும், 'தினமணிக் கதிர்' போன்றன 'சிண்டிக்கேட்' காங்கிரஸ் அரசியலையும் தாங்கி வருகின்றன. இதனால், இவை முதலாளித்துவக் கோட்பாடுகளுக்கு வாழி பாடுகின்கின்றன. இந்நாட்டிலே சோஷலிஸ கருத்துக்களை மலிவிப்பதற்கு விரோதமான அத்தகைய பத்திரிகைகள் தடை செய்யப்படல் வேண்டும்.

இந்தக் காரணிகளிலே பல, எதிர்வாத அணுகுமுறையைச் சார்ந்தன. வெறுப்பு என்பது தனி இயல்புணர்ச்சி அல்ல என்பதை நான் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், தமிழகச் சஞ்சிகைகள் மீதும் அவற்றின் பக்கங்கள் 'ரொப்பும்' எழுத்தாளர்கள் மீதும் பாராட்டப்படும் ஒரு வகைவெறுப்பே இந்தக் காரணிகளின் விளை நிலமாக அமைந்தது என்பதை உணர முடிகின்றது. உணர்ச்சி வெளியீடு (அஃது அம்மணமான பாலுணர்ச்சி வெளியீடாக இருந்தாலுங் கூட) வெளியிட வேண்டுமென்ற நோக்கத்திற்காக மட்டுமன்றி, மற்றவர்களின் எதிர் வினையைப் பொறுத்ததாகவும் அமைகின்றது. இந்த எதிர் வினையைப் பெறாதவிடத்து, மனக் கவலையும் சீற்றமும் ஏற்படுகின்றன. வாசகரிடமும், தென்னகச் சஞ்சிகையாளரிடமும் எதிர்வினையைப் பெறாத தவிப்பும் அதன் விளைவுகளும் இக்காரணியைத் தொற்றி நிற்கின்றன. தன்னறிவுக்கும் நாகரிகத்திற்கும் இடர் விளைவிக்கும் பேய்களே இயல்புணர்ச்சிகள் என்று கத்திய பிராய்டு போல, இவர்களும் தென்னகச் சஞ்சிகைகளைப் பேய்களெனக் கற்பித்து அலறுவதாகவுந் தெரிகின்றது. நொண்டிக் காரணங்கள் கற்பிக்கும்



இவர்களுடைய ஒருவகை நபுஞ்சகப் போக்கினை ஆறுவது காரணி புலப்படுத்துகின்றது. இந்திய சஞ்சிகைகளின் அரசியல் என்றுமே நமது நாட்டின் கட்சி அரசியலைப் பாதித்ததில்லை என்பதைக் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நம் நாட்டில் நிலைத்துள்ள சுதந்திர ஜனநாயகக் கட்சி அரசியல் முறை நிரூபித்துள்ளது. தி.மு.க. அரசியல் ஈழ மண்ணிலே வேர் கொள்ளவில்லை என்ற உண்மையையும் மனத்தில் இருத்திப் பார்த்தால் நிதர்சனம் துலக்கமாகப் புரியும். தென்னிந்தியச் சஞ்சிகைகளினால் ஈழத்தில் முதலாளித்துவம் வளர்ந்து விடும் என ஓலமிடுதல் அறியாமை சார்ந்தது மட்டுமன்றி, கோழைத்தனஞ் சார்ந்ததுங்கூட.

இன்றுமொன்றையும் நாம் தூலமாக அவதானிக்க முடிகிறது. தென்னிந்தியச் சஞ்சிகைத் தடையால் உள்ளூர்த்தமிழ் இலக்கியம் எவ்வாறு சேமமாக வளருதல் சாலும் என்பதற்கான காரணிகள் கற்பிக்கப்படவில்லை. மேலும், உள்ளூரின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான தட்ப-வெட்ப நிலைகள் எவ்வாறு உருவாக்கப்படலாம் என்ற ஆலோசனை குறித்தும் கம்யூனிஸ்ட் எழுத்தாளர் மௌனமே சாதிக்கின்றார்கள்.

இதனையும் நமது கம்யூனிஸ்ட் எழுத்தாளர்கள் இச்சந்தர்ப்பத்திலே அறிந்து கொள்ளக் கடவர். இன்றுள்ள அரசாங்கம் உண்மையான சோஷலிஸ்ட் அரசாங்கமல்ல. முதலாளித்துவத்திற்குச் சற்று நயமான, சுதேசியச் சிறு முதலாளிகளின் நலன்பேணும் ஓர் அமைப்பு என்றுகூட வைத்துக் கொள்ளலாம். வாக்குப் பெட்டிகள் மூலம் இந்திய துணைக் கண்டத்தின் கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய இராஜ்யங்களில் நிறுவப்பட்ட அரசுகள் கவிழ்க்கப்பட்டுவிட்டன. இந்நிலையில், இன்றுள்ள அரசாங்கம் தோல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தால், இதனிலும் பார்க்க முற்போக்கான அரசாங்கம் ஒன்று தோன்றக்கூடும் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் கிடையாது. மாறாக படு பிற்குத்தனமான அரசாங்கம் ஒன்று தோன்றவும் கூடும். ('சேகுவேரா' இயக்கம் அதி தீவிர வலதுசாரி இயக்கம் என்ற உண்மையையும் நாம் மறந்துவிடலாகாது.) எதிர்காலப் பாதிப்புக்களையும் நாம் மனத்திற் கொள்ளுதல் உகந்தது. 1960 ஆம் ஆண்டில் முதன் முறையாக அதிகாரத்தைப் பெற்ற ஸ்ரீமாவோ அரசாங்கம் சில முற்போக்கான சட்டங்களை இயற்றியது. அதற்குப் பின்னர் அதிகாரத்தைப் பெற்ற முதலாளித்துவ அரசாங்கம் இச்சட்டங்களைக்கூட முதலாளித்துவத்தின் நலன்களைப் பேணும் விதத்தில் உபயோகித்தது என்பது அண்மைக் கால அநுபவம். தென்னிந்தியச் சஞ்சிகைகளுக்கு முற்றாகத் தடை விதித்தால், அதனை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு, சோஷலிஸ நாடுகள் எதிலும் இருந்து எத்தகைய பிரசுரங்களும் இறக்குமதி செய்யப்படலாகாது என்று தடை விதிக்குமானால், நமது தத்துவப் பயிர் வளர்வதற்கான உரமும் நீரும் எங்கிருந்து கிடைக்கும்? இவற்றையெல்லாம் நமது கம்யூனிஸ்டு எழுத்தாளர் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்திருப்பார்களேயானால் 'தென்னிந்தியப் பத்திரிகைகளை முற்றாகத் தடை செய்!' என்ற எதிர்வாத அணுகுமுறைக் கோஷத்தை முன் வைக்கக் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்.

## கோஷம் இரண்டு

கோஷம் ஒன்று வட துருவத்திலிருந்து எழுப்பப்படும் கோஷம் என்றால், கோஷம் இரண்டு தென் துருவத்திலிருந்து எழுப்பப்படுகின்றது. தமிழ் வகுப்பு வாதத்தினை ஆதாயமான அரசியல் வியாபார



மாக்கிக் கொண்டவர்களும், அந்தக் கட்சியின் ஆதரவாளர்களுமே இந்தக் கோஷத்தினை முன் வைக்கின்றார்கள். மலையக எழுத்தாளர்களுள் ஒரு பகுதியினர் சுருதியைச் சற்று மாற்றி இதனை ஆதரிக்கின்றார்கள். இதனைக் கலை- இலக்கியப் பிரச்சினை என்றோ, அந்நியச் செலாவணி தொற்றிய பொருளாதாரப் பிரச்சினை என்றோ நோக்காமல், எதிலேயும் 'தனிச் சிங்களப்' பேயைக் கண்டு அலறும் அச்சத்துடன், தமிழகச் சஞ்சிகைகளுக்குத் தடை விதிப்பது என்பது தனிச் சிங்களக் கொள்கையைத் தீவிரமாக அமுல் நடத்தும் நடவடிக்கையாகும் என்ற முடிவுக்குத் தமிழரசார் வந்து விட்டார்கள். 'இது தமிழ் இனத்தை மட்டும் பாதிக்கும் ஒரு பிரச்சினை. கடந்த ஒரு மாமாங்க காலமாகத் தமிழ் பேசும் இனங்கள் நம்மீது நம்பிக்கை வைத்து, நம்மைப் பெரும்பான்மையோரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தன. தமிழ் மக்களுடைய சேமலாபங்களைப் பாதுகாப்பதற்கான குரல் எழுப்பும் அப்புக்காத்தர்களும் நாங்களே!' என்ற ஒரு தொனியும் இவர்களுடைய வாதத்திலே கலந்துள்ளது. அவர்கள் அவ்வப்போது தெரிவித்த அபிப்பிராயங்களின் மூலம் பின்வரும் அச்சங்களைத் தெரிவித்துள்ளார்கள்.

1. தமிழகச் சஞ்சிகைகளுக்குத் தடை விதிப்பதினால் தமிழ்மக்களிடையே உள்ள கலாசாரப் பாலம் துண்டிக்கப்படுகின்றது.

2. அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல், கலை - இலக்கிய ரீதியாகவும் நம்மைச் சிறுபான்மை இனமாக்கத் தனிச்சிங்களவாதிகள் இப்படியொரு திரைமறைவு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

3. தென்னகச் சஞ்சிகைகளைத் தடை செய்யும் முயற்சி அறிவுக்குத் தடைவிதிக்கும் முயற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சி உண்மையிலேயே ஆங்கிலம் கற்ற தமிழ் நடுத்தர வகுப்பாருடைய கட்சியாகும். ஆங்கிலம் கற்ற தமிழ் நடுத்தர வர்க்கத்தினர், தாங்கள் அனுபவிக்கும் சலுகைகளை ஏனையோர் அனுபவிக்கலாகாது என்ற காரணத்திற்காக தமிழ்ப் பாமரர்களுக்குச் சர்வஜன வாக்குரிமை வழங்கப்படுவதை சேர். பொன். இராமநாதன் காலத்திலேயே எதிர்த்தவர்கள். இவர்களுக்கு உண்மையான தமிழ்ப் பற்றோ, தமிழ் இலக்கியத்தினை இந்நாட்டிலே சேமமுற வளர்த்தல் வேண்டுமென்ற கரிசனையோ கிஞ்சித்தும் கிடையாது. மாறாக, இவர்கள் காலம் காலமாக விதேசீயப் பற்றினை வளர்க்க முந்தி நின்றார்கள். தமிழருடைய நீண்ட சோக வரலாற்றினை மூடி மறைப்பதற்குத் 'தமிழ் உணர்ச்சி' என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் அசத்திய வழியைப் பின்பற்றுகிறார்கள். இவை உக்கிரம் நிறைந்த, குற்றம் சாட்டும் தொனியில் அமைந்துள்ள கூற்றாகத் தோன்றக்கூடும். இதனைச் சற்று விளக்குதல் பொருந்தும்.

தமிழ் மக்களுடைய கலாசாரப் பாலம் துண்டிக்கப்பட்டு விடும் என்று அலறும் தமிழரசுத் தலைவர்கள், இந்தக் கலாசாரப் பரிவர்த்தனை இரட்டை வழிப் பாதையாகச் சேமமுடன் நடைபெறுவதற்கு இற்றைவரை உருப்படியான எந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று சுய ஆத்ம பரிசோதனை நடத்திப் பார்த்தல் விரும்பத் தக்கது. இந்தியாவையும் இலங்கையையும் ஆங்கிலேயர் 'ஒரு குடையின் கீழ்' ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலேதான் தமிழ் நாட்டிற்கும் ஈழத் தமிழகத்திற்குமிடையில் இருவழி கொண்ட கலாசாரப் பாலம் இருந்தது. இன்னொரு வழியிலே சொல்வதனால், ஈழத் தமிழகம் தென்னகத்தின் பின்னமற்ற அங்கமோ என்ற மயக்க நிலையும் அப்பொழுது நிலவியது. இந்திய மக்களுடைய கலை-இலக்கியப் பாரம்பரியத்தின் சிறப்புக்களை மேனாட்டார் அறியும் வண்ணம் முதன் முதலிற் தொண்டாற்றிய ஆனந்தா குமாரசாமியின் சேவையும் இதனையே நிறுவும். ஆறுமுக நாவலர் சமயப் பணியும் இலக்கியப் பணியும் மேற்கொள்வதற்குச் சென்னையிலும், சிதம்பரத்திலும் களங்கள் அமைத்துக் கொண்டதும் இதனாலேதான். சி. வை. தாமோதரம்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டதாரியாகி, நீதிபதியாகக் கடமையாற்றி, ராவ்பகதூர் பட்டம் பெற்று, பழந்தமிழ் நூல்களைப் பதித்தது எல்லாமே தமிழகத்திலேதான். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதர் பட்டம் பெற்ற முதலாவது இலங்கையரான விபுலானந்த அடிகளாருடைய தமிழ்ச் சேவையை, அவர் மட்டக்களப்பிலே பிறந்தவர் என்ற காரணத்தினால் யாழ்ப்பாண வைதீகத்தனம் சந்தேகக் கண் கொண்டு உதாசீனப்படுத்திய பொழுது, அவர் தமது தமிழ்ச் சேவைக்கு ஏற்ற களமாகத் தமிழகத்தையே தேர்ந்தெடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேராசானாகக் கடமையாற்றிய அவர் இயற்றிய 'மதங்கசூளாமணி' என்ற நூலை மதுரைத் தமிழ்ச் சங்கமும், 'யாழ் நூ'லைக் கரந்தைத் தமிழ்ச் சங்கமும் வெளியிட்டுப் பெருமை தேடிக் கொண்டன. பாரதி-வ. வே. சு. ஐயர்-புதுமைப்பித்தன் ஆகியோருடைய நவீன இலக்கிய முயற்சிகளுக்கு நாங்களும் வாரிசுகள் எனக் கூறி மகிழ ஈழத் தமிழர் பின் நிற்கவில்லை. 'கிராம ஊழியன்,' 'கலைமகள்' போன்ற தென்னகச் சஞ்சிகைகள் நம்மூர் எழுத்தாளர்களுடைய இலக்கிய ஆக்கங்களுக்குச் சரியாசனம் அளிக்க முந்தி நின்றன. ஈழத்துத் தமிழ்க் கதை இலக்கிய முன்னோடிகளான வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோருடைய கதைகளுக்கு தமிழகத்திலே தொகுக்கப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கதைக் கோவைகளில் உரிய இடம் அளிக்கப் பட்டது. பாரதிக்கு விழா எடுப்பதிலும், புதுமைப் பித்தனின் குடும்பத்திற்கு நிதி திரட்டுவதிலும் மகிழ்ந் தோம். பிரதேச வேறுபாடுகள் இற்றுவிட்ட இருவழி கொண்ட கலாசாரப் பாலம் இவ்வாறுதான் அன்று இருந்தது.

'ஒரு குடையின் கீழ்' ஆட்சி செய்த ஆங்கிலேய ருடைய குடியேற்ற நாட்டு ஆட்சி இரு நாடுகளிலும் அஸ்தமிக்கலாயிற்று. 1947 இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. 1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்தது. இந்த அரசியல் மாற்றத்தினுல் தமிழக மும், ஈழத் தமிழகமும் இரு வேறு நாடுகள் என்ற நிலை துலாம்பரமாக நிறுவப்படலாயிற்று.

இந்திய சுதந்திர விடுதலைக்கான தேசிய இயக்கத் தில் தமிழகமும் தன்னை இணைத்துக் கொண்டது. ராஜ்ய மொழியாக தமிழ் அரியணை ஏறும் என்ற உண்மை தெளிவாகியது. புதிய தேவைகளுக்கு ஏற்ற ஊட்டமும் உயிரும் அதற்கு ஊட்டப்படுவதாயிற்று. இவற்றுடன் ஒருவகை எஜமான மனப்பான்மை— உலகத் தமிழுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்ற மனப்பான்மை—தெரிந்தோ தெரியாமலோ தென்ன கத்துப் பத்திரிகையாளருட் பெரும்பான்மையோரிடம் புகுந்துகொண்டது. பெரும்பான்மை என்பது அழுத் தத் தக்கது. கலை-இலக்கியம் இன்று பெரும் பாலும் பெரும் வியாபாரத்துடன் இணைக்கப்பட்டு விட்டது. அந்த வியாபாரத்தின் விளைச்சலான பத்திரிகைகள் ஈழம், மலேஷியா, தென்னுபிரிக்கா போன்ற நாடு களிற் சந்தைகளை விரித்துக்கொள்ளலாயின. தமிழ் இலக்கியத்தின் மொத்த வியாபாரிகளும், விநியோகஸ் தர்களும் தாமே என அவர்கள் நினைக்கலாயினர். இதன் விளைவாக இரட்டை வழி கொண்டதாக இருந்த



கலாசாரப் பாலம் துண்டிக்கப்பட்டது. அங்கிருந்து மட்டுமே கலை-இலக்கியப் படைப்புக்கள் பரம்பலாம் என்ற விதத்தில் குறுகலான ஒற்றை வழிப் பாதை ஏற்படுத்தப்படலாயிற்று.

ஈழத் தமிழகத்தின் அரசியல் தலைமைப்பீடம் ஆங்கில மொழிக்கு வாழி பாடிக் கொண்டிருந்தது. அறிவும் ஆங்கிலமும் இணைந்திருப்பதனுல், ஆங்கிலத்தை விடுத்துச் சுய மொழிகளிலே கற்க முற்படுவது அறி வுக்கே உலைவைப்பதாகும் என நம்பினர். ஆங்கிலம் மட்டுமே விஞ்ஞானம் கற்பிக்க உகந்த மொழி, சுய மொழிகளிலே கற்பிப்பபதால் அதன் தரம் தாழ்ந்து போய்விடும் என்று குரல் வைப்பதிலும் தமிழர்களே முந்தி நின்ருர்கள். ஆங்கிலம் கற்றவர்களுக்கே சமு தாயத்தில் முதலிடம் கொடுத்தார்கள். ஆங்கில அறிவே உயர் பதவிகளுக்கான 'பாஸ் போர்ட்' என வும் நம்பினர். ஈழத் தமிழகத்தின் அரசியற் தலை மைப் பீடம் ஏனைய மக்களின் சுதேசிய உணர்வுகளைப் புரிந்து கொள்ளவும், அவற்றுடன் அநுதாபம் கொள் ளவும் மறுத்தது. 'தங்கள் கீழ்ப்படிவுள்ள ஊழியன்' என்று கையெழுத்து வைப்பதுதான் கௌரவமான தொழில் என்ற நினைப்பினை மத்தியதர வர்க்கத்தினர் ஓம்பலாயினர். ஈழநாடு சுதந்திரம் பெற்று இருபத் திரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட போதிலும், ஆங்கில மொழி மூலம் வயிறு வளர்க்கும் அப்புக் காத்தர்களே தமிழ் மக்களின் அரசியற் தலைமைப் பீடத்தில் அமர்ந்துள்ளனர். 'காலசாரப் பாலம் துண் டிக்கப்பட்டு விடும்' என்ற ஓலம், ஆங்கில தாஸர் களான தமிழர்கள் தமிழ் மொழியின் கலை-இலக்கிய விவகாரங்களில் இயற்றிய கும்பகர்ண உறக்கத்தைத் தான் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு துருவம் என்றால், மறு துருவத்தில் நின்றோர்கள் தமிழை முறையாகப் படித்த தமிழர்கள். வாழும் மொழி காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாறுதல்கள் அடைந்து வருகின்றது. தமிழும் அவ்வாறு தான் வளர்ந்து வந்துள்ளது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலக் கால வகையினானே' என்பது மரபு. தமிழின் மாற்றங்களை எழுதப் புகின் அதுவே ஒரு தனி நூலாக விரியும். வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தின் புதுப்புதுப் பொருள்களைக் குறிப்பதற்குப் போதிய கலைச்சொற்கள் இல்லாத குறையைப் போக்கித் தமிழுக்கு ஜீவத்துவம் ஊட்ட வல்ல நடவடிக்கையை எடுக்க உள்ளூர்த் 'தமிழறிஞர்கள்' வக்கிர புத்தியுடன் மறுத்தனர். பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குதல், பண்டைய சொற்களை மீண்டும் வழக்கில் கொண்டு வருதல், பழைய வேர்ச் சொற்களை இணைத்துப் புதுச் சொற்களை ஆக்குதல் ஆகிய மூன்று வழிகளிலே வளர்ச்சிக்கு உகந்த சொற்களை நாம் பெருக்கிக் கொள்ளலாம். ஆங்கில மொழி பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதின் மூலம் துரித வளர்ச்சியும் நற்பயனும் அடைந்தது என்பது வரலாறு. இவற்றை எல்லாம் விடுத்து மரபு என்றும், தமிழ் இலக்கணத்தின் புணரியல் என்றும், ஒரு வகைப் பயம் காட்டி, தமிழுக்குத் தேவையான நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதைத் தடுத்தனர். இதனாலும் ஈழத் தமிழுக்குப் பிரதிகூலமே ஏற்பட்டது.

ஆங்கில தாசர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் தமிழுக்குத் தேவையான ஜீவத்துவத்தை அளிக்கும் பணியினைப் புறக்கணித்த நிலையிலேயும், பொதுமக்களுடைய வாசிப்புப் பழக்கம் பெருகலாயிற்று. இரண்டாவது உலக மகாயுத்த காலத்திலே யுத்தச் செய்தியை அறியும் ஆவலில் வாசிப்புப் பழக்கம் அதிகரித்தது. இலவசக் கல்வி வசதி, தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் ஆகியனவும் வாசிப்புப் பழக்க முடையவர்களுடைய தொகையை அதிகரிக்கச் செய்தது. இந்த வாசிப்புப் பழக்கம் உடையவர்கள் ஜனரஞ்சக இலக்கியத்தினையே பெரும்பாலும் விரும்பிப் படிக்கலாயினர் எனவே, தென்னகத்திலிருந்து வரும் ஜனரஞ்சகப் பத்திரிகைகளுக்கு ஏற்ற வியாபாரச் சந்தையாக ஈழத் தமிழகம் அடிமைப்படலாயிற்று.

ஒரு காலத்தில் 'பெரிய பிரித்தானியாவில் செய்யப்பட்டது' என்று பொறிக்கப்பட்ட பொருள்களே தரமானவை என்று நினைத்துப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள். அது ஆங்கில மோகத்தினால் பிறந்தது. தமது இயலாமையை மறைப்பதற்காக, தமிழ் சஞ்சிகைகளைப் பொறுத்தமட்டிலாவது 'இந்தியாவில் செய்யப்பட்டது' என்றால்தான் தரமானது என்ற ஒரு வகைப் போக்கினைத் தமிழரசார் வளர்த்ததும் அடிமைத் தளையை மேலும் இறுக்கலாயிற்று இந்த அடிமைத் தளையிலிருந்து ஈழத் தமிழ் எவ்வளவு சீக்கிரம் விடுதலை பெறுகிறதோ அவ்வளவிற்குச் சேமமான காரியமே.

தமிழரசுக்காரர்கள் இந்தச் சந்தர்ப்பத்திலே ஓர் உண்மையை உணர்ந்து கொள்ளுதல் — இவ்வளவு காலந்தாழ்த்திய நிலையிலாவது உணர்ந்து கொள்ளுதல்— விரும்பத்தக்கது வெறுந் தமிழுணர்ச்சியினால் மட்டும் தமிழ் மக்களின் வாழ்வையும் வளத்தையும் செழுமைப் படுத்திவிட முடியாது. அவர்கள் பாமர மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் தமிழுணர்ச்சிக் கோஷங்களை முன்வைத்து, தமிழர் என்ற இன உணர்ச்சி அரசியலை வளர்த்த அளவிற்கு, தமது கட்சிக்காரர் மத்தியில் தரம் வாய்ந்த இலக்கியப் படைப்பாளிகளையும் கலைஞர்களையும் தோற்றுவிக்கத் தவறிவிட்டார்கள். தமிழரசுக் கட்சியின் உத்தியோக வெளியீடாகச் 'சுதந்திரன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து கொண்டிருக்கிறது. இப்பத்திரிகையிலே பணியாற்றிய பிரபலமான பத்திரிகையாளர் சகலரும் தமிழரசுக் கட்சியின் கொள்கையை முற்றுக நிராகரித்தவர்கள் என்பது நாடறிந்த உண்மை. இவர்களுட் பெரும்பான்மையோர் தீவிர இடதுசாரிகள். தமிழரசுக் கட்சியின் இந்த அவல நிலைக்குத் தலைமைப் பீடத்தின் ஆங்கில மோகமும், கலை - இலக்கியத் துறையிலே அக்கறை செலுத்தாமையும் காரணிகளெனக் கூறலாம்.

மேலும், தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் ஜனரஞ்சக சஞ்சிகைகளும், மனிதனின் கீழ் உணர்ச்சிகளுக்குத் தீனி போடும் சஞ்சிகைகளும் 'டொன்' கணக்காக அறிவினைக் கொண்டு வந்து இந்த நாட்டிலே கொட்டிக் குவிக்கின்றது என்ற நியாயத்தை எந்தச் சவலைதானும் ஒப்புக்கொள்ள மாட்டான். சிங்கள மக்களுக்கு எதிரான கோஷங்களை முன்வைப்பதனுல் மட்டும், எத்தகைய விமோசனத்தினையும் அடைய முடியாது என்பதைக் கடந்த கால் நூற்றுண்டு வரலாறு நிரூபித்துவிட்டது. சிங்கள மக்கள் மத்தியிலே வகுப்புவாதச் சக்திகளில்லை என்று நான் வக்காலத்து வாங்கவில்லை. வகுப்புவாத சக்திகளை மலினப்படுத்தும் வகையிலே சோஷலிஸ சக்திகளும் சிங்களவர் மத்தியிலே கணிசமான அளவிற்கு வளர்ந்துள்ளன. 'சிங்கள வகுப்புவாதம்' என்ற பூச்சாண்டியைக் காட்டி தமிழ் மக்களின் வகுப்புவாதம் என்ற பேயினை சிருஷ்டிப்பதனுல் ஈற்றில் நட்டக் கணக்கே மிகுதியாகத் தேறும் சுத்த சுயம்புவான சோஷலிஸ ஆட்சியிலேதான் சிறுபான்மை இனங்களினுல் சர்வ கௌரவங்களுடனும் வாழ முடியும். இது கற்பனுவாதமல்ல சோஷலிஸ ஆட்சி மலர்ந்துள்ள நாடுகளின் ஆட்சி அமைப்பிலே வாழும் சிறுபான்மை இனங்கள் சுகிக்கும் கௌரவம் இக்கூற்றினை நிறுவும்.



1947ஆம் ஆண்டில் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் மலைநாட்டிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பேசும் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அந்நாளிலே இடதுசாரிக்கட்சிகளுக்கு ஆதரவு கொடுத்திருப்பார்களேயானுல், இந்நாட்டின் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட வரலாறு வேறு விதத்தில் எழுதப்பட்டிருக்கும். அந்தக் காலத்திலே தமிழ்ப் பிரதிநிதிகள் எடுத்துக் கொண்ட தீர்க்க தரிசனமற்ற முடிவின் சோக விளைவுகளையும் நாம் இன்று அறுவடை செய்து கொண்டிருக்கின்றோம். இற்றைவரை அமரர் பொன். கந்தையா அவர்கள் மட்டுமே சோஸலிஷ அணியின் சார்பாக நான்காண்டு காலம் நாடாளுமன்றத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகக் குரல் கொடுத்தார். இந்நிலையில், தமிழரசுத் தலைமைப்பீடம் தனது அரசியற் கொள்கைகளை மீள்பார்வை செய்து, சோஷலிஸக் கொள்கைகளைப் பிரகடனப்படுத்தி, இந்த நாட்டிலே உண்மையான சோஷலிஸ ஆட்சி மலர்வதற்கு விரைவாக்கம் கொடுக்க முன்வருதல் வேண்டும். கலை - இலக்கிய விடயங்களிலே மழலைத் தனமான கருத்துக்களை உதிர்ப்பதிலும் பார்க்க இது சேமமான காரியமாகும்.

மலையகத் தமிழ் மக்களின் ஒரு பகுதியினர், தமிழகத்தையே கலாசார விளைநிலமாகச் சத்தியமாக நம்புவதினுல், தமிழரசாரின் கோஷத்திற்கு ஒத்தூதியுள்ளார்கள். அவர்களுடைய போக்கு நிதர்சனத்தை அறியாத எம். ஜி. ஆர். - சிவாஜி பக்தியில் ஏற்பட்டது என்று கூடச் சொல்லலாம். ஆனுல், இதற்கு மாருக, மலையகச் சுவைஞர்கள் சார்பிலே மலையக எழுத்தாளர் மன்றத்தினர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் புதிய சுருதியைச் சேர்ந்திருக்கிருர்கள். இயல்பாகவே அவர்கள் வட இலங்கைத் தமிழறிஞர்களுடைய போக்கினைக் கண்டித்துள்ளார்கள். அத்துடன், உருபு வாய்ந்த செயற் திட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களையும் முன் வைத்துள்ளார்கள். அவற்றுட் சில வேனும் முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தக்கன என் பதும் என் அபிப்பிராயமாகும். மலையக மக்கள் இந்த மண்ணிலே வேரூன்ருத சாதியார் என்ற பிழையான கருத்து ஒன்றினை அரசியல் வாதிகள் மட்டுமல்லாமல், கலை - இலக்கியக்காரர்களும் இயம்பி வருகின்ருர்கள் என்பது மிகவும் துக்ககரமானதாகும்.

இந்நாட்டிற்கு வியாபார - தொழில் நிமித்தம் குடி யேறிய மலையாளிகள் இலங்கை மக்களுடன் இரண்ட றக் கலந்து புதிய சூழலையும், வாழ்க்கையின் புதிய சுருதிக ளையும் ஏற்று மகிழ்ந்தார்கள். ஆனல், மலைய கத் தமிழர்கள் அவ்வாறு செய்யாமல், தமது வாழ் நாளிலே கண்ணுலும் காணுத தமிழகத்தையே தமது தாய்நாடாக நேசித்தார்கள் இந்நாட்டினைப் பிழைப்பு நாடி வந்த இடத்தில் குடியிருக்கும் 'விடுதி' என்று கற் பித்திருக்கவும் கூடும். ஆனல், இந்திய - பாகிஸ்தானி கள் பிரஜா உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் னர் நிலைமைகள் எவ்வளவோ மாறிவிட்டன. இந்த மாற்றத்தினை மிக மானசீகமாக அழுத்துவதில் மலைய கத்து இளைய சமுதாயத்தினர் முந்தி நிற்கின்ருர்கள். இது சங்கைக்குரிய உவப்பான காரியம்.

வெறும் அநுபவத்தை இலக்கியத்தின் தொனிப் பொருளாகக் கையாளும் நம் எழுத்தாளர் பலர் ஒன்றி னைக் கவனித்தல் வேண்டும். ஈழத் தமிழில் தேசிய இலக்கியம் வீறுடன் அமைக்கப்படுவதற்கான ஏதுக் கள் தூலமாகத் தோன்றவில்லை தமிழகத்து இலக்கியத் திற்கும் ஈழத்துத் தமிழகத்து இலக்கியத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் புறம்போக்கா னவையாக இருக்கின்றன. யாழ்ப்பாணப் பழகு தமிழி லும், பனை வடலிகளிலும் தொற்றி நிற்கும் புறம்போக்



கான வேறுபாடுகள். உள்ளியல்புகளிலே உள்ள நுட்ப மான வேறுபாடுகளை உய்த்துணரத் தவறுகின்ருர்கள். உள்ளியல்பிலே உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்தக் கூடிய முயற்சியின் முகங்களை மலையக எழுத்தாளரின் சில ஒறுப்பான படைப்புகளிலேனும் இனங்காணமுடி கின்றது. போதகமும் பயிற்சியும் பெற்றுள்ள மலையக எழுத்தாளர் கையாளும் பேச்சு வழக்கினை வாசிக்கும் போதகமடையாத வட இலங்கைச் சுவைஞர் தென்னிந் தியப் பேச்சு வழக்கினைப் பின்பற்றுவதாக நினைத்துக் கொள்ளக் கூடும். புறம்போக்கான வேறுபாட்டினை கண்டு கொள்ளுதல் சிரமமற்றது. உள்ளியல்பிலே உள்ள வேறுபாட்டினைத் தெளிதல் நுணுக்கமானது. பிரட் டுக் களத்திலும், மலைச்சாரலிலும், லயன்களிலும், காம்பராக்களிலும் வாழும் தேயிலைத் தோட்டத் தொழி லாளருடைய வாழ்க்கையிலே புகுந்துள்ள வேறுபாடு கள் உள்ளியல்பு சம்பந்தமானவை. எனவே, ஈழத்துத் தமிழ் தேசிய இலக்கியம் மலையகத்தின் வாழ்க்கையை யும் உள்ளடக்கியதுதான். அதுவே முழுமை சேர்க்க வல்ல பிரகரணமும் கூட. இது குறித்த பங்களிப்பினை நல்க மலையக எழுத்தாளர் முந்தி நிற்க வேண்டும் என் பதுடன், அவற்றை வரவேற்றுச் சுவைக்க வட இலங்கை வாசகர் பக்குவம் அடைந்தாலும் தக்கது.

## கோஷம் மூன்று

இந்தக் கோஷத்தினை எச். எம். பி. முஹிதீனின் அறிக்கை முன் வைத்ததைத் தொடர்ந்தே முழுப் பிரச் சினைகளும் வெடித்துக் கிளம்பின. இந்த அறிக்கை கலை- இலக்கிய விவகாரத்தினை மட்டும் மனத்திற் கொண்டு சமர்ப்பிக்கப்படவில்லை என்பது தெளிவு. பிறிதோர் அம்சத்திற்கே அழுத்தம் அதிகம் கொடுக்கப்பட்டிருக் கின்றது. 'தென்னகச் சஞ்சிகைகளின் இறக்குமதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார மோசடிகள் மலிந்துள்ளன; அவை களையப் படுதல் வேண்டும். நாட்டின் அந்நியச் செலாவணியில் நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது; இந் நிலையில் தென்னிந்தியக் 'குப்பைகள்' இறக்குமதியாவதைத் தடை செய்தும், தரமான சஞ்சிகைகளுக்குக் கட்டுப் பாடு விதித்தும் அந்நியச் செலாவணியினை மிச்சப் படுத்தி, பயனுள்ள வழிவகைகளில் செலவு செய்யப் படுதல் அவசியம்' என்ற தோரணையில் முஹிதீனின் அறிக்கை அமைந்துள்ளது. கலை - இலக்கியம் பற்றிய விசாரணையும் விசாரமும் உப விளைவுதான். சஞ்சிகை களின் இறக்குமதி வியாபாரத்தில் மோசடிகள் பல மலிந்துள்ளன. அவற்றை உடனடியாகக் களைதல் அவ சியம் என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகின் றேன். ஆனால், இதனை அகற்றுவதற்கு மேற்படி அறிக்கை சுட்டும் வழி தோதாக அமையவில்லை. இந்தியாவிலிருந்து இங்கு கடத்தப்பட்டுக் கொண்டு வரப்படும் பொருள்களில் 'கண்ணதாசன்' என்ற சஞ்சிகையும் இடம் பெற்றிருந்தது என்ற அந்தரங்கச் செய்தி ஒன்றினை என்னால் நம்பகமாகப் பெறமுடிந்தது. இதிலிருந்து தென்னகச் சஞ்சிகைக ளுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடு எவ்வாறு முறியடிக் கப்படும் என்பதையும் ஒருவாறு உய்த்துணரலாம். சிக்கனமான வழிவகைகளைக் கையாண்டு, நம் நாட்டின் அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தப்படல் வேண்டும். இலக்கியகாரர் மட்டுமன்றி, நாட்டுப் பற்றுடைய எந் தக் குடிமகனும் இதனை ஒப்புக் கொள்ளுவான். இருப் பினும் ஒரு சங்கடம் குறுக்கிடுகின்றது. இலங்கை சுதந்தி ரம் அடைந்த பின்னர் இவ்வாண்டு சமர்ப்பிக்கப் பட்ட வரவு-செலவுத் திட்டம் சிக்கனத்திற்கு முதலிடம் அளித்தது. பழைய நூறு ரூபாய், ஐம்பது ரூபாய் நாணயங்களை செலாவணியிலிருந்து வாபஸ் பெறும் திட்டத்தின் மூலம் பதுக்கியும் முடக்கியும் வைக்கப்



பட்டுள்ள பணம் வெளியிலே கொண்டு வரப்பட்டுள் ளது. நமது நிதிமந்திரி என். எம். பெரேரா தமது புகழ் பெற்ற 'பொன் மூளை'யின் ஒரு பகுதியை மினுக் கிக் காட்டும் சந்தர்ப்பமும் இதனால் சித்தித்தது. அவர் 'பீக்ஸ்' திட்டத்திலிருந்து நூல்கள் - சஞ்சிகை கள் ஆகியவற்றிற்கு விலக்களித்துள்ளார். இவற்றின் மீது விதிக்கப்படும் 'பீக்'ஸிலிருந்து வரும் வருமானம் அதர்மமானது என அவர் நினைத்திருக்கலாம். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாஸனம் கலா சாரத்தின் தங்குதடையற்ற பரிவர்த்தனையை அடிப் படை உரிமையாகப் பிரகடனப்படுத்துகின்றது. இரட் டைக் கலாநிதியான நமது நிதி அமைச்சரின் செயல் இதனை இசைந்தொழுகுவதாகவும் அமைந்துள்ளது. எது எப்படியிருந்த போதிலும், முஹீதினின் அறிக்கை சுட்டிய ஆலோசனைகளை நிதி அமைச்சர் கொள்கைய ளவில் முற்றாக நிராகரித்துள்ளார் போல அவர் சமர்ப் பித்துள்ள வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. இன்னுமொன்று. 'அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் வழிவகைகளை நுணுக்கமான பொருளியல் அறிவினைத் தொற்றி முன்வைத்தலே சிறப்புடையது. பட்டதாரி யாக வேண்டுமென்பதற்காக நான் பொருளியல் பாடத்துடன் மாரடித்துள்ள போதிலும், பொருளி யல் சார்ந்த ஆலோசனைகளை முன்வைக்கக் கூச்சப்படு வேன். இவற்றை எல்லாம் கூறிக் கொண்டு என்நிலை யைத் தெளிவு படுத்துகின்றேன். கலாசாரத்தின் தங்கு தடையற்ற பரிவர்த்தனை மனிதனின் அடிப்படை உரிமையாக அமைந்துள்ளது என்பது கருத்துமேமே. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள யதார்த்தச் சூழ்நிலைகளை அநுசரித்து இதனைக் கண்டிப்பான பற்றுசையுடன் கடைப்பிடிக்க இயலாது. இன்று கலாசாரம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் வணிக நடவடிக்கையுடனேயே பெரும்பாலும் இணைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, பொருளியல் சார்ந்த ஆராய்வும் இவ்விடயத்தில் தக்கதே. சுதேசியக் கலை - இலக்கியங்களைப் பாதுகாப்பதும் அவற்றை அபிவிருத்தி செய்வதுமான கடமையும் அரசைச் சார்ந்ததாகவும் உள்ளது. இந்த அளவில் பொருளியல் சார்ந்த ஆலோசனைகளை முன்வைப்பதிலே பிசகில்லை இந்தத் தளத்தில் நின்றே முஹிதீனின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கலாம். ஆனல், இந்தத் தளத்தினை விளக்கும் அவகாசத்தை ஏனோ முஹிதீன் எடுத்துக் கொள்ளவில்லை.

அடுத்தது, முஹிதீன் இறக்குமதி செய்யப்படுவதற்கு அநுமதிக்கலாம் என்று சிபார்சு செய்யும் பன்னிரண்டு பத்திரிகைகள் அடங்கிய பட்டியலை ஆமோதிப்பதில் எனக்குக் கிஞ்சித்தும் மோகம் கிடையாது. அவருடைய சுவைத்தளம் வேறு; என்னுடைய சுவைத் தளம் வேறு. ஒருவனுக்கு மாமிசமாக இருப்பது இன்னொருவனுக்கு நஞ்சாக இருக்கும் என்று சொல்வார்களல்லவா? அப்படித்தான் இதுவும். என்னுடைய சுவைத் தளத்தினைப் பெரிதும் மதிப்பவன் நான். என் சுவை தரமானது, கௌரவமானது என்று நம்புபவன் நான். என்னுடைய சுவையை பிறர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், என் சுவையின் சுயாதீனத்தைப் பிறர் மதிக்க வேண்டும் என்று விரும்புபவனும் நான். எனவே, நான் முஹிதீனின் சுவைத் தளத்தை நிராகரித்த போதிலும், அவருடைய சுவையின் சுயாதீனத்தினை மதித்து, சிபார்சு செய்யப்பட்டுள்ள பன்னிரண்டு சஞ்சிகைகளின் தரம் பற்றிய பிணக்கினை இங்கு பிரஸ்தாபித்து விவாதிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுகின்றேன்.



## கோஷம் நான்கு

கலை - இலக்கிய - கலாசார அலுவல்கள் சம்பந்தமாகத் தமிழ்ப் பத்திரிகையாளர், எழுத்தாளர், அறிவுத்துறையாளர், கலாசார ஊழியர் அடக்கியதாக மாண்புமிகு அமைச்சர் செ. குமாரசூரியர் நியமித்த குழு, மேற்படி அமைச்சருக்கு அளித்த மகஜரிலே நான்காவது கோஷம் அடங்கியிருக்கின்றது.

இந்தக் குழுவிலே கொழும்பிலுள்ள நான்கு பெரிய பத்திரிகை நிறுவனங்களைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்ந்திருக்கும் பத்திரிகையாளர் இடம் பெற்றிருக்கிருர்கள். கொழும்பிலிருந்து ஐந்து தமிழ்த் தினசரிகளை வெளியிடும் மூன்று நிறுவனங்களின் தலைமைச் சம்பளம் சுகிக்கும் பத்திரிகையாளரும் உளர். இவர்கள் 'தென்னகத்திலிருந்து வெளிவரும் தினத்தந்தியிலும் பார்க்கத் தரக்குறைவான செய்திகளைப் பிரசுரித்தும் நம்மால் பத்திரிகை நடத்துதல் சாலும்' என்பதை நிறுவும் ஒரு வகை வெறியுடன் 'மித்திரன்', 'தந்தி,' 'தினகரன் - செய்தித்தந்திகள்' ஆகியவற்றைத் தினசரி வெளியிட்டும் 'இலக்கியம் வளர்க்கிருர்கள். இவை தினசரி இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான வாசகரைச் சென்றடைகின்றன. ஆண்டுதோறும் சுமார் மூன்று கோடி ரூபா அந்நியச் செலாவணியை ஏப்பமிடுவதாகக் கூறப்படும் தென்னிந்தியச் சஞ்சிகைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகக்கூட இத்தகைய ஒரு விரிவான வாசக வட்டத்தைச் சென்றடைவதில்லை என்பது சத்தியம். 'தினத்தந்தி' ஆயிரம் பிரதிகள் இறக்குமதி செய்யப்பட்டு, கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற பெரிய பட்டணங்களிலேயே விற்பனை செய்யப்பட்டன. ஆயிரம் பிரதிகள் செய்த 'திருத்தொண்டை' பட்டிதொட்டிகளிலும் வாழும் லட்சக்கணக்கான வாசகர்கள் மத்தியிலே விரிவுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார்கள். தரமான தமிழ் இலக்கியம் இம் மண்ணிலே தோன்றுவதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் மகஜரிலே கையெழுத்து வைப்பதற்கு இவர்கள் காட்டிய துணிவினை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவர்களுடைய அந்தரங்க சுத்தியைக்கூட நாம் சந்தேகிக்க முடியாது. இவர்கள் பெரும் பத்திரிகை முதலாளிகளின் விசுவாசமிக்க ஊழியர்கள், தமது முதலாளிகள் அதிக ஆதாயம் பெறல் வேண்டும் என்பதிலே பற்றுள்ள கர்ம வீரர்கள். இதனாலும், தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் குப்பைச் சஞ்சிகைகளைத் தடை செய்வதில் சத்தியமான அக்கறை காட்டலாம். 'தினத்தந்தி'யின் ரஸனையை ஈழத்திலே மலிவித்தலினால் முதலாளிகளிடம் 'சபாஷ்' பெற்றிருக்கக் கூடிய இவர்கள், தென்னிந்தியக் 'குப்பைச் சஞ்சிகைகள் தடை செய்யப்பட்டால், அவற்றிற்குப் பதிலாக உள்ளூர்க் குப்பைப் பத்திரிகைகள் பலவற்றை (தடை செய்யப்பட்ட பின் சந்தா மூலம் தருவிக்கப்படும் தென்னிந்தியக் 'குப்பை'களைத் தழுவியும், காப்பியடித்தும், படவுருவப் படிவமைவு எடுத்தும்) உற்பத்தி செய்யும் 'இலக்கியத் தொண்டி'னால் முதலாளிமாருடைய பணப்பெட்டிகளை நிரப்பலாமென இவர்கள் கற்பனை செய்வதுகூட, இவர்களை நேர்மையான ஊழியரென்பதை நிறுவவே உதவும். இத்தகைய கர்ம வீரர்களிடம் ஈழத்தில் தரமான ஆற்றலிக்கியம் முனைப்பாக மலர்வதற்கான நற்சூழலை உருவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைக்குமாறு கோருவதும், அவர்கள் அத்தகைய ஆலோசனைகளை 'அருள்பாலித்'திடுவார்கள் என்று எதிர்பார்ப்பதும் நிதர்சன சுருதியுடன் ஒத்துப்போகக் கூடிய ஒன்றன்று.

[கடமை வீரர்களுக்குக் கடமையே யோகம். ஞான யோகம் அவர்களுக்குப் பொருந்தாவிட்டால் பாதகமில்லை. இந்த அவல நிலையிலேதான் குழுவினர் மூன்



றாவது அறிக்கையில் ஓர் 'அருமருந்'தன்ன கருத்தினைக் கக்கி விட்டார்கள். 'ஈழத்துத் தமிழ் இலக்கியம் உறுதியான வளர்ச்சிப் பாதையில் முன்னேறியதும் நாம் ஈழத்து இலக்கிய ஏடுகளை தமிழகத்திற்கும், தமிழ் நாட்டின் இலக்கிய சஞ்சிகைகளை இலங்கைக்கும் பரஸ்பரம் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்ல முடியும் என்பதையும் நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்' என்று ஐந்து ஆண்டுத் திட்டம் சமர்ப்பிக்கும் பாணியிலே ஓர் அபூர்வ கருத்து வீசப்பட்டுள்ளதைத் தான் சுட்டுகின்றேன். மான நரம்பு ஒரு நூலளவு தானும் உடம்பிலே ஓடும், சுய கௌரவத்தை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கும் பண்புள்ள ஈழத் தமிழ் எழுத்தாளர்களாவது இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கக் கடவர். (i) தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் 'குப்பை'ப் பத்திரிகைகளின் தரத்திற்கு நமது உள்ளூர்ச் சஞ்சிகைகள் முன்னேறவில்லை. (ii) அத்தகைய 'வளர்ச்சிக்' கட்டத்தினை உள்ளூர்ச் சஞ்சிகைகளும் எழுத்தாளரும் அடையும் வரைதான் தென்னகச் சஞ்சிகைகளுக்குத் தடை விதிக்கப்படச் சிபார்சு செய்கின்றோம். (iii) இப்பொழுது உள்ள தரத்தில் நம்மூர் எழுத்தாளர்களுடைய படைப்புக்களை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தால் நம்முடைய மானமும் கப்பல் ஏறிவிடும். (iv) அந்தத் தென்னகக் 'குப்பை'களை இப்பொழுது தடை செய்வது மூலம் மட்டுமே, அத்தகைய வளர்ச்சிப் பாதையிலே நாமும் முன்னேறுவோம் — இத்தகைய பல கருத்துக்களைத் தொக்க வைத்து ஏக வாக்கியத்திலே சொல்வதற்கு அபார சாமர்த்தியம் தேவையென்றாலும், நமது எழுத்தாளரை விரல் சூப்பத் தெரியாத அப்பாவிகளென நினைத்து அவமதிப்பது அவ்வளவு வடிவாக இல்லை. அத்துடன், இந்தியச் சஞ்சிகைகளைத் தடுப்பதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் எய்தப்பட விருக்கும் 'இலட்சிய உச்சம்' பற்றிய பிரகடனம் திருப்தி தருவதாகவும் இல்லை. 'தரமற்ற தென்னகச் சஞ்சிகைகளினால் இலங்கை எழுத்தாளரின் தரமான இலக்கியப் படைப்புக்கள் பாதிப்பு அடைகின்றன' என இவர்கள் சொல்லியிருந்தாற்கூட நாம் மன்னித்திருக்கலாம். ஆனால், அவர்களுடைய இந்த 'நோஞ்சான்' கருத்து மிக உக்கிர ஆட்சேபனைக்கு உரியது.]

மேற்படி குழு அமைக்கப்பட்டதின் பின்னர், மாண்புமிகு அமைச்சர் குமாரசூரியர் பல கூட்டங்களிலும் பரவலாகத் தெரிவித்த கருத்துக்கள் தெம்பு தருவதாக அமைந்துள்ளன. அவருடைய நோக்கம் புனிதமானது; அணுகும் முறை சத்தியமானது என்பதை ஆட்சேபிப்பதற்கு இடமில்லை. தமிழ் இலக்கியச் சுவை பற்றி அவர் முன்னர் — அமைச்சராவதற்கு முன்னர் — அதிகம் அளவிற்குப் பரிச்சயமாக்கிக் கொள்ளவில்லை என்பதும் அவருடைய குற்றம் ஆகாது. நிர்வாகத் திறமைக்கு அத்தகைய பயிற்சி அவசியமானது என்று கொள்ளவும் முடியாது. தமிழ் இலக்கியத் துறையிலே ஈடுபாடுள்ளவர்களுடைய அபிப்பிராயத்தை அவர் அறிய முயன்றமையும் நற்சகுனமே. ஆனால், இது சம்பந்தமாக அவருக்கு நெருக்கமான தூரத்தில் நின்று ஆலோசனை கூறும் நிலையில் உள்ளவர்கள் அமைச்சரின் நோக்கத்திற்குச் சத்தியமாக நடந்து கொள்ளவில்லை என்று ஊகிப்பதற்கு இடம் இருக்கின்றது. தோழர் வி. பொன்னம்பலமும் ஜனாப் எம். எம். உவைஸும் சாகித்திய மண்டலத்தின் செயற் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள தகைமை குறித்து ஆட்சேபனை எழுப்பக்கூடியவர்கள்கூட, ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சி கருதிக் கருமமாற்ற வேண்டிய



புனித பணி இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். ஆலோசனை கூற நிறுவப்பட்ட குழுவில் இவர்களையும் சேர்த்திருக்கலாம். இலங்கை எழுத்தாளர் சங்கம், யாழ்ப்பாண எழுத்தாளர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம், மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம், அகில இலங்கை எழுத்தாளர் கூட்டமைப்பு, யாழ். இலக்கிய வட்டம், மூதூர் இலக்கிய வட்டம், கிண்ணியா இலக்கிய வட்டம், திரிகோணமலை எழுத்தாளர் சங்கம், முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களுடைய அபிப்பிராயங்களையும் அறியும் வகையிலே இக் குழுவிற்கான அங்கத்தவர்களை நியமிக்கும்படி அமைச்சரை அறிவுறுத்தவும் மேற்படி ஆலோசகர்கள் தவறிவிட்டார்கள்.

இந்த ஆலோசனைக் குழு மூன்று அறிக்கைகளை முன் வைத்துள்ள போதிலும், அவற்றிலிருந்து நான்காவது கோஷத்திலே அடங்கியுள்ளனவற்றையே சாரமாகப் பிழிந்தெடுக்க முடிந்தது.

வியாபார ரீதியான இறக்குமதியைத் தடை செய்ய வேண்டுமென்று ஏக வாக்கியத்தில் ஆலோசனை கூறும் குழுவினர், தனிப்பட்டவர்கள் சந்தா மூலம் தருவித்துக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார்கள். பணம் செலுத்தி அதற்குப் பண்டம் பெறுவது தான் வியாபாரம் என்பதை எந்தப் பாமரனும் அறிவான். எனவே, சந்தா மூலம் வரவழைத்தல் வியாபார ரீதியாகமாட்டாது என்ற மகத்தான பொருளியல் உண்மை ஒன்றையும் அவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். எத்தகைய கண்டுபிடிப்பு! சந்தாமுறை தவிர்ந்த வேறு எந்த வியாபார முறையில் இறக்குமதி அனுமதிக்கப் படலாகாது என்று அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சு செய்ய வில்லை. இப்படி நினைத்து, அப்படி எழுதிவிட்டார்கள் என்று அர்த்தப் படுத்துவோமானால், அவர்கள் பலரிடமுள்ள கொழுத்த பட்டங்களையும், தமிழறிவையும் அவமதிப்பதாக அமையும். அதற்கு என் மனம் இடம் தரவில்லை. சந்தா முறை சிரமமானது என்ற போதிலும், அதனைச் சிபார்சு செய்வதற்கு அவர்கள் ஒரு காரணியையும் முன்வைக்கின்றார்கள்: "இந்தியத் தமிழ்ச் சஞ்சிகைகளின் இறக்குமதியை அரசாங்கமோ அல்லது கூட்டுத்தாபனமோ கையாண்டாலும், விற்பனை நிலையில் ஏற்படக் கூடிய கறுப்புச் சந்தையை இந்த ஏற்பாட்டினால் நீக்கிவிட முடியாது!" இதுவும் ஒரு மகத்தான கண்டுபிடிப்பு! சந்தா முறை சிரமமானது என்பதை அவர்களே ஒப்புக் கொள்ளுகின்றார்கள். தமிழ்ச் சுவைஞனாக இருக்கும் பாவத்திற்காக இந்தச் சிலுவையைத் தமிழ் வாசகன் சுமத்தல் வேண்டும் என்பது சிபார்சு. ஆங்கிலச் சஞ்சிகைகளை வங்கி மூலம் அழைக்கும் அன்பர்களுடைய வசதித் தளமும், பொருளாதாரத் தளமும் வேறு. அந்த முறை தமிழ்ச் சுவைஞனுக்கு உகந்ததல்ல. பொருளாதாரத் தரத்தில், கீழ் மட்டத்திலுள்ள தமிழ்ச் சுவைஞனை அவமதிப்பதாகவும் சந்தாத் திட்டம் அமையும். பொருளாதாரத் தியாகங்களை மேற்கொண்டு, தமிழ்ச் சுவைப்பினைத் திருப்தி செய்யும் ஒன்றுக்காக மாதம் முப்பது ரூபா செலவு செய்யும் ஒரு குடும்பத்தைப் பார்த்து, 'மொத்தமாக ரூ 360/- முற்பணம் கட்டு' என்பதில் மனிதாபிமானம் மருந்துக்கும் கிடையாது. சந்தா முறை சிரமமானது எனப் 'பொச்சடிக்கும்' அவர்கள் அதனை இலகுவாக்கப் பாட்டாளி வர்க்கத்திற்கு உதவக்கூடிய திட்டத்தைத் தயாரிப்பதில் அவர்கள் மூளையைக்கசக்கவுந் தயாராக இல்லை! அவ்வவ்வூர்களின் தபால் கந்தோர்கள் மூலம் வி.பி.பி. செலுத்திச் சஞ்சிகைகளுக்குச் சந்தா சேருவது இலகுவான முறை என்பது நமது அநுபவம். ஆனால், இச் சலுகை துர்ப்பிரயோகம் செய்யப்பட்டது என்பதும் நமது அநுபவமே. இதனாலேயே இந்த முறை ரத்து செய்யப்பட்டது. குமாரசூரியர் குழுவினர் இதுவரை மூன்று அறிக்கைகளை வெளியிட்டும் இருக்கிறார்கள். இந்த மூன்று அறிக்கைகளிலும் உருப்படியான திட்டங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இளம்பிறை இலக்கிய வட்டம், மூதூர் இலக்கிய வட்டம், கிழக்கிலங்கைப் புத்தக சபை ஆகிய மூன்று இலக்கிய அமைப்புகள் கூட்டாகச் சமர்ப்பித்த அறிக்கையிலே காணப்படும் சில பகுதிகள் 'குமாரசூரியர் ஆலோசனைக் குழு'வின் முதலாவது அறிக்கையிலே காணப்படுகின்றன. அதுவும் உயிரைத் திருகிய பிறகு, சடலத்திற்குத் தைலமிட்ட வாக்கில்! 'உள்ளூர்ப் பத்திரிகைகளுக்கு அரசாங்கமும் கூட்டுத் தாபனங்களும் விளம்பரம் கொடுத்து உதவுதல் வேண்டும்' என்று குழுவினர் சிபார்சு செய்தனர். எத்தகைய பத்திரிகைகளுக்கு இச் சலுகை வழங்கப்படல் வேண்டும் என்பதை வசதியாகப் பிரஸ்தாபிக்க மறந்து விட்டார்கள். ஆனால், மூன்று இலக்கிய அமைப்புகள் எத்தகைய பத்திரிகைகளுக்குச் சலுகைகள் வழங்கப்படல் வேண்டும் என்று வரையறை ஒன்றினையும் சமர்ப்பித்திருந்தன. இந்த வரையறையை மறைத்து விட்டதன் மூலம், விளம்பர சலுகைகள் பெரும் முதலாளிகளால் நடத்தப்படும், அன்றேல் நடத்தப்படப் போகும் பத்திரிகைகளைச் சென்றடையவும் அவர்கள் வழி செய்து விட்டார்கள். அஃது எவ்வகையிலும் சோஷலிஸ பணியாக மாட்டாது.

'இன்றைய கட்டம் ஒன்று; தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் பரஸ்பரம் பத்திரிகைகளை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வளர்ச்சிக் கட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுவது. இதற்கு இடைப்பட்ட ஒரு நிலை இரண்டாம் கட்டம். இந்த மகோன்னத கண்டு பிடிப்பினையும் குழுவினர் முன்வைத்து விட்டார்கள். அது வருமாறு: ''இந்த இடைக்காலத்தில் இந்தியத் தமிழ் இலக்கியப் படைப்புகளுடனும் ஈழத்துத் தமிழ் இலக்கிய சிருஷ்டிகளுடனும் தமிழ் மக்களின் பரிச்சயத்தைப் பேண இரு நாடுகளினதும் சஞ்சிகைகளில் இரு நாடுகளினதும் படைப்புகள் வெளிவர ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுவது அவசியம் எனவும் நாம் கருதுகின்றோம். இது இரு வழிக் கலாசார உறவினைப் பேண உகந்த வழியை அமைத்துக் கொடுக்கும்.''

பெரும்பாலான ஈழத்து எழுத்தாளர் தென்னிந்திய சஞ்சிகைகளுக்கு எழுதி, அவர்களுடைய விடயதானங்கள் நிராகரிக்கப்பட்டு, அந்த விரக்தி நிலையிலே பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 'பகீரதன்' மழலைக் கருத்துக்கள் சிலவற்றை உதிர்த்த பொழுது போர்க்கோலம் பூண்டார்கள்.'நமது நாட்டிலே உங்களுடைய பத்திரிகைகள் விற்பனையாகின்றன. விற்பனை ஆதாயத்தைக் கணக்கிட்டு அதற்கு ஏற்ற விளம்பரப் பக்கங்கள் என்ற நிலையிலாவது சில பக்கங்களை ஒதுக்கி, நமது விடயதானங்களைப் பிரசுரியுங்கள்' என்று கெஞ்சிக்கூடப் பார்த்தோம். இவற்றிற்கெல்லாம் 'மசியாத' தென்னகத்துப் பத்திரிகையாளர் முன்னுக்குப் பின் முரணுகப் பேசும் ஆலோசனைக் குழுவினர் சிபார்சு செய்துவிட்டார்கள் என்பதற்காக நமது ஆக்கங்களைப் பிரசுரிக்கப் போகின்றார்களா? விளம்பரக் கட்டணம் செலுத்தினாலும், நம் எழுத்தாளர் பலருடைய படைப்புக்களைத் தென்னகச் சஞ்சிகைகளிலே பிரசுரித்தல் சாத்தியமல்ல. அப்படியிருக்கும் பொழுது தென்னகச் சஞ்சிகைகளின் இறக்குமதியைத் தடை செய்துவிட்டு அதற்கு 'உபகாரமாக' நமது எழுத்தாளரின் படைப்புக்களைப் பிரசுரியுங்கள் என்று கேட்பதில் நியாயமில்லை. அத்துடன் நடைமுறைக்கும் ஒவ்வாதது. இந்தப் பிரேரிப்பின் உள் கருத்து ஒன்றுதான். தென்னிந்தியச் சஞ்சிகைகள் தடை செய்யப்பட்டுவிட்டால், இந்தியத் தமிழ் இலக்கியப் படைப்புக்களைப் பரிச்சயம் செய்து வைக்கின்றோம் என்ற போர்வையில் தமிழகத்தின் மூன்றும் தர எழுத்தாளர்களுடைய படைப்புக்களை ஈழத்துப் பத்திரிகைகளிலே பிரசுரித்து, நமது சுவைஞரின் அடிமை மனப்பான்மையைப் பிரீதி செய்து, வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதுதான் நோக்கம். இந்த வகையில், ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் பிரசுரகளம் மேலும் சுருங்கவே வழி சமையும். கலைமகள், கல்கி, தீபம், தாமரை, சரஸ்வதி உட்பட பதினைந்துக்கு மேற்பட்ட பத்திரிகைகளிலே, 1956- ஆம் ஆண்டிற்கு பின்னரும் என்னுடைய ஆக்கங்கள் பிரசுரமாகியிருக்கின்றன. தென்னிந்தியப் பத்திரிகையாளர் என்னுடைய ஆக்கங்களைப் பிரசுரிக்க மேலும் மோகம் காட்டுகின்றார்கள். என் ஒருவனுடைய பிரசுரகளம் விரிவடைந்துள்ளபடியால், எல்லாம் சேமமாக நடைபெறுகின்றன என்று நான் என்றும் என்னை ஏமாற்றிக் கொண்டதுமில்லை. நமது இலக்கியப் பார்வையிலும், ஆற்றல் இலக்கியப் போக்கிலும் மாற்றம் ஒன்று ஏற்படாதவரையிலும் நமது ஆக்கங்களுக்கு எந்த வகையாலும் ஒரு மகத்துவத்தினை ஏற்படுத்திவிட முடியாது.

அண்மையிலே நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் இளம்பிறை இலக்கிய வட்டத்தின் உயிரேயான, என் இனிய நண்பர் எம். ஏ. ரஹ்மானும் ஒரு நடுவராகக் கடமையாற்றினர். அவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கதைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கும் ஏற்பட்டது. ஈழத் தமிழகத்தின் இளைய சமுதாயத்தினரின் புனை கதை இலக்கியப் போக்கு எவ்வாறு அமைகின்றது என்பதைக் கிரகித்துக் கொள்வதற்காக இருவரும் கதைகளை ஒன்றுகவே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தோம். கதைகளின் பல்வேறு அம்சங்களையும் நடுவு நிலைமை நின்று சீர்தூக்கிப் பார்த்து முதன் மூன்று கதைகளையும் தக்க முறையிலே ரஹ்மான் தேர்ந்தெடுத்தார். அவருடைய சிபார்சு தேர்ந்த இலக்கியச் சுவையை மட்டுமன்றி, மிகுந்த இலக்கியப் பயிற்சியையும் புலப்படுத்தும் வண்ணம் அமைந்தமையால் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரித்தேன். ஆனால் அவரால் முதல் மூன்று பரிசுகளுக்கும் உரியன என்று சிபார்சு செய்யப்பட்ட கதைகளை முற்றாக நிராகரித்து, வேறு ஒரு கதைக்கு முதற் பரிசு வழங்கப்பட்டிருந்தது! சமுதாயப் பார்வை என்ற பெயரால், சிறு கதையின் எந்த அம்சத்திற்குள்ளும் அடக்க முடியாத சுவையற்ற ஒரு நடைச் சித்திரத்திற்கு முதற் பரிச வழங்கப்பட்டிருந்தது. நம் நாட்டில் வாழும் சில 'பிரபலங்கள்' இவ்வாறு தவறான தரத்தினையே இளைய சமுதாயத்தினருக்கு வலியுறுத்தும் பொழுது விடிவு எவ்வாறு, எப்பொழுது சம்பவிக்கப் போகின்றது? தனிப்பட்ட சுவையின் போக்கு மாறுபட அமையலாம் என்ற சலுகைக்கு அப்பாலும் இவ்வாறான செயற்கைத் தரங்களைத் திணித்தல் இலக்கிய விரோத செயலாக மட்டுமல்லாமலும், தேச விரோதச் செயலாகவும் கனிதல் கூடும்.

இந்த முன்னீட்டிலே, பல திறத்தாரும் ஈழத்தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி குறித்துத் திட்டங்கள் சமர்ப்பிப்பதாக நினைத்துக் கொண்டு, எவ்வாறு மிகவும் பாதகமான ஆலோசனைகளையே முன் வைத்தார்கள் என்பதை ஓரளவு விஸ்தாரமாகச் சுட்டிக் காட்டினேன். இதன் சுருக்கம் கருதி, யாவரும் எளிதிலே தெளிந்து கொள்ளக் கூடிய வழுக்களை இங்கு பிரஸ்தாபிக்காது தவிர்க்கின்றேன். இரு நாட்டினருக்கும் இடையில் கசப்பையும், விரோதத்தையும் வளர்க்காது, இருநாட்டு எழுத்தாளர் மத்தியிலும் பரஸ்பர நல்லுறவையும் நம்



பிக்கையையும் வளர்த்து, கலை-இலக்கிய வளர்ச்சியில் இருநாட்டினரும் சரி நிகர் சமானமாகத் தலை நிமிர்ந்து உழைக்கும் இனிய சூழ் நிலையை உருவாக்கக் கூடிய திட்டம் ஒன்றினை வனைந்தெடுத்தலே சாலச் சிறந்ததாகும்.

இலக்கியம் - கலை - சமுதாயம் - தேசீய இனம் - தனித்துவ நாடு - அந்நியச் செலாவணி - பொருளியல் என்று பல காரணிகள் தொற்றிச் சஞ்சிகைத் தடை பற்றிக் கருத்துக்கள் உதிர்க்கப்பட்ட போதிலும், இன்று இலக்கியத்தைப் பெரிதும் பாதிக்கும் ஒன்றுக்கும் கலாரஸனைக்கும் உள்ள தொடர்பினை ஒருவர் தானும் சுட்டிக் காட்டவில்லை. அத்தகைய ஒரு தொடர்பு இருப்பதான பிரக்ஞைகூட இருப்பதாகவும் தோன்றவில்லை. சினிமாவுக்கும் - இலக்கியத்திற்கும் - கலாரசனைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைச் சிலர் எழுப்பும் எதிர் மறைக் கோஷங்களும் நிறுவும். 'ஐயோ! சினிமாச் செய்திகளைப் போட்டுப் பக்கங்களை நிரப்புகிறார்களே! இது ஆபாசமாக இருக்கிறதே! இலக்கியத்திற்கு அளிக்காத அந்தஸ்தை சினிமாவுக்கு அளிக்கிறார்களே! சினிமாச் செய்திகளைத் தாங்கும் பேசும் படமும் பொம்மையும் மாதாமாதம் ஆயிரக் கணக்கில் விற்பனையாகின்றனவே! இந்தச் சினிமாக் குப்பைகளால் நமது சமுதாயத்தின் ஒழுக்கம் கெட்டு விடுகின்றனவே!' என்று ஒப்பாரியும் கூச்சலும் வைக்கும் எழுத்தாளர்கள் ஈழத் தமிழகத்தில் மலிந்திருக்கிறார்கள். இவர்கள் சினிமாவுக்கும் இலக்கியத்திற்கும் இடையிலுள்ள உறவினை இணைத்துப் பார்க்கச் சக்தியற்றவர்களாக இருக்கின்றார்கள்.

ஆதியில் மனிதன் அபிநயத்தின் மூலமும், முகபாவத்தின் மூலமும் தன் கருத்துக்களைப் புலப்படுத்தினான். பின்னர் ஒலிகளும் புகுந்து கொண்டன. ஒலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியாக வளர்ச்சி பெற்ற போதிலும், முகபாவங்கள் மூலம் கருத்தை ஊக்கிக்கும் வழக்கம் தொடர்ந்தது. ஆனல், அச்சுக்கலே வேகமாக வளர்ந்ததின் மூலம் மனித முகங்கள் படிக்க முடியாதனவாகி விட்டன இதனுலும், சொற்களின் செல்வாக்கு உயரலாயிற்று. சிந்தனே சார்ந்த துறைகளிலே இப்பண்பினல் துரித முன்னேற்றம் ஏற்படலாயிற்று என்பது உண்மையே. அங்க அசைவுகள் மூலமும் பாவத்தின் மூலமும் சொல்லிலே வடிக்க இயலாத அக உணர்வுகளேயும் அநுபவங்களேயும் வெளிப்படுத்த அச்சுக்கலே உதவவில்லே. இது பெரும் இழப்பாகும். நவீன மேற்கத்தைய ஓவியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கோடுகள், கன சதுரங்கள், வட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மனித உருவங்களே வரையும் பண்பு மேலோங்கிவிட்டது. இப்போக்கு மரபு ரீதியான மனித உருவத்தைச் சிதைத்துவிட்டது. இதனுலும், இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்புகளே ஈடு செய்யும் ஓர் அரிய கலே சினிமா என்பதை நாம் மறக்கலாகாது. உருவத்திலே சினிமா நாடகத்தை ஒத்திருந்தாலும், இரண்டிற்குமிடையே உள்ள ஒருமைப்பாடுகளிலும் பார்க்க வேறுபாடுகளே அதிகம். குருடனுலும் நாடகத்தை ரசிக்கக் கூடிய அளவுக்குச் சொல்லின் ஆதிக்கம் அதிலே இருக்கின்றது. ஆனல், சினிமா ஓவியத்தைப் போன்றே கட்புலனே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இன்னெரு வகையிலும் சினிமா உயர் கலேயாக மலர்ந்துள்ளது. வெளியை அடிப்படையாகக்கொண்ட ஓவியம், சிற்பம், கட்டடம் ஆகிய கலேகளேயும், காலத்தை அடிப்படையாகக் கொண்ட இசை, நாடகம் ஆகிய பிறதளக் கலேகளேயும், ஒளியை ஊடகமாகக் கொண்டு ஒன்றிணைக்கும் கலேயே சினிமாவாகும். சினிமாவிலே பாத்திரங்களே நயமுடன் கையாள முடியும். அத்துடன், சினிமா கதை அம்சத்தினே அதிகமாக வற்புறுத்துகின்றது. இதனல் நல்ல சினிமாவைப் பார்க்



கும் பொழுது கவிதா உணர்ச்சியும் ஏற்படுகின்றது. கால-வெளித் தொடர்புகளேச் சினிமா கையாளும்மேன்மையை ஏலவே பிரஸ்தாபித்துள்ளேன். சினிமாவைப் பார்ப்பதற்கு ஏன் இலட்சக் கணக்கான மக்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிருர்கள்? அன்றுட வாழ்க்கையிலிருந்து மறைந்தோடுவதற்குச் சினிமா உதவுகின்றது என்பது மட்டுமல்ல, நவீன நாகரிக வாழ்க்கையிலே இழந்த எதையோ தேடும் நாடலும் தூண்டுகின்றது. நித்திரைக்கும், சினிமாவுக்கும் இருள் தேவைப்படுகின்றது. இருளினுல் கால - வெளி உணர்வுகளிலே மாற்றம் ஏற்படுகின்றது. கனவு நிலேக்கும், சினிமா பார்க்கும் நிலேக்கும் ஓர் ஒற்றுமை இருக்கின்றது. இத்தகைய ஒரு பாணி கவித்துவமான பாணி என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. ஏனேய கலேகள் ஓர் எண்ணத்துடன் தொடங்கி, அதனேச் சடப் பொருள்கள் மீது திணிக்கின்றன. ஆனல், சினிமா சடப் பொருள்களுடன் தொடங்கி எண்ணங்களேயும் உணர்வுகளேயும் ஏற்படுத்துகின்றது. இவற்றிலிருந்து சினிமா இலக்கியக் கலேயை எவ்வாறு பாதிக்கவல்லது என்பதை நாம் தெளிந்து கொள்ளலாம். எனவே, உள்ளூர் இலக்கிய வளர்ச்சிக்கான சூழ்நிலேயை உருவாக்கும் திட்டத்தைத் தயாரிக்கும் பொழுது, உள்ளூர் சினிமா அபிவிருத்திக்கான திட்டத்தினேயும் அதற்குள் அடக்குதல் அவசியம். உடனே, ‘இந்தியப்படங்களேத் தடை செய்வதுதான் இதற்கு மருந்து’ என்று மருந்துச் சீட்டு எழுதிவிடக் கூடியவர்களும் இருக்கிருர்கள். இன்றே இந்தியப் படங்களுக்குத் தடை விதிக்கப்பட்டாலுங்கூட, அடுத்த கால் நூற்றுண்டு காலத்திற்குத் திரையிடப்படுவதற்கான இந்தியப் படங்கள் நமது ‘சினிமா மொகலாய’ரிடம் இருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. மேலும், மலேயாளப்படங்களும் சத்தியத் ராயின் படங்களும் உள்ளூரின் சிங்கள சினிமாவுக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரூட்டம் அளித்துள்ளன என்பதையும் நாம் மறந்து விடலாகாது. எனவே, இது சம்பந்தமாக நாம் வேறொரு உபாயத்தைக் கையாளுதல் தக்கது.

ஈழத்தின் பல்வேறு தேசீய இனங்களுக்கிடையில் பிரிவினையும் பகைமை உணர்ச்சியும் வளர்க்கப் படாமல், நல்லெண்ணமும் ஒருமைப்பாடும் வளர்க் கப்படுதல் வேண்டும். இந்த நாட்டின் அரசியல்-பொருளாதார-கலாசாரச் சூழல்கள் சோஷலிஸ நிர்மாணத்திற்கு விரைவாக்கம் கொடுக்கும் வகையில் அமைக்கப்படுதல் வேண்டும். சோஷலிஸ நிர்மாணத் திற்குக் குந்தகமாக அமையாத, ஆதாயமான கொள் கைகள் செயற்படுத்தப்படுதல் வேண்டும். உலகின் எந்த, அந்நிய நாட்டிலிருந்தும் வரக்கூடிய முன்னேற் மான கலை-இலக்கிய ஆக்கங்களை ஜீரணிக்கும் அதே வேளையில், பிற நாடுகளின் கலை-இலக்கிய பாரம் பரியங்களுக்கு அடிமைப்படாத, நமது மண்ணிற்கே உரித்தான தனித்துவமான கலை-இலக்கியப் பாரம் பரியம் பாதுகாக்கப்படல் வேண்டும். சிங்களம் தமிழ் என்று மொழி வேறுபாடின்றி, இலங்கைக்கான தனிக் கலையுருவம் ஒன்று மலருதல் வேண்டும். இந்தப் பஞ்ச உள்ளெண்ணத்தையும் உன்னியே இதனை எழு கின்றேன்.

உண்மையான நிலைகளைப் பற்றிய உணர்வாற்ற லும் முறையானதுமான ஆய்வுகளை மேற்கொள்ளாது உணர்ச்சிக் கனிவிலேயே கோஷங்களை முன்வைக் கின்றார்கள். தன்னின் வேறான நிலைகளைக் கவனியாமல், உணர்ச்சிக் கனிவிலே செயற்படுபவர்கள் கொள்கை களின் இடத்தில் சொந்த உணர்ச்சிகளை மாற்றுப் பொருளாக வைத்து விடுகிறார்கள் அத்தகையவர்கள் 'பாறைகளின் மத்தியிலே முளைக்கும் மூங்கிலுக்குத் தோல் கனமானது, நாக்குக் கூர்மையானது; ஆனால்,



மையப் பெரும் பகுதி வெறுமைமையாக இருக்கின்றது' எனப் பாடப்படும் மூங்கிலை நிகர்த்தவர்கள். அத்தகையவர்களுடைய கருத்துக்கள் நிராகரிக்கத் தக்கவை. அதேவேளையில் என்னுடைய கருத்துக்களை உங்கள்மீது திணிக்க முற்படவில்லை என்பதும் சத் தியம். இவற்றை உங்களுடைய பரிசீலனைக்கும் அங்கி கரத்திற்குமாக—அன்றேல் கருத்து மாறுபட்டவர் களுடைய நிராகரிப்பிற்காகவும்— முன்வைக்கின்றேன்.

இந்த முன்னீட்டிலே சில விடயங்களைச் சுருக்கமாக் கூறியுள்ளேன். இலக்கியம் சம்பந்தமான வேறு பிரச் சினைகள் சிலவற்றைத் தொடாதும் விட்டுள்ளேன். அவற்றைப் பற்றிய பிரக்ஞையோ சிந்தனையோ இல்லை யென்பதல்ல. இந்த முன்னீடு மேலும் நீண்டுவிட்டால் எஸ். பொ. அறிக்கையைக் குறித்த காலத்தில் அச்சிட்டு வெளியிட முடியாது என்று ஓர் எச்சரிக்கையையும் நண்பர் ரஹ்மான் விடுத்துள்ளார். எனவே, உடனடி யாக இளம்பிறை இலக்கிய வட்டத்தின் கோஷத்தினை முன் வைக்கின்றேன். இதனை ஐந்தாவது கோஷம் என் றும் வைத்துக்கொள்ளலாம்.

## கோஷம் ஐந்து!

(அ) தமிழகச் சஞ்சிகைகளின் இறக்குமதியில் ஊழல்கள் பல மலிந்துள்ளன. நாட்டின் பொருளாதார நலன் பேணவும், சுவைஞரின் நலன் பேணவும் இந்த ஊழல்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுதல் வேண்டும். (ஆ) ஈழ மண்ணிற்கே உரித்தான, தனித்துவமான தேசீய முத்திரை பொறிக் கப்பட்ட தரமான இலக்கியப் படைப்புக்கள் ஈழத்திலே தோன்றுவதற்குச் சாதகமான சூழல்கள் உருவாக்கப் படல் வேண்டும். (இ) ஐக்கிய இலங்கையை உருவாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவன செய்வதோடு தென்னகத்துடன் இருவழி கொண்ட கலாசாரப் பாலம் உருவாக்கப்படல் வேண்டும்.

இந்தக் கோஷத்தினை எவ்வாறு செயற்படுத்தலாம் என்பதற்கான உருப்படியான பிரேரணைகளையே, இளம் பிறை இலக்கிய வட்டத்தின் சார்பாக எஸ். பொ. அறிக்கை முன் வைக்கின்றது. அந்த அறிக்கையை எந்தக் கோணத்திலே அணுகுதல் வேண்டும் என்பதற்கான பிடிமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு சுருக்க விளக்கத்தினை இவ்வாறு இந்த முன்னீட்டிலே வைக்க விழைவு கொண்டேன். இந்த விழைவு விளைவினைத் தருமாயின் சேமமே.

**எஸ். பொ.**



# அறிக்கை

## I. ஆபாசம் பற்றிய வரையறை

தரமற்ற இலக்கியம் தென்னகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் என்ன, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டால் என்ன அவற்றின் விளைவுகள் சேமமானவையாக அமையமாட்டா என்பது உண்மை. ஆனால், 'அபாசம்' என்ற சொல் ஒருவனுடைய அறிவின் தளம், கலாசாரப் பின்னணி, வாழும் சூழல், உளவியற் பாங்குகள் ஆகியன தொற்றி வெவ்வேறு அர்த்தங்கள் கொடுக்கக்கூடியனவாக அமைந்துள்ளன. 'ஆபசாம்' என்பதை ஒரு குறிப்பிட்ட அளவுகோல் மூலம் அளந்துவிடவும் முடியாது. படு முதலாளி ஒருவனுக்கு கம்யூனிஸம் பற்றிய எழுத்துக்களே முதன் முதலில் ஆபாசமானதாகத் தோன்றலாம். உண்மை இவ்வாறு இருக்கும் பொழுது, 'தரமானது இது; ஆபாசமானது இது' என்பதை நிர்ணயிக்கக்கூடிய ஒரு சபையை நிறுவி நடவடிக்கை எடுக்கலாம் என்பது நடைமுறைக்கு அவ்வளவு உகந்ததல்ல. இதனால் எதுவும், எப்படியும் இறக்குமதியாவதற்கு அனுமதிக்கப்படலாம் என்பது என் கட்சியல்ல. நிர்வாணம் என்பது இயற்கை. அதில் கலைத்துவம் இருக்கின்றது. இல்லை என்று அழிவழக்காடுதல் ஆண்டவனின் ரஸனையையே நிந்திப்பதாகும். ஆனால், சமுதாயத்தின் பொது வாழ்வில் சில நெறிகள் புகுந்துள்ளன. அந்த நெறிகள் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உதவியிருக்கின்றன என்பது நம் அநுபவம். அவற்றை நெகிழ்த்துவதில் பயன் ஏற்படாது என்று நம்பினால் அவற்றைத் நெகிழ்த்தத் தேவையுமில்லை. இந்நாட்டிலே சோஷலிஸ நிர்மாணம் விரைவாக்கம் பெறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது என் கொள்கை. இத்தளத்தில் நின்று பிரச்சினையை அணுகினல், இனவெறி, மத வெறி, கற்பழிப்பு, கொலை, களவு ஆகியவற்றைப் பற்றிய செய்திகளையும் அவற்றைத் தூண்டும் இலக்கியங்களையும் ஆபாசமெனக் கருதுவேன். இவற்றைத் தூண்டும் வகையில் வெளியாகும், அன்றேல் நமது உள்ளூர் அரசியலில் நேரடியாகத் தலையிடும் சஞ்சிகைகளும், பிரசுரங்களும் தென்னிந்தியாவிலிருந்து மட்டுமல்ல, உலகின் எந்த மூலையிலிருந்து வந்தாலும் தடை செய்யப்படல் வேண்டும் என்ற கோஷத்தினை நான் முற்று முழுக்க ஆதரிக்கின்றேன். அத்துடன், இவற்றைத் தூண்டும் வகையில் உள்ளூரில் வெளியாகும் சஞ்சிகைகளை ஒரு கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர அரசு துரித நடவடிக்கை எடுக்கும்படியும் வற்புறுத்துவேன். இத்தகைய உள்ளூர்க் 'கஞ்சல்கள்' களையப் பட்டால்தான் ஈழத் தமிழில் தேசீய இலக்கியம் தோன்றுவதற்கான நற்சூழல் உருவாகும். இத்தகைய ஆபாசத்தைக் களைவதற்குத் 'தக்கார் குழு' ஒன்று நியமிக்கப்படலாம். [ஈழத்திலே கலை-இலக்கியம் சம்பந்தமாக இதுவரை நியமிக்கப்பட்ட குழுக்கள் எதுவுமே, நியமிக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றும் வகையிலே செயற்படவில்லை என்று நான் சலிப்புற்ற போதிலும், வேறு மாற்றுத் திட்டம் ஒன்றினை அறிவுறுத்த முடியாத காரணத்தினலேதான் இந்த ஆலோசனையை முன் வைக்கின்றேன்.] இலங்கையின் சகல பகுதிகளிலும் வாழும் தமிழ் இனங்களின் பல்வேறு கொள்கைகளையும், கருத்துக்களையும் பிரதிபலிக்கும் எழுத்தாளர் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கத்துவம் பெறல் வேண்டும். இந்தக் குழுவின் அதிகாரங்கள் பின்னற் சுட்டப்படும்.



## II. தமிழரின் மொழியுரிமை

தேசீய இலக்கியம் தோன்றுவதற்கான நற்சூழல் உருவக்கப்படல் வேண்டும். இதற்கு முதன் முதலாக தமிழ் மக்களுடைய மொழி உரிமை உறுதி செய்யப்படல் வேண்டும். சட்டத்திலும் நடை முறையிலும் தமிழ் பேசும் இனங்களுடைய தேசீய மொழி தமிழேயாகும் என்பது உறுதி செய்யப்படல் வேண்டும். இது சிங்களமே இந்நாட்டின் அரசகரும மொழி என்பதற்கு முரண்பட்டதல்ல என்பது அழுத்தத் தக்கது. தேசீய மொழி என்ற மகத்துவம் தமிழுக்கு நிலைநாட்டப்பட்டாற்றான் ஈழத்தமிழில் தேசீய இலக்கியம் படைக்கும் ஆர்வந் தோன்றும். ஈழத் தமிழிலே தேசீய இலக்கியம் படைப்பதற்கும், சுவைப்பதற்குமான பக்குவத்தினை சேதனை பூர்வமாக நிறுவுதல் அவசியம். தேசீய இலக்கியம் தோன்றுவதற்கான விரைவாக்கம் உண்மையான சோஷலிஸ ஆட்சியினல் பெறக்கூடிய ஒன்ருகும். இஃது அரசியற் காரணி. எனவே, உண்மையான சோஷலிஸ ஆட்சியைத் தோன்றச் செய்யும் பணியில் தமிழ் பேசும் இனங்கள் தமது பங்களிப்பினைச் செவ்வனே அளித்தல் தக்கது.

## III. இலக்கியச் சஞ்சிகைகள்

தேசீய இலக்கியத்தினைத் தோற்றுவிப்பதற்கும், விரைவாக்கப் பெறச் செய்வதற்கும் ஈழத் தமிழில் தரமான இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவருதல் வேண்டும். அத்தகைய இலக்கியச் சஞ்சிகைகள் பின்வரும் இயல்புகளுடன் வெளிவருதல் நல்லது.(அ) 1 × 4 டெமி சைஸிற்கு மேற்படாத அளவில், 48 பக்கங்களுக்குக் குறையாத பக்கங்களில், மாதம் ஓர் இதழுக்குக் குறையாமலும், வாரம் ஒரு இதழுக்கு மேற்படா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒழுங்கான காலத் தவணைகளில் வெளிவருதல் வேண்டும். (ஆ) இலக்கியச் சஞ்சிகைகளின் மொத்தப் பக்கங்களுள் ஐப்பது சதவீதம் ஆற்றலிலக்கியங்களுக்கும். அவை தொற்றிய குணமாய்வுக்கும், சிங்கள இலக்கியங்களின் தமிழாக்கத்திற்கும் ஒதுக்கப்படல் வேண்டும். இதனால், அரசியல்-சினிமா-சமயம்-விளம்பரங்கள் ஆகிய சகல பிற அம்சங்களுக்கும் ஐம்பது சத வீதமான பக்கங்களே ஒதுக்கப்படல் வேண்டும் என்பதும் பெறப்படும். (இ) பிற நாட்டுச் சினிமா பற்றிய செய்திகள்-கவர்ச்சிப் படங்கள்- விளம்பரங்கள் ஆகியவற்றிற்கு ஐந்து சத வீதமான பக்கங்களுக்கு மேல் எக்காரணம் கொண்டும் ஒதுக்கப்படலாகாது. உள்ளூர் சினிமா, படங்கள், விளம்பரங்கள் ஆகியன வற்றிக்கு இந்தக் கட்டுப்பாடு செல்லாது. (ஈ) இலக்கிய சஞ்சிகைகள் வெளியிடும் நிறுவணம் தன்னுடைய முதலீட்டில் 50 சத வீதத்திற்கு மேல்இலக்கிய சஞ்சிகைகள் வெளியிடுவதற்காக செலவு செய்வதை எண்பித்தல் வேண்டும். (உ) இத்தகைய இலக்கிய சஞ்சிகைகளுக்கு அரசாங்க ஆதரவும் உதவியும் கிடைத்தல் வேண்டும்.

## IV. இலக்கியப் பணி சார்ந்த நூல்கள்

தமிழ் நூல் பிரசுரக் கலையும் உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். (அ) ஆற்றலிலக்கியங்கள், குணமாய்வு நூல்கள், ஈழத் தமிழில் எழுந்த பண்டைய நூல்களின் திருந்திய பதிப்புக்கள், அறிவியல் சார்ந்த நூல்கள், உலகின் சிறந்த இலக்கியங்களின் தமிழாக்கங்கள், சிங்கள நூல்களின் தமிழாக்கங்கள் ஆகிய நூல்களின் பிரசுரம் மலிதல் வேண்டும். இத்தகைய நூல்களின் பிரசுரத்தை அரசாங்கம் இலக்கிய பணியென மதித்தல் வேண்டும். (ஆ) மேற்கூறப்பட்ட எத்திறந்து நூலும் பாடசாலைகளிலே பாட நூலாக



அங்கீகரிக்கப்பட்டால் அது இலக்கியப் பணியைச் சார்ந்த நூலெனக் கொள்ளப்படத் தேவையில்லை. ஏனெனில், அவற்றிற்கு உடனடியானதும் விரிவானதுமான சந்தை உண்டு. (இ) நூல் பிரசுரத்துறையில் பாட நூல்களையல்லாது 'இலக்கியப் பணி' என்ற பகுதியில் அடங்கும் நூல்களைப் பிரசுரிப்பதிலே தமது மூலதனத்தில் 75 சத வீதத்தைச் செலவு செய்வதாக எண்பித்தல் வேண்டும். (ஈ) இத்தகைய நூல் பிரசுர நிறுவணங்களுக்கும் அரசாங்க ஆதரவும் உதவியும் கிடைத்தல் வேண்டும்.

## V. அரசாங்க ஆதரவு

மூன்றும் பகுதியிலே சாட்டப்பட்டுள்ள வகையில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பிரசுரமாகும் இலக்கியச் சஞ்சிகைகளை வெளியிடும் நிறுவணங்களுக்கும், 'இலக்கியப் பணி' என்ற வகையில் அடங்கும் பத்து நூல்களேனும் வெளியிட்டுள்ள நூற் பிரசுர நிறுவணங்களுக்கும் அரசாங்கம் பின்வரும் வகைகளிலே ஆதரவு அளிக்க முன் வருதல் வேண்டும்: (அ) தற்பொழுது சிறு கைத்தொழில் நிறுவணங்களுக்குக் கடன் வசதிகள் வழங்கப்படுவது போல இவற்றிற்கும் வழங்கப்பட வசதி செய்தல் வேண்டும். (ஆ) அரசாங்கத்தினாலும், உள்ளூர் ஆட்சி மன்றங்களினாலும் சன சமூக நிலையங்களினாலும், கல்வி நிலையங்களினாலும் நடத்தப்படும் சகல வாசகசாலைகளும் மேற்படி சஞ்சிகைகளையும் நூல்களையும் வாங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுத்தல் வேண்டும். (இ) மேற்படி சஞ்சிகைகளையும் நூல்களையும் அச்சிடும் செலவினைக் குறைப்பதற்காக அச்சிடுவதற்கான காகிதத்தை கிழக்குக் கடதாசிக் கூட்டுத்தாபனம் மொத்த விலையிலுள்ள கழிவுடன் விற்பனை செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். (ஈ) இத்தகைய நிறுவனங்களுக்கு விளம்பர மூலமோ, நன்கொடை மூலமோ உதவி செய்ய முற்படும் தனிப்பட்ட புரவலர்களுக்கு அரசாங்கம் வரிச் சலுகை அளித்தல் வேண்டும். (உ) மேற்படி சஞ்சிகைகளும் நூல்களுமே ஏற்றுமதி செய்வதற்கான பிரசுரங்கள் என அரசாங்கம் அங்கீகரித்தல் வேண்டும்.

## VI. பிற ஆதரவுகள்

(அ) மூன்றாம் பகுதியிலே சுட்டப்பட்ட சஞ்சிகைகளுக்கு அரசாங்கமும் கூட்டுத்தாபனங்களும் விளம்பரம் கொடுத்து ஆதரிப்பதற்கான திட்டம் ஒன்றினை இயற்றுதல் வேண்டும். (ஆ) பரிசளிப்பு விழாக்கள் நடைபெறும் பொழுது பரிசிற்கான நூல்களை வாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலே, 70 சத வீதமான பணத்தை நான்காவது பகுதியிலே சுட்டப்படும் 'இலக்கியப் பணி'க்காக வெளியிடப்படும் நூல்களை வாங்குதல் வேண்டுமென்று சகல பாடசாலைகளின் அதிபர்களும், பொது நிறுவன உத்தியோகத்தர்களும் வற்புறுத்தப்படுதல் வேண்டும்.

## VII. எழுத்தாளருக்கான வசதிகள்

(அ) எழுத்தாளர்களுடைய வருவாய் அதிகரித்து அவர்களுடைய பொருளாதார நிலை உயர வழி செய்யப்படல் வேண்டும். பிரசுரமாகும் விடயதானங்களுக்கு பக்கம் ஒன்றுக்கு (வசதிக்காக 'டைப்' செய்யப்படும் பக்கம் என்று வைத்துக் கொண்டு) ரூபா பத்து குறைந்த பட்ச சன்மானமாக எழுத்தாளருக்கு வழங்கப்பட ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். மூன்றாம் நான்காம் பகுதிகளிலே சுட்டப்பட்ட நிறுவனங்கள் உட்பட, எல்லாப் பிரசுர நிறுவனங்களும்



குறைந்தபட்ச சன்மானம் வழங்கும் முறைக்குக் கட்டாயம் இசைந்தொழுகுதல் வேண்டும். (ஆ) இலங்கையிலே பெரும்பாலான தமிழ் ஆற்றலிலக்கியகாரர்கள் பகுதி நேரத்தினை - அதாவது பொழுதுபோக்கு நேரத்தினை—மட்டுமே எழுத்து வாழ்க்கைக்காகச் செலவு செய்கின்றார்கள். இதனால் அவர்களுக்குத் தமது முழு ஆற்றலையும் பிழிந்து காட்டக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காமல் போகிறது. அரசாங்க ஊழியர்களாக உள்ள ஆற்றலிலக்கியகாரர் பத்து ஆண்டு காலச் சேவைக்குப் பின்னர், இளைப்பாறுவதற்கான வசதி செய்யப்படல் வேண்டும். (இ) தெரிவு செய்யப்படும் ஆற்றலிலக்கியகாரர், ஆற்றலிலக்கியம் சம்பந்தமான அலுவல்களிலே ஈடுபடும் வகையில் பகுதி நேர வேலைகளைக் கொடுக்கும்படி பெரும் பத்திரிகை நிறுவனங்கள் வற்புறுத்தப்படுதல் வேண்டும். (ஈ) கலாசாரப் பரிவர்த்தனையின் அடிப்படையில், ஈழத்து எழுத்தாளர் வெளிநாடுகளுக்குச் சென்று தமது அனுபவத்தை அகலித்துக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

## VIII. மொழிபெயர்ப்புப் பணிகள்

சாகித்திய மண்டலம் எழுத்தாளருக்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் எதனையும் இற்றைவரை உருப்படியாகச் செய்து முடிக்கவில்லை. அது வகுத்து நடத்திய பரிசுத் திட்டங்களிலே பலத்த ஊழல்களும் மோசடிகளும் புகுந்துள்ளன என்பதை அநுபவ வாயிலாக எழுத்தாளருள் அநேகர் அறிவர். மேலும் பரிசுத் திட்டத்தின் மூலம் எழுத்தாளர்கள் மத்தியிலே விரோதங்களும், மனக் கசப்புகளும் வளர்ந்ததுதான் மிச்சில். எனவே, சாகித்திய மண்டலம் பரிசு வழங்கும் திட்டத்தினை உடனடியாகக் கைவிடுதல் வேண்டும். இந்த நிதியினை பிறிதொரு வழியிலே செலவழித்தல் பயனுடையதாக இருக்கும். குழுவினரால் சிபார்சு செய்யப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழ் ஆற்றலிலக்கியங்களைச் சிங்களத்திலே மொழிபெயர்ப்பதற்கும், சிங்கள ஆற்றலிலக்கியங்களைத் தமிழிலே மொழிபெயர்ப்பதற்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுதல் தக்கது. இத்தகைய மொழிபெயர்ப்புகளை நான்காம் பகுதியிலே சுட்டப்படும் பிரசுர நிறுவணங்களின் மூலம் நூல்களாக வெளியிடலாம். இதன் மூலம் சிங்கள மக்களுடைய கலை - இலக்கியப் பண்புகளைத் தமிழ் மக்களும் தமிழருடைய கலை-இலக்கியப் பண்புகளைச் சிங்கள மக்களும் பரஸ்பரம் அறிந்து, மதித்து நேசிப்பதற்கு வழி சமையும். மேலும், இத்திட்டத்தின் மூலம் சிங்கள இலக்கியங்கள் கடல் கடந்த இலக்கியச் சுவைஞர்களையுச் சென்றடையவும் வழி பிறக்கும்.

## XI. இலக்கிய போதகம்

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைக்குப் (சாதாரண-உயர் நிலை) படிக்கும் மாணுக்கருக்கு நவீன ஈழத் தமிழ் ஆற்றலிலக்கியத்திலும் நல்ல பரிச்சயம் ஏற்படக்கூடிய வகையில் தமிழ் இலக்கிய பாடத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்படுதல் வேண்டும். பல்கலைக் கழகங்களில் நவீன ஆற்றலிலக்கிய நூல்கள் பாட நூல்களாக்கப்படுவதுடன், தமிழ் இலக்கிய வரலாறு போதிக்கப்படும் போது ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் ஈழத் தமிழிலே உள்ள இலக்கியப் படைப்பாளிகளை மகிமைப்படுத்தும் பக்குவ நிலை நம்மவர்கள் மத்தியில் வளரும்.

## X. மலிவுப் பதிப்புகள்

தமிழ் நூல்களின் மலிவுப் பதிப்புக்களை வெளியிடும் திட்டம் ஒன்றினை உருவாக்குவது நல்லது.



ஆனல், இத்திட்டம் எழுத்தாளரின் வருவாயைப் பெருக்கும் அம்சத்தினையும் மனத்திற் கொண்டே வகுக்கப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தத்தக்கது. எனவே, அரசாங்க மான்யத்துடன் சாகியத்திய மண்டலமே மலிவுப் பதிப்புகளை வெளியிடும் பணியினை மேற்கொள்ளுதல் வேண்டும். நான்காம் பகுதியிற் சுட்டப்படும் பிரசுர நிறுவணங்களின் துணையையும் சாகித்திய மண்டலம் நாடலாம்.

## XI. உள்ளூர் சினிமா அபிவிருத்தி

இலங்கையிலுள்ள படமாளிகைகள் பின்வரும் திட்டத்திற்கு இசைந்தொழுகும் வகையில் அரசு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒவ்வொரு படமாளிகையும் ஆண்டின் மொத்தக் காட்சி நேரத்தின் மூன்றில் ஒரு பகுதி நேரத்தை உள்ளூர்த் திரைப்படங்களைக் காட்டுவதற்கு ஒதுக்குதல் வேண்டும். இவ்வாறு செய்வதினுல், சிங்களப் படங்களைத் தமிழ் மக்கள் பார்த்துப் பரிச்சயப் படுத்த அதிக வாய்ப்புக் கிட்டும். அத்துடன் தமிழ்ப் பகுதிகளிலுள்ள படமாளிகைகளில் உள்ளூரில் தயாரிக்கும் தமிழ்ப்படங்களைக் காட்ட வேண்டிய அவதியும் ஏற்படலாம். இதனுல், ஈழத் தமிழின் தேசீய இலக்கியத்தை விரைவாக்கும் செய்யக்கூடிய உள்ளூர்த் தமிழ் சினிமா அபிவிருத்தியாகும் சூழ்நிலையும் உருவாகும். (சினிமாவுக்கும் இலக்கியத்திற்கு மிடையிலுள்ள தொடர்பினை இந்த அறிக்கைக்கான முன்னீட்டிலே தெளிவாக விளக்கியுள்ளேன் என்பதினுல் இங்கு விரிக்காது விடுகின்றேன்.)

## XII. வானொலியின் பங்களிப்பு

கலை-இலக்கிய வளர்ச்சிக்கு அதிகம் உதவக் கூடிய சாதனங்களுள் ஒன்று வானொலி என்பதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்துவிடலாகாது. (அ) வானொலிக் கலைஞர்களுக்கு வழங்கும் சன்மானத்தை அதிகரித்தல் வேண்டும். (ஆ) முதற் பகுதியிலே சுட்டப்படும் 'தக்கார் குழு' வின் பிரதிநிதிகளும், இலங்கை வானொலியின் பிரதி நிதிகளும் அடங்கிய குழு கலைஞரின் தர வகையினை நிர்ணயித்தல் வேண்டும். (இ) மறு ஒலிபரப்புச் செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு அரைச் சன்மானம் வழங்கும் முறை புகுத்தப்படுதல் வேண்டும். (ஈ) தரமான தமிழ் நிகழ்ச்சிகளின் மொழிப்பெயர்ப்பு சிங்கள மொழியிலும், தரமான சிங்கள நிகழ்ச்சிகளின் மொழியப்பு தமிழ் மொழியிலும் ஒலிபரப்பப்படுதல் வேண்டும். இதற்கான ஒரு தனிப் பகுதி வானொலியிற் நிறுவப்படலாம். இவ்வாறு செய்யப்படும் பொழுது மூல நிகழ்ச்சியின் படைப்பாளிக்கு அரைச் சன்மானம் வழங்கும் முறை பயிலப்படுதல் வேண்டும். (உ) நான்காம் பகுதியிலே காணப்படும் பிரகாரம் பிரசுரமாகும் நூல்களுக்கு விரிவான விமர்சன நேரத்தினை ஒதுக்கிக் கொடுத்தல் வேண்டும். (ஊ) மூன்றும் பகுதியிலே குறிக்கப்படும் இலக்கிய சஞ்சிகைகளுக்குச் சலுகைக் கட்டணத்தில் வர்த்தக சேவையில் விளம்பரம் செய்யும் ஒழுங்குகள் செய்து தரப்படல் வேண்டும். (எ) மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஈழத்து ஆற்றலிலக்கிய விளைச்சல்களைப் பற்றி வானொலி மூலம் விமர்சன ரீதியான கணக்கெடுப்பு நடத்துதல் நல்லது. நல்ல படைப்புக்களைச் சுவைஞனுக்கு அறிமுகப்படுத்த இஃது இலகுவான வழியாகும்.

## XIII. புதிய உயிர்ப்பு

உயிர்ப்புள்ள மொழி புதிய தேவைகளுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப நெகிழ்ந்து கொடுக்கும் ஒரு தன்மையைப் பெற்று விளங்கும். பத்திரிகை எழுத்து



மரபும் இந்த நெகிழ்ச்சியையே வற்புறுத்துகின்றது. ஷ, ஜ, ஸ, ஹ, க்ஷ போன்ற வட எழுத்துக்களைக் கடந்த சில நூற்றுண்டு காலமாகத் தத்தெடுத்தும் கூடத் தமிழ் அழிந்து விடவில்லை இவற்றை இப்பொழுது நீக்குதல் வேண்டுமென்பது செயற்கையான வித்துவ முயற்சியாகும். அறிவியல் சார்ந்த நூல்கள் தற்பொழுது பெரும் பாலும் மொழி பெயர்ப்புகளாகவே இருக்கின்றன. இந்த மொழி பெயர்ப்புகளிலே நெகிழ்ச்சி அதிகம் வரவேற்கத்தக்கது என்பதற்கான காரணிகள் முன்னீட்டிலே தரப்பட்டுள்ளன. மொழி பற்றிய இந்தச் சேதனையுடன் இலக்கியப் படைப்பாளிகள் கருமமாற்றுதல் விரும்பத்தக்கது.

## XIV. விசாரணை வேண்டும்

1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்தியாவிலே பிரசுரமான ஈழத்துப் படைப்பாளிகளுடைய நூல்களைப் பற்றி உடனடியாக ஒரு விசாரணை நடத்தப்படுதல் வேண்டும். அங்கே நூல்களைப் பிரசுரிப்பதற்கு இங்கிருந்து பணம் கொண்டு செல்லப்பட்டதா? எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது? அங்கு பிரசுரிக்கப்பட்ட நூல்களுக்கு 'ரேயல்டி' வகையில் பணம் தரப்படுகின்றதா? அந்தப் பணம் எந்த வகையில் முடக்கப்படுகின்றது? இத்தகைய வினாக்களுக்கும் விசாரணையின் போது விடை காணப்படல் வேண்டும். இவ்வாறு 'இலக்கியச் சேவை' என்னும் பெயரால் நடத்தப்படும் தேச விரோத செயலைக் கண்டு பிடித்தலும் சாத்தியம். ஈழத்து எழுத்தாளர் இத்தகைய தேச விரோதச் செயலில் ஈடு பட்டதாக நிரூபிக்கப்பட்டால், அவர்கள் இதுவரை அனுபவிக்கும் 'மகிமை' கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், இலக்கியம் பணி சம்பந்தமாக அரசின் எந்தச் சலுகைகளுக்கும் அருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணதயற்றவர் எனவும் பிரகடனப் படுத்தப்படுதல் வேண்டும்.

## XV. இரு வழிப் பாதை

முன்போந்த பதினான்கு பகுதிகளிலும் தொகுத்துக் கூறப்பட்ட ஆலோசனைகள் அமுலாக்கப்படும் பொழுது உள்ளூர் எழுத்தாளர்களையும், இலக்கியச் சஞ்சிகைகளையும் தென்னந்தியச் சஞ்சிகைகள் பாதிக்க மாட்டா என்ற உறுதி நிலை ஏற்பட்டுவிடும். எனவே, பொருளியல் தவிர்ந்த, இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதி சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட அத்தனை வாதங்களும் வலுவிழந்துவிடும். தீங்கு விளைவிக்காத நிலையில் தென்னகச் சஞ்சிகைகள் இறக்குமதியாவதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஈழத்தமிழ், உலகத் தமிழ் என்ற பொது நலவமைப்பில் சரியாசனம் வகிப்பதை யாவரும் வரவேற்பர். இப்படி இணைப்பது உலக இலக்கியப் பேரரசுடன் ஈழத் தமிழ் இலக்கியத்தை ஒன்றிணைப்பதற்கு இலகுவான - சேமமான வழியாகும். அத்துடன், தமிழகத்துடன் இரட்டை வழி கொண்டதாகக் கலாசாரப் பாதையினை அமைத்துக் கொள்வதற்கு, தமிழகச் சஞ்சிகைகளின் இறக்குமதியினை அனுமதித்தல் கட்டாய நிபந்தனையாகவும் உள்ளது.

## XVI. இறக்குமதியை அரசு ஏற்றல்

தமிழகச் சஞ்சிகைகளை இங்கு இறக்குமதி செய்வதில் உள்ள ஊழல்களும், தில்லு முல்லுகளும் முற்றாகக் களையப்படல் வேண்டும். பொருளியல் சார்ந்த இப்பிரச்சினையை, இலக்கியப் பற்றுக்கு அப்பாலும், நாட்டுப் பற்றுடன் அணுகுதல் முறைமையாகும். எக்காரணம் கொண்டும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் தனியார் இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு



அனுமதி வழங்கப்படலாகாது. இவ்வாறு நாம் செய்வதின் மூலம் ஊழல்களைக் களையலாம் என்பதில் நாம் வைக்கும் நம்பிக்கை, அரசின் நேர்மையிலும் நிர்வாகத் திறனிலும் நாம் வைக்கும் நம்பிக்கையின் ஓர் அங்கமே. இந்தியச் சஞ்சிகைகள் நூல்கள் ஆகியவற்றின் இறக்குமதியைக் கையாளும் பொறுப்பு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திடம் ஒப்படைக்கப்படலாம். நாட்டின் கிராமங்களிலே கூடப் பரந்து வாழும் வாசகனையும் தென்னகச் சஞ்சிகைகள் சென்றடைவதைக் கூட்டுறவுச் சங்கக் கடைகளின் விநியோக முறை சாத்தியமாக்கும். ஆழ்ந்து நோக்கினால், இத்தகைய முறையினால், தெரிவு செய்யப்பட்ட வாசிப்பு முறையைப் பயிற்சிக்குக் கொண்டு வருதலும் சாலும்.

## XVII. அடுக்குப் பண்ணுதல்

ஆறுமாத காலத்திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்ட பிறகே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் சஞ்சிகைகள் - நூல்கள் ஆகியவற்றின் இறக்குமதிப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளுதல் தக்கது. தாம் பெற விரும்பும் பத்திரிகைகளின் பட்டியலைக் கொடுத்து தமது பெயரை அண்மையிலுள்ள சங்கக் கடையிலே பதிவு செய்யும்படி வாசகர் தூண்டப்படல் வேண்டும். தென்னிந்திய சஞ்சிகைகள் புதிய ஏற்பாட்டினைப் பற்றித் தமது பத்திரிகைகளிலேயே விளம்பரஞ் செய்வதின் மூலம் பிரச்சினையை இலகுவாக்கலாம். இந்தப் பதிவுகளைத் தொகுத்து ஒவ்வொரு சஞ்சிகையின் எத்தனை பிரதிகள் வரவழைக்கப்படுதல் வேண்டும் என்ற புள்ளி விபரத்தை நேரடியாகப் பெறுதலும் சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XVIII. இந்திய அரசின் ஒத்துழைப்பு

இந்தியாவில் அரசு வர்த்தகக் கூட்டுத்தாபனம் என்னும் நிறுவனம் இருக்கின்றது. சஞ்சிகைகள்-நூல்கள் தவிர்ந்த ஏனையவற்றின் ஏற்றுமதி இறக்குமதி இதன் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றது. சஞ்சிகைகள்-நூல்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி இறக்குமதியையும் இதன் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரும்படி இந்திய அரசினைத் தூண்டலாம். இதன் மூலம் இருநாடுகளின் அரசாங்க நிறுவனங்களே சஞ்சிகை-நூல்கள் ஆகியவற்றின் வர்த்தகத்தில் ஈடுபடுவதினால், உயர் நிலையில் கலை-இலக்கிய விவகாரங்கள் சம்பந்தமான சுமூக முடிவுகள் எடுக்கப்படுதல் சுலபமாகிவிடும்.

## XIX. தனியார் கடைகள்

உள்ளூரிலுள்ள தனியார் துறையிலுள்ள கடைகள் உள்ளூரில் பிரசுமாகும் நூல்களையும் சஞ்சிகைகளையும் மட்டுமே விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் இவ்வளவு காலமும் உள்ளூர்ப் பிரசுரங்களை ஒரு வகைத் 'துடக்கு' மனப்பான்மையுடன் நோக்கிய அவர்களுக்கு, உள்ளூர்ப் பிரசுரங்களின் விற்பனையை அதிகரிப்பதில் அதிக ஊக்கம் பிறத்தலும் சாத்தியமாகும்.

## XX. நமது பிரசுரங்களின் ஏற்றுமதி

ஆண்டு தோறும் இந்தியாவிலுள்ள அரசு வர்த்தகக் கூட்டுத்தாபனத்திமிருந்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலயம் இறக்குமதி சேய்யும் மொத்த பெறுமானத்தில் எண்பது சத வீதத்ினை மட்டுமே பணமாக்— இந்திய ரூபாவின் மதிப்பில்— இறுக்கப்படுதல் வேண்டும். மிகுதி இருப்பது சத வீதப் பெறுமானத்திற்கு உள்ளூர்ப் பிரசுரங்கள் பண்டமாற்று முறையில் ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும். மூன்றும் பகுதியிலே குறிக்கப்படும் இலக்கிய சஞ்சிகைகள், நான்காம் பகுதியிலே குறிக்கப்படும் நூல்கள் ஆகியவற்றிற்கே ஏற்றுமதி செய்யப்படும் பிரசுரங்களுள் முன்னுரிமைக்குரிய சலுகை வழங்கப்படுதல் வேண்டும். இது சம்பந்தமாக முதற் பகுதியிலே சுட்டப்படும் 'தக்கார் குழு' வினுடைய ஆலோசனைகளும், இருபத்தைந்தாம் பகுதியிலே பிரஸ்தாபிக்கப்படும் 'இலக்கியகாரர் சம்மேளனத்'தினுடைய ஆலோசனைகளும் பெறப்படுதல் தக்கது. இவ்வாறு செய்வதினால் தமிழின் கலாசாரப் பாதை இரு வழி கொண்டதாக அகலிப்பதுடன், ஈழத் தமிழில் வெளியாகும் பிரசுரங்களுக்கு மேலதிகச் சந்தையுங் கிட்டும்.

## XXI. தபாற் சலுகை

அண்மையிலே சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றிற்கு 'பீக்ஸ்' திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத் தக்க ஒன்றாகும் என்பதை முன்னீட்டிலே விளக்கியுள்ளேன். அதே சமயம், 'புக்-போஸ்ட்' தபால் கட்டணத்தை உயர்த்தியிருப்பது தங்கு தடையற்ற இலக்கியப் பரம்பலுக்கு மிகவும் குந்தகமானது. இதனால் உள்ளூர் இலக்கிய ஆக்கங்களின் நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றது. 'புக்-போஸ்ட்'டிற்கான தபாற் கட்டண உயர்வினை அரசு உடனடியாக வாபஸ் பெறுதல் தக்கது. மேலும், மூன்றாம் நான்காம் பகுதிகளிலே சுட்டப்படும் நிறுவனங்களிடமிருந்து பெயரடையாளத் தொகையை அறவிட்டு, தனி முத்திரையிட்டு அனுப்பும் முறை ஒன்றினையும் அரசு நடைமுறைக்குக் கொண்டு வருதலும் தக்கது. இதனால் அரசுக்கு ஏற்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக் கூடிய இழப்பு அவ்வளவு பாரியதன்று ஆனால், இந்த இழப்பு உள்ளூரின் கலை இலக்கிய வளர்ச்சியினால் பெரிதும் ஈடு செய்யப்படுகின்றது என்பது மிக அழுத்தமாகக் கருத்திற் கொள்ளத்தக்கது.

## XXII. பிரசுரக் கலையின் அபிவிருத்தி

சஞ்சிகைகளையும், நூல்களையும் அச்சிடுவது தனித்த ஒரு கலையாக உயர்வடைந்து விட்டது. உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளின் பிரசுரக் கலையின் தரத்திற்கு உள்ளூர்ப் பிரசுரக் கலை உயர்த்தப்படுதலும், பிறிதொரு தளத்தில் நின்று நோக்கப் பட்டால், இலக்கியப் பணியே என்பதும் பெறப்படும். எனவே, மூன்றும் பகுதியிலே சுட்டப்படும் சஞ்சிகைகளை வெளியிடும் நிறுவனங்களும், நான்காம் பகுதியிலே சுட்டப்படும் நூல் வெளியீட்டு நிறுவனங்களும் கூட்டுறவு அடிப்படையில் ஒன்றிணைந்து, அரசாங்க உதவியுடன் 'அச்சடிப்பாளரின் அச்சகம்' ஒன்றினை நிறுவுதல் வேண்டும். பிரசுரக் கலையின் அபிவிருத்திக்குத் தேவையான விலையுயர்ந்த காகிதம், நேர்த்தியான வண்ண அச்சுக்குத் தேவையான அட்டைகள், தீந்தை வகையருக்கள், பல்வேறு அச்சு வகைகள் ஆகியனவற்றையும் இறக்குமதி செய்து மூன்றும் நான்காம் பகுதியிலுள்ள அச்சகர்களுக்கு மட்டுமே தங்கு தடையற்ற முறையில் கிடைப்பதற்கு அந்த அச்சகம் பொறுப்பாக இருத்தல் வேண்டும். அத்துடன் வசதி குறைந்த தனது அங்கத்துவ அச்சகர்களின் நுணுக்கமான அச்சுவேலைகளை அடக்க விலைக்கு அச்சிட்டு உதவுதல் வேண்டும்.

## XXIII. ஓவியரின் பங்களிப்பு

சஞ்சிகைகள் - நூல்கள் ஆகியவற்றின் அமைப்பு முறையும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.



உள்ளூர் ஓவியர்களுடைய ஆற்றல் இவற்றின் அமைப்பு முறைகளிலே பெரிதும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இதனால் உள்ளூர் ஓவியக் கலையின் வளர்ச்சி விரைவாக்கம் பெறுவதுடன், உள்ளூர் ஓவியக் கலைஞர்களுடைய வருவாயும் பெருக வழி சமையும். பிரசுரக் கலையில் ஈடுபட்டுள்ள அச்சகர்கள், மேற் கூறப்பட்ட அமைப்பு முறைகளில் ஈடுபட்டுள்ள ஓவியர்கள் இத்துறையிலே தமது அநுபவத்தினை அகலித்துக் கொள்ளும் வகையில் வெளி நாடுகளுக்குச் சென்று பயின்று வரத்தக்க வகையில் உதவிச் சம்பளத்திட்டம் ஒன்றினை அரசு, பிறநாட்டுத் தூதுவரகங்களின் துணையுடன்,வகுத்துச் செயற்படுத்த முன் வருதல் வேண்டும்.

## XXIV. 'தக்கார் குழு'வின் பணிகள்

முதலாம் பகுதியின் ஈற்றிலே சுட்டப்படும் 'தக்கார் குழு' பின்வரும் கடமைகளை இயற்றலாம். (அ) இன வெறி, மதவெறி, கற்பழிப்பு, கொலை, களவு ஆகியவற்றைத் தூண்டும் வகையிலே விடயதானங்களைப் பிரசுரிக்கும் உள்ளூர் வெளிநாட்டுப் பிரசுரங்களை இனங்கண்டு, அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிச் சிபார்சு செய்யலாம். (ஆ) ஏழாம் பகுதியிலே சுட்டப்படும் எழுத்தாளர்களுக்கான சலுகைகளைப் பெறத்தக்க எழுத்தாளர்களுடைய பெயர்களைச் சிபார்சு செய்யலாம். (இ) எட்டாம் பகுதியிலே சொல்லப்பட்ட பிரகாரம் சாகியத்திய மண்டலம் சிங்களத்தில் மொழி பெயர்க்க வேண்டிய ஆற்றலிலக்கியங்களைச் சிபார்சு செய்யலாம். (ஈ) ஒன்பதாம் பகுதியிலே சுட்டப்படும் விடயங்களிலே உதவும் வகையில், இலக்கியப் பகுதிகளையும் இலக்கிய நூல்களையும் சிபார்சு செய்யலாம். (உ) பத்தாம் பகுதியிலே சுட்டப்படும் மலிவுப் பதிப்புகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான நூல்களைச் சிபார்சு செய்யலாம். (ஊ) பன்னிரண்டாம் பகுதியிலே கூறப்பட்ட வானொலி தர நிர்ணயக் குழுவிலே கடமையாற்ற வேண்டிய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்கலாம். (எ) இந்தியாவில் சஞ்சிகைகள் நூல்கள் ஆகியவற்றின் உற்பத்திச் செலவு மலிவாக அமைந்துள்ளது. எனவே, தென்னிந்தியச் சஞ்சிகைகளின் இலங்கை விலை இங்கு நிர்ணயிக்கப் படும் ஒன்ருக இருத்தல் விரும்பத்தக்கது. (விலை நிர்ணயத்தின் போது நவீன ஆற்றலிலக்கியத்திற்கான பங்களிப்பு, ஈழத்து எழுத்தாளர்களுக்கு அளிக்கும் ஊக்கம் ஆகியன சகாய விலைக்கான நியதிகளாகக் கருத்தில் கொள்ளப் படுதல் வேண்டும்.) இதன் மூலம் இத் துறைசார்ந்த ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரத்தில் வருவாய் பெருகவும் வழி சமையும். இந்திய சஞ்சிகைகளின் இலங்கை விலையை இந்தத் தக்கார் குழு சிபார்சு செய்யலாம்.

## XXV. இலக்கியகாரர் சம்மேளனம்

இலக்கிய சஞ்சிகைகளின் பிரசுரகர்த்தாக்கள், இலக்கியப் பணி சார்ந்த நூல்களின் பிரசுரகர்த்தாக்கள், ஆற்றலிலக்கியப் படைப்பாளிகள், நூல்களின் அமைப்பு முறைக்கு உதவும் ஓவியர்கள் ஆகியோர், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் ஒன்றிணைந்து, ஈழத்துத் தேசீய இலக்கியத்தை வளப்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட, பலம் வாய்ந்த 'இலக்கியகாரர் சம்மேளனம்' ஒன்றினை அமைத்து, புதிதாக எழக்கூடிய பிரச்சினைகள் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமான ஆலோசனைகளை முன்வைத்தல் வேண்டும். இது வளர்ச்சிக்கான உத்தரவாத நடவடிக்கையுமாம்.

*



தனித்த
தொனிப் பொருள், தனித்த முத்திரை
என்பன
சான்று, இவ்வுலக இலக்கியச்
சங்கப்
பலகையிற் சரிநிகர் சமான
இடத்தினைப்
பிற படைப் புடனே ஏற்க,
ஈழத்
தமிழ் மண் மீதில் இனிப் பிறந்து
இலக்கியம்
படைப்பதற் கிருப்போர்
இவற்றினைச் சுவைப்போர்க் கிந் நூல்

படைப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESPO ARIKKAI

## I Definition of Obscenity

Everyone acknowledges the fact that literary trash— whether imported from South India or produced locally— has harmful effects. But the term 'obscenity' can mean different things to different people depending on each one's intellectual level, his cultural backround, his environment and psychological disposition. There is no one yardstick by which to measure the term. (Communist writings might look utterly obscene to a thorough-going capitalist.) This being the position, to hope to set up a committee which will pronounce upon what is worthwhile and what is obscene, is somewhat impracticable. This is not to say that anything and everything should be allowed to be imported. Nudity is a natural state. It possesses the quality of art; to deny this is to cast aspersions on God's taste. But certain guide lines have been thrown up by civilized life. It is my experience that these guide-lines have helped to foster the progress of the human race. If it is believed that relaxing these rules will prove of little avail, then it is not necessary to relax them. It is my firm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

conviction that socialist construction needs to be speeded up in this country. Viewing the problem from this angle, reports about racial and religious strife, rape, murder and thefts, and the writings which promote them are, I think, obscene. I fully support the cry that publications and magazines which tend to promote these, or which directly interfere with Ceylon's politics (whether they come from South India or any corner of the world) should be banned. Further, I would like to emphasise that the State should take speedy measure to bring under control local publications which pander to these tastes. Only if this local trash is suppresed, can an environment conducive to the healthy growth of a genuinely Ceylon Tamil Literature emerge. A committee of experts can be set up to spot out and uproot this kind of obscenity. (I am discouragingly aware that none of the committees or panels set up so far to promote literature and the arts in Ceylon have functioned in such a way as to discharge their obligations; but for lack of a better alternative. I am constrained to put forward this suggestion) This committee should include representative writers hailing from the various Tamil-speaking areas of the Island, and reflecting diverse shades of opinion. The powers of this committee will be defined later on.

## II The Language Rights of the Tamils

A climate favourable to the growth of a national literature must be made to prevail. For



this, first the language rights of the Tamils must be secured. Both in law and in practice, Tamil should be the national Language of the Tamil-Speaking peoples. It should be emphasised that this does not violate the position of Sinhala as the official language of this country. Only if Tamil is granted its due position as the language of the minority communities will there be an eagerness to produce a truly Ceylon Tamil literature. It is essential that a climate conducive to the production and appreciation of Ceylon Tamil literature be consciously established. A genuinely socialist rule will hasten the emergence of a national literature. This is a political factor. The Tamil-speaking peoples must contribute their share to the establishment of a truly socialist government.

## III Literary Magazines

Quality Ceylon Tamil literary magazines must be published to quicken the evolution of a national literature. It would be good if such magazines conform to the following requirements:

1. The size should not exceed demy 1 x 4; the pages should not be less than 48; an issue should be published at least once a month and not more than once a week; the magazine should be published at regular intervals.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. Fifty per cent of the total pages of literary magazines should be devoted to creative literature, criticism and Tamil translations of Sinhalese literature. This necessarily implies that only 50 per cent of the pages will be devoted to other eatures such as politics, cinema, religion and advertisements.

3. Under no circumstances should more than 5 per cent of the pages be devoted to foreign cinema news, pictures and advertisements. This restriction shall not apply to local cinema news, pictures and advertisements.

4. Institutions which publish literary magazines must show proof that they spend more than 50 per cent of their investment on the publication of literary magazines.

5. Government must support and assist such literary magazines.

## IV Publications: Service to Literature

The art of publishing must be fostered in Ceylon.

(a) Cheap publications of creative works, critical works, revised reprints of ancient Ceylon Tamil classics, scientific works, Tamil translations of world classics and Sinhalese writings should be issued. The publication of these works should be viewed by the Government as a service to the cause of literature.



(b) If any of the works mentioned in (a) are made text-books then its publication need not be viewed as a service to the cause of literature since they will have a ready and extensive market.

(c) Publishing Houses which publish not text books, but books falling under category (a) should show proof that 75% of their investment is spent on such publications.

(d) Such publishing houses should be given Government support and assistance.

## V Government Support

Publishing houses which have published literary magazines (as described in Section III) for over 2 years and publishers who have published at least 10 books falling under the category of 'service to the cause of literature' (as described in Section IV) should be helped by the Government in the following ways:

(a) They should be given credit facilities similar to those extended to small industrial units at present.

(b) The Government must make arrangements for the purchase of these magazines and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

books by all libraries and reading rooms run by the Government, Local Government bodies, community centres and schools.

(c) To reduce the cost of printing these books and magazines, the Eastern Paper Mills Corporation should sell printing paper at wholesaler's discount.

(d) The Government should grant tax exemptions to those patrons who give support to these publishing ventures either by way of advertisements or donations.

(e) The Government must recognise that these are the only magazines and books which should be exported.

## VI Other forms of support

(a) The Government must formulate a scheme to help the magazines described in Section III, by giving them Government and State corporation advertisements.

(b) School Principals and officials of Public-Organisations must be compelled to use 70% of the funds allocated for buying prize books, to purchase books falling



under category IV (books published as a service to the cause of literature) for distribution at prize-givings.

## VII Facilities for Writers

(a) Steps must be taken to see that the income of writers is increased and their economic position improved. For every page published (for the sake of convenience, let's assume one type-written page) writers should be paid at least Rs. 10/- All publishers, including those falling under sections III and IV, must be compelled to abide by this minimum payment rule.

(b) The majority of Ceylon Tamil creative writers are part-time writers, i. e, they write during their spare time. Consequently, they don't have a chance of exhibiting their full powers. Creative writers who are government servants should be allowed to retire after 10 years' service.

(c) Big newspaper publishers should be compelled to give part-time work connected with creative writing to certain chosen creative writers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(d) On the basis of a cultural exchange programme, Ceylonese writers should be given opportunities to go abroad to widen their experience.

## VIII Translations

The Sahitiya Mandalaya has so far not successfully implemented any programme designed to encourage writers. Many writers know from experience that the prize schemes it draw up were riddled with corruption. Besides the net result of its prize schemes was the growth of bitterness and hostility among writers. Therefore the Sahitiya Mandalaya should forthwith abandon its prize schemes. The money allocated for those prizes could be more usefully spent in other ways. It would be worthwhile translating Tamil creative works into Sinhalese and vice versa; the works should be chosen by an experts' panel. Such translations should be published by the publishers referred to in Section IV. This will enable Tamil readers to understand and appreciate the art and literature of the Sinhalese and vice versa. Moreover, this scheme will enable literary conniosseurs abroad to taste the flavour of Sinhalese Literature.

## IX The Teaching of Literature

The Tamil Literature syllabuses of the G.C.E. (O.L. & A. L) must be revised in such a way that



students can be made well acquainted with modern Ceylon Tamil literature. Modern creative works must be made text-books for study at the Universities; besides, when teaching history of Tamil literature, stress must be laid on the history of Ceylon Tamil literature. Only then will our people learn to respect and honour Tamil creative writers living in our midst.

## X Cheap Editions

It would be good if a scheme for the publication of cheap editions of Tamil works, is prepared. But it should be emphasised that in formulating such a scheme, increasing writers' income should also be borne in mind. Therefore, the Sahitiya Mandalaya itself should, backed by a government subsidy venture on the publication of cheap editions. The Mandalaya can also seek the help of the publishing houses mentioned in Section IV.

## XI The Development of Local Cinema

Government must pass legislation to ensure that theatres in Ceylon conform to the following scheme. One-third of the annual screen time of every theatre must be set apart for screening locally produced films. This will enable the Tamil-speaking people to become familiar with



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sinhalese cinema. Besides, theatres in Tamil-speaking areas will be compelled to screen locally produced Tamil films. This will help the development of Ceylon Tamil cinema which in turn will stimulate the growth of a distinctive Ceylon Tamil literature.

## XII The Role of Radio

We should not forget that radio is one of the media which can help greatly in the development of literature and the arts.

(a) Payment to radio artistes must be increased.

(b) A Board consisting of representatives of the Ceylon Broadcasting Corporation and the Committee of Experts referred to in Section I, should grade the artistes.

(c) A system of half payments for re-broadcasts should be introduced.

(d) Quality Tamil programmes should be translated into Sinhalese and broadcast, and vice versa. A separate Section can be established for this in the Broadcasting Corporation. If the scheme of translation



suggested here is introduced, the author of the original programme should be given half payment.

(e) Publications referred to in Section IV should be reviewed extensively over the radio: adequate time should be reserved for this.

(f) Arrangements must be made for advertising the literary magazines referred to in Section III, over the Commercial Service, at concession rates.

(g) It would be good if once in 3 months there is a critical stock-taking of Ceylonese creative literature, over the radio. This will prove a convenient way of introducing good works to the **rasika**.

## XIII New Stirrings

A living language is flexible enough to grow and adapt itself to new needs. The growth of journalism emphasises this flexibility. Though Tamil has, over the last few centuries, borrowed Sanskrit letters, it has not been destroyed in the process. It would be pedantic now to try to exorcize these letters from our language. At present most scientific works are translations. A flexible language is needed for such translations. It is with this kind of consciousness that literary men should set out their tasks.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XIV Wanted - An Inquiry

An immediate inquiry should be held into the publication in India of works by Ceylonese writers after 1956. Was money sent from here for their publication? How was it sent? Is royalty being paid for these works published there? How is that money being expended? An inquiry should provide the answers to these questions. This way it will be possible to detect the anti-national acts being committed in the name of literature. If any Ceylonese writer is found guilty of committing such anti-national acts, he should be stripped of any honours and privileges he is now enjoying. Moreover it should be proclaimed that he is unworthy of enjoying any privileges and concessions granted by the Government for service to the cause of literature.

## XV Two-Way Traffic

When the suggestions made in the preceding sections are implemented, South Indian magazines can no longer adversely affect local writers and literary magazines. Consequently all the arguments put forward against the import of Indian magazines, except the economic argument, will lose their force. No one will oppose the import of South Indian magazines, when they can havh no adverse effect. Everyone will welcome Ceylon Tamil enjoying equal status in the Commenwealte of World Tamil. This is the easiest and bes, way of ensuring Ceylon Tamil literature its due



place in the Empire of World Literature. Besides, to ensure a two-way cultural traffic, it is essential to allow South Indian magazines to be imported.

## XVI The State Take-Over of Imports

The corruption and malpractices associated with the imports of South Indian magazines, must be eradicated. This economic problem should be viewed from a patriotic angle, quite apart from any literary likes and dislikes. Under no circumstances, should permission be given to the private sector to import and distribute newspapers and magazines. Our conviction that this step will help to eradicate corruption and malpractices is inextricably bound up with our trust in the integrity and administrative efficiency of the Government. The C. W. E. can be entrusted with the responsibility of importing Indian magazines and books. The Cooperative Movement's distribution outlets can be used to ensure that even a reader in a remote village is able to obtain South Indian magazines. If we look closely, we will realise that this system will belp to bring about a critically discriminating reading habit.

## XVII Making Preparation

The C. W. E. should take upon itself the responsibility of importing books and magazines only after six months of preparation. Readers must be encouraged to submit a list of magazines and newspapers they wish to read and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have their names registered at the nearest cooperative. The problem can be made easier if South Ind'an magazines give publicity to the new arrangement. The lists which have been submitted can be analysed and statistics of how many copies of a magazine should be imported can be directly collected.

## XVIII The Cooperation of the Indian Government

There is a State Trading Corporation in India. The export and import of all items except magazines and books is under its control. The Indian Government should be persuaded to bring the import and export of books and magazines under the control of the State Trading corporation of India. This will bring about a situation where in both countries the import and export of books will be in the hands of State Organisations; consequently literary and artistic problems that may crop up between the two countries can be easily solved.

## XIX Private Book-Stalls

Privately Owned bookstalls in the country will be forced to sell only locally produced books and magazines. All this time local publications were treated as 'untouchables' by them. The new arrangement will engender in them a keen desire to increase the sales of local pnblications.



## XX The Export of Local Publications

Out of the total value of publications annually imported by the C. W. E. through State Ttading Corporation of India, only 80 per cent should be paid for in Indian currency. Local publications equivalent to the value of the balance 20 per-cent should be exported to India on a barter basis. The literary magazines referred to in Section III and the books referred to in Section IV should be given first preference in the matter of exports. In this connection, the advice of the committee of Exports referred to in Section I and the Federation of Literary Men referred to in Section XXV should be sought. This arrangement will ensure a two-way cultural traffic and a bigger market for Ceylon Tamil Publications.

## XXI Postal Concessions

Books and magazines have been exempted from FEEC's in the 1970 Budget. This is a very welcome step. But the simultaneous rise in book-post rates hinders the free flow of literature. This have severely curtailed the circulation of local literature. The Government should immediately revise the new book-post rates. Further, the Government should consider introducing a system whereby the organisations referred to in Sections III and IV would pay a nominal sum and be entitled to use special stamps. This will not result in appreciable loss of revenue to the Government. It should be emphatically borne in mind that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

whatever the loss, will be more than amply compensated for by the growth of local literature and the arts.

## XXII The Development of Printing

The printing of books and magazines has become a fine art. Raising local printing standards to that they compare favourably with those prevailing in advanced countries is, viewed from one angle, a service to literature. Therefore, the magazine publishers referred to in Section III and the book publishers referred to in S-ction IV should band them selves together on a cooperative basis and set up, with Government assistance, a 'Printers' Press'. This Press should be responsible for importing and freely distributing only to those printers referred to in Sections III and IV, quality paper, covers suitable for colour printing, printing ink and other materials necessary for the development of printing. Moreover, this press should aid its less affluent constituent members by executing on their behalf difficult Printing work at cost price.

## XXIII The Role of Artists

The designing of books and magazines should be improved. The skills of local artists should be harnessed for this task. This will ensure the rapid development of local art, and swell the incomes of local artists. The Government, in collaboration with foreign embassies, should formulate a scheme of scholarships whereby printer - publishers and



artists who design books, can go abroad to widen their experience.

## XXIV The Functions of the Committee of Experts

The Committee of Experts referred to at the end of Section I can be assigned the following functions:

(a) It can call the attention of the Government to local and foreign publications which publish news and features tending to promote racial and religious hatred and spotlight rape, murder and theft. The committee can make recommendations to the Government about the action that should be taken against these publications.

(b) It can recommend the names of writers who should be granted the privilages referred to in Section VII.

(c) It can recommend the creative works which should be translated into Sinhala by the Sahitiya Mandalaya, as suggested in Section VIII.

(d) It can help to successfully implement the suggestions made in Section IX, by recommending literary works.

(e) It can recommend the works which should be brought out in Cheap Editions as suggested in Section X.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(f) It can choose the representatives to serve on the Broadcasting Corporation's Grading Panel, as suggested in Section XII.

(g) In India the costs of production of books and magazines are low. Therefore it is desirable that the Ceylon price of South Indian publications be fixed here. (The contribution to modern creative literature, the encouragement given to Ceylonese writers etc. are factors that should be borne in mind when determining prices.) This will lead to an increase in the revenue derived from the book import-export trade. The Committee of Experts can recommend the Ceylon prices that should be fixed for Indian publications.

## XXV Federation of Literary Men

Publishers of literary magazines, publishers of literary works and books serving the cause of literature, creative writers and artists who design books and magazines, should transcend party politics, and organise themselves into a strong Federation whose object will be to stimulate the growth of a Ceylonese Literature. This Federation can offer suggestions about the steps that should be taken to meet any problems that crop up from time to time. This will be a sure guarantee of progress.

*

இரண்டு
ஆண்டுகள்
ஊறுகாய்
போடப்பட்டிருந்த
இந்நூலுக்கு

31-10-72 இல்
இளம்பிறை
**எம். ஏ. ரஹ்மான்**
எழுதிய

**திருக்கடைக் காப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடு: 28

திருக்கடைக் காப்புடன் இணைந்த

முதற் பதிப்பு: 31, ஒக்டோபர், 1972

**THIRUKKADAIK KAPPU**

**Written**

**by**

*Ilampirai* **M. A. Rahman**

**as a**

**Supplement**

**to**

# ESPO ARIKKAI

# திருக்கடைக் காப்பு

எஸ். பொ. அறிக்கை — அறுபது பக்கங்களிலே விரியும் முன்னீடு தவிர்ந்த அறிக்கை—சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அமைச்சர் மாண்புமிகு செ. குமாரசூரியர் தலைமையில் ஹோட்டல் சமுத்ராவில் நடைபெற்ற விழாவிலே அரங்கேற்றப்பட்டது. அதற்கு அடுத்த நாள் முன்னீடுடன் இணைந்த நூல்களை 'பைண்ட்' செய்து விற்பனை விநியோகத்திற்கு அனுப்பும் அலுவல்களை மேற்கொள்ளுமாறு என்னுடைய அச்சக ஊழியர்களைப் பணித்தேன்.

அருகில் நின்ற எஸ். பொ., 'ஏன் இவ்வளவு அவசரம்? என்னையும் என் அறிக்கையையும் சிறிது காலத்திற்கு ஊறுகாய் போட்டு வைப்பது சேமம்,' என்றார்.

அரசு வெளியீடுவின் நூற் பிரசுரம் பொருளாதார ரீதியில் ஆதாயமானதல்ல. இலக்கிய நலனை நோக்காகவும், இலக்கியச் சத்தியத்தையும் தன்னம்பிக்கையையும் மூலதனமாகவும் கொண்டு அது நிறுவப்பட்டது. ஆனாலும், மூலதனம் இன்றி வியாபாரம் நடத்த முடியாதல்லவா? நூல்களைத் துரிதமாக விற்பனைக்கு விநியோகஞ் செய்வதின் மூலம், முடக்கப்பட்ட மூலதனத்தின் ஒரு சிறு பகுதியை மீட்டுக் கொள்ளுதல் சாத்தியம். இலக்கியத்தைத் தவிர்த்த பிற துறைகளைப் பற்றிச் சிந்திப்பதற்குத் தமது மூளையை அதிகம் கசக்கிக் கொள்ளாத எஸ் பொ. வுக்குக்கூட இந்த உண்மை தெரியும். முன்னீடுடன் கூடிய இந்நூல் விற்பனைக்கு வந்தாற்றான் அவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய கருத்துக்கள் மக்கள் மத்தியிலே செலாவணியாகும். தன்னுடைய கருத்துக்கள் மக்கள் மத்தியிலே பரம்புவதையே எந்த எழுத்தாளனும் விரும்புவான். அப்படி இருந்தும் எஸ். பொ. ஊறுகாய் விவகாரத்தை நுழைத்ததும் எனக்குச் சுருதி பேதமாகத் தோன்றியது. தம்முடைய தளத்தினை நீண்ட விளக்கங்களுடன் நிறுவினார். இந்நூல் உங்கள் கையிலே கிடைக்கும் இத்தறுவாயில் அந்த விளக்கங்கள் தேவையற்றது என்பதை உன்னித் தவிர்க்கின்றேன்.

இந்நூல் ஊறுகாய் போடப்பட்டது. ஆயினும், 69 ஆம் பக்கம் தொடங்கி, 86ஆம் பக்கத்துடன் முடிவடையும் அறிக்கை மாண்புமிகு செ. குமாரசூரியர் தலைமையிலே கூடிய சபையினருக்கு விநியோகிக்கப்பட்டது. அஃது இளம்பிறையிலே பிரசுரிக்கப்பட்டதின் மூலம் இலக்கியச் சுவைஞருள் ஒரு பகுதியினரையுஞ் சென்றடைந்தது. இருப்பினும், சிரத்தையிலே ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையிலே அது முன் வைக்கப்படவில்லை.

இப்பொழுதுதான் ஊறுகாய் போட்டு வைக்கப்பட்ட இந்நூல், இத் திருக்கடைக் காப்புடன் வெளிவருகின்றது. திருக்கடைக் காப்பினை எழுதுவதற்காக இந்நூலை எழுத்தெண்ணிப் படிக்க நேர்ந்தது.

இன்று அதிகாரத்திலுள்ள ஆட்சியின் அமைப்பினை ஆய்ந்து, எதிர்காலப் பாதிப்புகளை நினைவில் இருத்தி, நிதானமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி எஸ். பொ. ஆற்றுப்படுத்தினார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அவர் இந்த நூலுக்கான முன்னீட்டினை எழுதும் பொழுதே சேகுவேரா இயக்கத்தைப்பற்றியும் எச்சரிக்கை செய்தார். அவர் எச்



சரித்த ஆறு மாதங்களுக்கிடையிலேயே சேகுவேரா இயக்கத்தினர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கிளர்ச்சி செய்தனர். இதனை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கின்றது. மூக்கு நுனி மட்டும் சிந்திப்பவர்களாலே தீர்க்கதரிசனமான திட்டங்களைத் தயாரிக்கவோ, செயற்படுத்தவோ இயலாது. ஊறுகாய்க்கு அவசரமும் இல்லை. தன்னலமும் இல்லை. ஆக்கினையைத் தவமாக ஏற்றது. எனவே, அதன் மதிப்பும் உயர்ந்துள்ளது.

அமைச்சர் மாண்புமிகு குமாரசூரியரினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவினர், எஸ். பொ. அறிக்கையிலே காணப்படும் அம்சங்கள் சிலவற்றை வேறு வார்த்தைகளிலும், வகையிலும் மலினப்படுத்தித் தமது அறிக்கையிலே இணைத்துள்ளனர். அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை வெளிவந்து சுமார் இரண்டு ஆண்டுகளாகிவிட்ட போதிலும், ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சாதகமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அந்த அறிக்கையை வாசித்த பின்னர், 'அறிக்கை முலாம் பூசப்பட்ட பித்தளை. இலக்கியச் சத்தியத்துடன் வனையப்படவில்லை. கல்லறைச் சிந்தனைகளே விரவிக்கிடக்கின்றன,' என்று எஸ். பொ. அபிப்பிராயப்பட்டார். ஒரு வேளை எஸ். பொ. அவ்வறிக்கையின் செயற்கைத் தன்மையை மிகைப்படுத்திக் கூறியிருக்கலாம் என்று அப்பொழுது எண்ணினேன். ஆனால், இப்பொழுது ஈழத்துத் தமிழ்ச் சுவைஞனுக்கு விடிந்துள்ள அவலநிலையைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே வியாகூலம் நீடிக்கின்றது.

உள்ளூர்ச் சஞ்சிகைகள் சேமமுடன் வளர்வதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும் என்ற சத்திய உணர்வு மாண்புமிகு குமாரசூரியரிடம் இருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது குளிர்வினைத் தருகின்றது. அவர் சஞ்சிகையாளர் மகாநாட்டினைக் கூட்டினார். அவர்களுக்கு உதவும் வகையிலே ஓர் அமைப்பு நிறுவப்படுதல் வேண்டுமென்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அன்றைய மகாநாட்டிலே கலந்து கொண்ட கம்யூனிஸ்டுகளுடைய எண்ணிக்கை குறைவு. எனவே, அமைச்சருடைய வேண்டுகோளை நிராகரித்து, சஞ்சிகையாளருக்கான நிறுவனத்தைத் தோற்றுவிப்பதை இன்னொரு நாளுக்கு ஒத்திப்போடுவதிலே ஒரு சிலர் முனைப்புக் காட்டினார்கள். ஆனால் இளம்பிறை மாசிகையின் இணை ஆசிரியர் என்ற கோதாவிலே கலந்து கொண்ட எஸ். பொ. அமைச்சருடைய சிந்தனைத் தடத்தினைப் புரிந்துகொண்டு, 'சஞ்சிகையாளர் ஒன்றியம்' என்ற நிறுவனத்தைத் தோற்றுவிக்கும்படி பிரேரித்தார். பெயர்கூட அவர் சூட்டியதுதான். உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது. நான் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

ஒன்றியத்திற்குப் பெயர் சூட்டி, அதற்கு ஒரு யாப்புத் தயாரிப்பதிலே உதவியதுடன் எஸ். பொ. அதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். ஒரு சந்தர்ப்பத்திலே ஒன்றிய விவகாரங்களைப் பற்றிய கதை எழுந்த போது, ''பொருளாளரான நீங்கள் செயற்குழுக் கூட்டங்களிலே தூங்கிக் கொண்டா இருக்கின்றீர்கள்? சஞ்சிகை வெளியீட்டுடன் சம்பந்தமில்லாதவர் ஏன் செயற்குழு உறுப்பினராக்கப்பட்டனர்? சாதாரண அங்கத்துவ பதவிகூட இல்லாதவர்களுக்கு செயற்குழுவிலே இடம் அளிக்கலாமா? பொதுச்சபை புதிய செயற் குழு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தந்ததா? இது ஜனநாயக சம்பிரதாயங்களுக்குப் பிறழ்வானது. கம்யூனிஸ லேபலுடன் வலம் வருவோரு



டைய கை ஓங்கியிருக்கின்றது. இனி ஒன்றியம் உருப்பட்டது போலத்தான், இருந்து பாருங்கள். ஒன்றியத்தின் வரலாறு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தான் இருக்கும்'' என்று காரசாரமாகக் கூறினார். ஆனாலும், என் தளத்திலிருந்து நோக்குகையில் அவர்களுடைய ஆலோசனைகள் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு உதவும் என நம்பினேன்.

ஆனால், ஒன்றியம் துடிப்புடன் இயங்க வில்லை; உண்மையான சஞ்சிகையாளர் அதனைச் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றார்கள் என்ற நிதர்சனத்தை நினைத்து அதன் பொருளாளர் என்ற கோதாவில் மனசாரத் துக்கப்படுகின்றேன்.

தென்னிந்திய சஞ்சிகைகள் மீது கட்டுப்பாடு கொண்டு வருவது சம்பந்தமாகப் பல வகையான அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டன. இலக்கிய வளர்ச்சியிலே சினிமாவும் வானொலியும் கொண்டுள்ள பங்களிப்பினை முதன் முதலில் எஸ். பொ. அறிக்கையே பிரஸ்தாபித்தது. வானொலி மூலம் இலக்கிய விழிப்புக்கு வித்திடும் ஒரு சிறிய வாய்ப்பு எஸ். பொ. வுக்குக் கிடைத்தது. இலங்கை வானொலியின் கலைக்கோல நிகழ்ச்சிகள் சிலவற்றை நடத்தும்படி எஸ். பொ. கேட்டுக் கொள்ளப்பட்டார். மொத்தம் ஆறு நிகழ்ச்சிகளை நடத்தினார். அவருடைய நிகழ்ச்சிகளிலே புதிய குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. மலையக இலக்கிய ஆற்றல்களுக்கும், முஸ்லிம் எழுத்து முனைப்புகளுக்கும் அவர் கணிசமாக இடம் கொடுத்தார். கிழக்கு மாகாணத்துக் கலை - இலக்கிய முயற்சிகளையுஞ் சிரத்தையிற் கொண்டார். பெண் எழுத்தாளர்களையும் ஊக்குவித்தார். 'ரகு! என்னுடைய கலைக்கோல நிகழ்ச்சிகளிலே ஒருவருக்கு ஒரேயொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைதான் சந்தர்ப்பம் அளிப்பேன். அப்படியொரு கொள்கையை வகுத்துக் கொண்டாற்றான் எல்லோருக்கும் வாய்ப்பளிப்பது சாத்தியமாகும். புதிய ஆற்றல்களுக்குத் தாராளமாக இடம் கொடுக்க வேண்டும். கொள்கையிலே மாறுபட்டவர்களுடைய கருத்துக்களுக்கும் இடம் கொடுப்பேன். கருத்து மோதுதல்கள் சங்கையானது. அதன் மூலம் உண்மைத் தரிசனம் கிடைக்கும்,'' என்று எஸ். பொ. என்னிடங் கூறுவார். கலைக்கோல நிகழ்ச்சிகளிலே கருத்துக்கோலம் என்ற கனதியான இலக்கிய அம்சம் ஒன்றினை வகுத்தார். அப்பகுதியிலே சிவத்தம்பி உட்படப் பல கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களுடைய கருத்துக்களை ஒலிபரப்புவதற்கு வசதி செய்தார். ''கருத்துக் கோலத்திலே கருத்துத் தெரிவிக்கும்படி கைலாசபதியையுங் கேட்டேன். அவர் பங்கு பற்ற விரும்பவில்லை. படித்தவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் இப்படி ஒரு குறுகல் மனப்பான்மையுடன் சாம்பக் கூடாது,'' என்று எஸ். பொ. வருத்தப்பட்டார். அவர் கலைக்கோல நிகழ்ச்சிகளை, மிருந்த எல்லைக்கட்டுடைய சுயேச்சையுடன் நடத்திய போதிலும், இலக்கிய அரங்கிலே இலக்கிய சத்தியம் எவ்வாறு பேணப்படலாம் என்பதை வரையறுப்பது போல அவர் நிகழ்ச்சிகளை நடத்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் தகவல் - ஒலிபரப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் ஜனப் ஏ. எல். ஏ. மஜீத் இலக்கிய வளர்ச்சி கருதியும் சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட வேண்டும் என்பதிலே அக்கறை காட்டினார். அவர் என்னுடன் இது குறித்து உரையாடும் பொழுது, கலை - இலக்கிய நண்பர்கள் கூட்டத்திலே தினம் ஒரு கோலமாக, வானவில் போல, ஏழு இலக்கியக் கோலங்கள் ஒலிபரப்பப்படலாம் என்று



நான் பேசியதையும் குறிப்பிட்டேன். இவ்வாறு அமைச்சர் மஜீத் பல இலக்கிய அபிமானிகளுடன் வெகு அக்கறையாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார் எனப் பின்னர் அறியலானேன்.

பிரதி அமைச்சர் தமது 'மஜீத் திட்ட'த்தினை வெளியிட்டார். தற்போதைய கலைக்கோல நிகழ்ச்சிகள் வழக்கம்போல நடைபெறலாம் என்றும், திங்கள் தோறும் இலக்கிய அரங்கும், செவ்வாய் தோறும் மக்கள் அரங்கும், புதன் தோறும் நாடக அரங்கும், வியாழன் தோறும் கவிதை அரங்கும், வெள்ளி தோறும் கதை அரங்கும், சனிதோறும் எழுத்துலக ஒன்றிய அரங்கும் ஒலிபரப்பப்படுதல் வேண்டும் என்பதை மஜீத் திட்டம் பிரதான அம்ஸங்களாகக் கொண்டிருந்தது. மஜீத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான நேரமும் பணமும் ஒதுக்கப்பட்டது. அத்திட்டத்திற்கு இசைவாக, முதன் மூன்று மாதங்களுக்கான விரிவான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பொறுப்பு எஸ். பொ. விடம் அளிக்கப்பட்டது. அவர் பல நாள்களாகச் சிந்தித்து, பிரதி அமைச்சருடனும் வானொலி அதிகாரிகளுடனும் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தி, நிகழ்ச்சி நிரலினைத் தயாரித்தார். ஈழத்தின் சகல பிராந்தியங்களுக்கும், சகல பகுதியினருக்கும் சம சந்தர்ப்பம் அளித்து நிகழ்ச்சி நிரலை முழுமையாக்கினார். யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு - மலையகம் - மன்னார் ஆகிய பகுதிகளுக்கு நேரிலே சென்று ஒலிப்பதிவு செய்து வரவும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஏழு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்களையும் நேரில் அழைத்து, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைகளின் தலைவர் நிகழ்ச்சி நிரலை சம்பிரதாய பூர்வமாக கை அளித்து, அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து அவற்றைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மஜீத் திட்டம்' செயற்படும் தறுவாயிலே கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களுடைய ஆதிக்கம் ஓங்கிய ஆலோசனை சபை ஒன்று திடீரென அமைக்கப்பட்டது. இந்தச் சபை அமைக்கப்படுவதை மாண்புமிகு செ. குமாரசூரியர் சிபார்சு செய்ததாகப் பிரஸ்தாபம். அவருக்கும் வானொலி நிகழ்ச்சிகளைத் தரப்படுத்துவதிலே நியாயமான அக்கறை இருக்கின்றது. இலக்கிய வளர்ச்சி கருதி வகுக்கப்பட்ட மஜீத் திட்டத்தை நிராகரிப்பதற்கு, குமாரசூரியர் விரும்பியிருக்கமாட்டார். ஆனால், ஆலோசனைக் குழுவினர் எஸ்.பொ. தயாரித்த நிகழ்ச்சி நிரலிலே சில பகுதிகளை தங்கள் வருவாய்க்குச் சாதகமாகக் கல்லியெடுத்துக் கொண்டு மிகுதியைக் குப்பைத் தொட்டியிலே வீசிவிட்டார்கள். பொதுவான இலக்கியப் பணிகளிலே எல்லா அணியினரும் இணைந்து செயலாற்றுதல் வேண்டும் என்பதிலே எஸ்.பொ. மிகுந்த அக்கறை கொண்டவர். மாறாக, குறிப்பிட்ட ஒரு அணியினரின் வருவாயைப் பெருக்குவது மட்டும் ஆலோசனைக் குழுவின் நோக்கமாக இருக்கின்றது என ஊகிக்க இடமிருக்கிறது. இந்த நோக்கம் அமைச்சர் குமாரசூரியருக்கு இருக்க நியாயம் இல்லை என்பதை நான் சத்தியமாக நம்புகின்றேன். எஸ்.பொ. வின் எழுத்தாற்றலைக் கண்டு கைலாசபதியும் சிவத்தம்பியும் நடுங்குகின்றார்கள் என்பது எழுத்துலகின் வெகுநாளைய பிரஸ்தாபம். அவரவர் பயம் அவரவர் தர்மம். புதிய ஆலோசனைக் குழு எஸ். பொ. தயாரித்த நிகழ்ச்சி நிரலை நிராகரித்திருக்கலாம். ஆனால், மஜீத் திட்டத்தினை, தமக்குச் சாதகமாக அமையக்கூடிய நிகழ்ச்சி நிரல் ஒன்றினைத் தயாரித்துச் செயற்படுத்தி இருக்கலாம் அல்லவா? எஃது எவ்வாறிருப்பினும், மஜீத் திட்டம் இவ்வொறு தூக்கி எறியப்பட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்குச் சம்பவித்துள்ள பேரிழப்பாகும்.



இலக்கிய நலன் கருதி வகுக்கப்பட்ட திட்டத்தினை நிராகரித்த ஆலோசனைக் குழுவினர், மாற்றுத் திட்டம் ஒன்றினை வகுத்திருக்கலாம் அல்லவா? அப்படி எதுவும் இல்லை. வானொலி ஊழியர்கள் மத்தியிலும், வானொலி கேட்குநர் மத்தியிலும் பாரிய மனக்கசப்பினை வளர்க்கக்கூடிய சில அவசர நடவடிக்கைகளை எடுப்பதிலே மட்டுந்தான் ஆலோசனைச் சபை அக்கறை காட்டுவதாக பல பகுதியினரும் அபிப்பிராயந் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வானொலியில் அண்மைக் காலத்தில் நடத்தப்படும் 'கூத்து'களைப் பற்றி அதிகம் அதிகமாகக் கேள்விப்படும் பொழுது, கைலாசபதி சிவத்தம்பி போன்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களைப்பற்றி ஒரு தடவை எஸ். பொ. விமர்சனஞ் செய்ததுதான் என் ஞாபகத்தில் மிதக்கின்றது;

''இவர்களுடைய இலக்கியக் கொள்கை சுத்த சுயம்புவான தொப்பைக் கொள்கைதான். கற்பனை வளமும், ஆக்க இலக்கிய ஆற்றலும் இல்லாதபடியால், கல்லறைத் தத்துவங்களை வைத்து மாரடிக்க வேண்டியிருக்கிறது. வகுப்பறையிலே அறிமுகமாகும் விரிவுரைகள் சஞ்சிகைக் கட்டுரைகளாகவும், வானொலிப் பேச்சுகளாகவும், ஈற்றில் நூல்களாகவும் எல்லாம் ரப்பர் இழுக்கும் வியாபாரந்தான். 'மக்களிடத்தில் கலாசாரம் - கல்வி - சமுதாய உணர்வு ஆகிய மட்டங்களிலே உயர்வு நாடி முன்னேறுத கம்யூனிஸத்தை நம்மாற் கற்பனை செய்து பார்க்க முடியாததாக இருக்கின்றது. பொருளியல் தொழில்நுட்ப அடிப்படைகளை நிராகரித்துக் கம்யூனிஸத்தை நினைத்துப் பார்க்க முடியாதது போன்றதுதான் இதுவும். இலக்கியமே சமுதாயத்தின் விழிகள். எனவே, விஞ்

ஞான - தொழில் நுட்பப் புரட்சிகளினால் ஏற்படும் மாறுதல்களைத் தற்கால சோவியத் இலக்கியம் மிக நுணுக்கமாகப் பிரதிபலிக்கின்றது. ஆற்றல் இலக்கியங்களிலும், இலக்கிய விமர்சனத்திலும் இவை பிரதிபலிக்கப்படுகின்றன.' சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 ஆம் காங்கிரஸுக்குப் பின்னர் சோவியத் நாட்டின் இலக்கியக் கோலம் இவ்வாறு அமைந்துள்ளது. குருசேவ் புகுத்திய தாராள மனப்பாங்கிற்குப் பின்னர், சோவியத் இலக்கியத்திலே புதிய கோலம் முகிழ்ந்து வருகின்றது. இவற்றை எல்லாம் விளங்கிக் கொள்ளாது, 'ஸாகிரா மகாநாடு! ஸாகிரா மகாநாடு!' என்று பிலாக்கணம் வைப்பவர்களிடம் சிந்தனைத் தெளிவையோ, இலக்கிய நாணயத்தையோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? முந்திய தலைமுறையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் பாரதிக்கு முற்பட்ட பாவலர்களை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்தினார்கள். இவர்கள், பாரதிக்குப் பிற்பட்ட இலக்கியத்தை வைத்துக்கொண்டு கடை நடத்துகின்றார்கள். இவர்களும் ஒரு வகையான பண்டிதர்களே. உயிர்ப்புள்ள மார்க்ஸிஸப் பார்வையை விடுத்து, கல்லறைத் தத்துவங்களையும் பழைமையையும் பாதுகாக்கும் அவதியிலே, புதிய வளர்ச்சிகளுக்குக் குறுக்கே படுத்துக்கிடப்பதை இவர்கள் உணருகிறார்களில்லை. தங்களுடைய பிழைப்புச் சாசுவதமானது என்ற சுகக் கனவிலே இவர்கள் ஈடுபட்டிருப்பதுதான் பேதமை. வளர்ந்து வரும் நாளைய சமுதாயம் இவர்கள் இயற்றும் இலக்கியப் புரட்டுகளை மன்னிக்க மாட்டாது. அவர்களைச் சாட வேண்டும் என்பதற்காக நான் இதைக் கூறவில்லை. இவர்களுக்கு இலக்கிய வாழ்வு இல்லை என்பதை இவர்களே உணர்வார்கள். ஆனால், இவர்கள் இயற்றிய இலக்கியப் பாதகங்களைப் பற்றிய குறிப்புகள் நாளைய தலைமுறைக்குக் கிடைத்தல் அவசியம்' என்று எஸ். பொ. கூறினார் அந்த



அவசியத்தை உணர்ந்தே இவற்றைத் திருக்கடைக் காப்பு என்ற இந்தப் பகுதியிலே குறிப்பிட நேருகின்றது.

கைலாசபதி - சிவத்தம்பி ஆகியோருடைய கூட்டாட்சி இலங்கை வானொலியிலே கொடியுயர்த்திச் சுமார் ஒரு மாதமாகின்றது. புதிய வானொலி மாற்றங்கள் பற்றி அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திய அபிப்பிராய நறுக்குகளின் சில சாம்பிள்கள். இவை என் செவிகளிலே விழுந்த கோலத்திலே தரப்படுகின்றன.

'கலைக்கோல நிகழ்ச்சி செய்வதிலிருந்து எஸ். பொவுக்குக் கல்தா! முழுக் கலைக்கோல நிகழ்ச்சிகளையும் இனி ஒருவரே செய்வார். அவர்தான் கைலாசபதி!'

'பேஷ், பேஷ்! கைலாசபதி நிகழ்த்திய முதலாவது கலைக்கோல நிகழ்ச்சியிலே சிவத்தம்பி கலந்து சிறப்பித்தார்!'

'பாவம் அரைச்சமாவை அரைக்கத் துவங்கீட்டார்!'

'இந்த அநியாயத்தைக் கேளுங்கோ. நான் வானொலி ஊழியன். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியைத் தயாரிப்பவன் நான். சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்பவன் நான். வந்து 'கொம்பயர்' பண்ணுவதற்கு ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு ஒரு நிகழ்ச்சிக்கு நூறு ரூபாய். மாதத்திற்கு நானூறு ஐநூறு அவருக்கு! என்னுடைய சம்பளத்தைக் கேட்டால் அழுவீர்கள்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான் திறமைக்கும் தகுதிக்கும் மதிப்பளித்து நிகழ்ச்சிகளைத் தயாரித்தேன். என்னைத் தூக்கி நிருவாகப் பகுதிக்கு எறிந்திருக்கிறார்கள்!'

'புதிய ஆலோசனை சபை பெண் குரலை வெறுக்கின்றது. இல்லையென்றால், சற்சொருபவதியைக் கல்விச் சேவைக்கு அனுப்ப வேண்டிய நியாயம் என்ன?'

'பொன்மணியின் ஆதிக்கக்கொடி இறக்கப்பட்டது. வாழ்க சிவத்தம்பி!'

'சில்வஸ்ரர் வீழ்ந்தார்; ராஜா உயர்ந்தார்!'

'மாஷ்டர்! இந்நாட்டின் தலை சிறந்த நாடக ஆசிரியர் நீரும் நானுமல்ல. அது முருகையன் தானும். இந்த வானொலியிலேயே தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லையாம். எனவே, நாடகப் பிரதிகளைச் செப்பப் படுத்தும் கொந்துருத்து முருகையனுக்கு! நாடகம் இனிக் கிசு கிசு எண்டு வளரும்!'

'முருகையன் ஒரு நல்ல பிஸினஸ்காரன், தன் சொந்த நாடகப் பிரதிகளை நுழைத்தும், தன் தம்பியின் நாடகப் பிரதிகளை நுழைத்தும், தன் சொந்த நாடகத்தில் தம்பிக்கு நடிக்கும் சந்தர்ப்பம் அருளியும் அமோக யாவாரம் நடத்துறார்!'

'இப்ப அவர் கவிஞரல்ல; நாடக வித்தகர்!'

'இண்டைக்கு சிவத்தம்பி ஃபோன் பண்ணி ஸ்கிறிப்ட் பின்னேரம் அனுப்புறாராம், நாளைக்கு விசேட நிகழ்ச்சி ரெக்கோட் பண்ணவேணுமாம். 'செடூல்' பண்ணாத நிகழ்ச்சி.........'



'சிவத்தம்பி சொன்னால் அது ஓடர் தானே? எப்பவாம் ஒலிபரப்பவேணும்?'

'இரண்டு கிழமை இருக்கு. ஆனால், நாளை மறுநாள் அவர் யாழ்ப்பாணம் போகின்றாராம்!'

'அவர் சொல்ற போல செய்யும்.'

'பெற் பிடியும். நாடகத் தயாரிப்பாளராக சுந்தரலிங்கம் நியமிக்கப்படுவார்.'

'நானும் ஒரு பெற். பேச்சுப் பகுதிக்கு ஸ்ரீபதி நியமிக்கப்படுவார்.'

அரசியலிலும் தொழில் துறையிலுந்தான் EMPIRE BUILDING என்பார்கள். இலக்கியத்திலும் அப்படியா?

'சீன சார்பு கம்யூனிஸத்தின் பெயரால் இவர்கள் செய்யும் திருக் கூத்துகளைக் கேட்டால் மா ஸே துங் நாக்கைப் பிடுங்கி எறிவார்!'

இப்படி எத்தனையோ தடல் புடல்களும், கெடுபிடிகளும்!

ஆனால், வானொலி நிகழ்ச்சிகளின் தரம் உயர்ந்திருக்கின்றதா?

'குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக......' என்றுதான் அடிக்கடி இலங்கை வானொலி அலறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி நிகழ்ச்சிகளின் தரம் உயரவில்லை; அதன் தரம் தாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பது சாதாரண நேயர்களுடைய அபிப்பிராயம். ஆலோசனை சபை தன்னை அதிகார சபையாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது, செவ்விகாண் சபைகளிலும் அவர்களே குந்தியுள்ளார்கள். வானொலி ஊழியர்கள் மத்தியிலும், சாதாரண நேயர்கள் மத்தியிலும் வீணான விரக்தியும் கசப்புமே பயிரிடப்படுகின்றன.

'இத்தகைய ஒரு நேர்மையற்ற - இலக்கிய நலனுக்கோ அரசின் அரசியல் ஆதாயத்திற்கோ பாதகமான - கெடுபிடிகள் நடத்தப்படுவதற்கு அமைச்சர் குமாரசூரியரும், பிரதி அமைச்சர் மஜீதும் எத்தனை காலத்திற்கு மௌனச் சாட்சிகளாக அமர்ந்திருக்கப் போகின்றார்கள்?' என்று தேசாபிமானம் மிகுந்தவர்கள் கேட்க ஆரம்பித்துள்ளார்கள். இந்த அவல நிலையை எவ்வாறு செப்பமிடுதல் சாலும்?

எஸ். பொ. எந்த விஷயத்திலும் பிற்கதவு வழியை நாடாதவர். குழி தோண்டும் பழக்கத்திற்கு மசியாதவர். 'பிட்டிஷ்' எழுத்துக் கலை பயிலாதவர். அதே சமயம், 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' என்று தன் முதுகைக் காப்பாற்றிக் கொண்டாற் போதும் என ஒதுங்கிக் கொள்ளும் கோழையுமல்லர். தனக்குச் சரியெனத் தோன்றுவதை முகத்துக்கு நேராகப் பேசுவதும் எழுதுவதும் அவர் சுபாவம். இலக்கிய சத்தியத்திலே எஸ். பொ. கொண்டிருக்கும் கட்டித்த பக்தியினால், அவர் பலவிதமான வழிகளிலேயும் பொருளாதாரப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார். பல சிரமச் சிலுவைகளைச் சுமக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்.



இருப்பினும், அவர் பிறவிப் போராளி. சத்தியம் வெல்லும் என்ற நம்பிக்கையிலே அழுங்குப் பிடியர். இந்த நம்பிக்கையை எஸ். பொ. அறிக்கை தொனிக்கின்றது. கலை - இலக்கியத் துறையிலே ஈழத்தமிழ் எழுச்சி பெறவேண்டுமாயின் எஸ். பொ. அறிக்கை செயற்படுத்தப்படுதல் வேண்டும். தம்முடைய சிந்தனைகளை வலோற்காரமாகத் திணிக்காது இருப்பதற்காகத்தான் இதனை ஊறுகாய் போட்டு வைக்கும்படி கூறினாரோ என்று இப்பொழுது நினைக்கவுந் தோன்றுகின்றது.

'என் நூலை வெளியிடுங்கள். ஆனால், இதன் உடனடிப் பாதிப்பு என்ன என்பது எனக்குத் தெரியும். இந்தக் கருத்து முரண்பாடுகளை சொந்தக் குரோதமாக எடுத்துத் நமது மூளையைக் கைலாசபதி கசக்குவாரானால், பாட விதான அபிவிருத்தி நிலையத்திலிருந்து என்னை விரட்டுவதிலே முழுமூச்சாக பாடுபடக்கூடும். அதனால் எனக்கு நஷ்டமில்லை. வருங்காலச் சந்ததியின் உயர்ச்சிக்கு என் சிறிய சேவை பயன்படாது போகலாம். பாதகமில்லை. கைலாசபதியும் சிவத்தம்பியும் நடத்தும் இலக்கியச் சர்வாதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்புதல் உடனடித் தர்மம். ஒரு சமுதாயம் உய்வதற்காக என் சொற்ப ஆற்றலுக்கேற்ப ஓர் அறிக்கையைத் தயாரித்துள்ளேன். இப்பொழுது நிலவும் அவல நிலையைப் போக்குவதற்கு, இந்நூல் ஓர் அருட்டுணர்வாக அமைந்தாலே போதும், என்று எஸ். பொ. கூறினார்.

இந்நூல் உங்களுக்கு முன்னால் வைக்கப்படுகின்றது. இதிலே கூறப்பட்டுள்ள ஆலோசனையைச் செயற்படுத்துதல் சங்கையானது என்பதற்கு நான் வழக்குரைக்கத் தேவையில்லை. எனவே, இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமுள்ள எழுத்தாளரும், சுவைஞரும் மட்டுமல்லாமல், தேசாபிமானமுள்ளவர்களும் இப்பணியை இயற்ற முன்வருதல் வேண்டும். இந்த வேண்டுதலை இறை நம்பிக்கையுடனும், இதய சுத்தியுடனும் உங்கள் முன் வைக்கின்றேன்.

இத் திருக்கடைக் காப்பினை உண்மையில் இந் நூலுக்கு ஒரு பின்னிணைப்பாகவே வகுத்துள்ளேன். எஸ். பொ. அறிக்கை சுருக்கமானது; தெளிவானது. அதற்கு வியாக்கியானம் தேவையில்லை. எஸ். பொ. அறிக்கை வெளியானதற்கும் இற்றைக்குமிடையில் முகிழ்ந்துள்ள இலக்கியப் போக்குகளைச் சுவைஞர் அறிதல் வேண்டும் என்ற சிரத்தையுடன் இதனை எழுதினேன்.

**எம். ஏ. ரஹ்மான்,**
அமைப்பு நிர்வாகி
இளம்பிறை இலக்கிய வட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org